ஆனந்த போதினி

தொகுதி - 20 பகுதி - ௫

16 NOV 1934

JL
211, N15AB
N34·20'5
187524

ஜாதகாம்ருத பலவிமர்சம என்னும்

சோதிட கணிதாம்ருத சாகரம்

கற்கக் கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற மூதுரை வாக்கியப்படி எவ்விதக் கல்வியாயினும் குற்றமறக் கற்றுத் தெளிவதே நம்மோர் கடமையாகும். அதுபற்றியே வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாகிய, சோதிட சாஸ்திரமானது நம்மவர் எளிதிலறியும் வண்ணம் ஆரம்பசோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் துர்பிக்ஷகாலமுண்டாகும் விபரம், சர்வதேச அக்ஷாம்சம் செய்யும் முறை, சாஸ்திர உபயாதிகள். வர்கோத்தமம். தசவர்க்கம் பிரிக்குமடைவு வக்கிர. ரிஜு அஸ்தமயமறிதல். துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை, கேந்திர திரிகோணதிஸ்தானங்கள், பார்வைஸ்தான பலம், திரிகாண சக்கிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காய்வேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவகஸ்புடம், கிரகங்களில் ஆக்ஷி, உச்சநட்பு நீச்சம்பகை முதலியபலம்; மண்டல சமயசார பருவம், மனையைஅளந்து ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடபாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடிபும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம், கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திரபாவம்; ரோக பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாப விரய முதலியவைகளும்; ருதுகால பலாபலன்களை விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளாபவருடன் சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையினுலெழுத்துக் காட்டும் புராதன கணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேக நிவர்த்தியாக, போதுமான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருதபலவிமர்சம் என்னும் ஜாதககணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உலக பரோபகாரமாக குறைந்தவிலையில் தயார் செய்திருக்கிறோம். இந்நூலிலேயுள்ள விஷயங்கள் பெரும்பாலும் சாஸ்திர சம்பந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யவும் உள்ளபடி உண்மைப் பலன் சொல்லவும் ஏதுவாகும். சோதிடர்கள் பொதுவாய் ஜனன கால லக்ஷணங்களை சந்தேகமின்றி எடுத்துச்காட்டவும் யோகாவயோகங்களும் அவையுண்டாகுங் காலங்களும் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர் இப்புத்தகத்தைக் கொண்டே கணிதம் செய்யத்தக்க எளியநடையிலெழுதியுள்ளதாகையால் இப்புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதேனுமையமில்லை.

இப்புத்தகத்தி லடங்கிய விஷயங்கள்.

1. நட்சத்திர விவரணம்.
2. [illegible] நக்ஷத்திரங்கள்.
[illegible] ன்.
[illegible] திகள்.
[illegible] [வம்.
[illegible] மித்திரத்
9. தாத்கால சத்துருமித்திரத்துவம்.
10. காரகத்துவம்.
11. சுப, பாபிகள்.
12. கேந்திர திரிகோணதிஸ்தானங்கள்.
13. ஆட்சி, உச்சாதிகள்.
14. [illegible] கிரகஸங்கியை.
15. [illegible] பாபி.
16. பார்வை.

17. ஸ்தான பாவங்கள்.
18. பாவ ஸ்தானங்கள்.
19. வக்கிராதி.
20. பலன்கள்.
21. சாத்வீகாதி காலங்கள்.
22. நவாம்ச சக்கிர நிர்ணயம்.
23. அந்திய நவாம்ச இராசிகள்.
24. வர்க்கோத்தமம்.
25. திரேகாண சக்கிர நிர்ணயம்.
26. ஹோரா சக்கிர நிர்ணயம்.
27. திம்சாம்ச சக்கிர நிர்ணயம்.
28. த்வாதசாம்ச சக்கிர நிர்ணயம்.
29. குளிகைகால ஸ்தான நிர்ணயம்.
30. லக்கின நிச்சயம்.
31. ஸ்திரி புருஷ லட்சணம்.
32. கால ஹோரை.
33. ஜன்ம கால லட்சணம்.
34. த்விக்கிரக யோகம்.
35. திரிக்கிரக யோகம்.
36. குசகாதி யோகங்கள்.
37. ஸங்கியா யோகங்கள்.
38. தரித்திராதி யோகங்கள்.
39. ஆசிரிய யோகங்கள்.
40. விசேஷ யோகங்கள்.
41. ஊமை.
42. அந்தகத்துவம்.
43. பதிதபாவம்.
44. புஷ்டியம்சம்.
45. ஸ்திரி ஜாதகம்.
46. ஸ்திரி நடக்கை.
47. களத்திர பாவம்.
48. புத்திர பாவம்.
49. அபுத்திர பாவம்.
50. சுவீகாரம்.
51. வியாதி.
52. பாலாரிஷ்டம்.
53. அற்பாயுர்பாவம்.
54. மத்தியாயுர்பாவம்.
55. தீர்க்காயுர் பாவம்.
56. நிர்யாண விஷயம்.
57. மாரகம் கொடுப்பவர்கள்.
58. தசைகள்.
59. நட்சத்திர தசை.
60. அதன் புக்த்தியாதிகள்.
61. ஷூமாசாதிகள்.
62. நடசத்திர தசைகளின் புத்தி காலங்கள்.
63. சக்கர தசைகள்.
64. சக்கரதசா காலங்களும் நாட்டும்.
65. சக்கர புத்திகள்.
66. தசாபலன்களின் விதிகள்.
67. தசாபலன்.
68. கோசரம்.
69. அஷ்வர்க்க சந்திரபிந்து.
70. கோசர பலம்.
71. அந்தபலன் தரும் சமயம்.
72. கோசர வேதை.
73. அஷ்ட வர்க்கம்.
74. அதன் விதிகள்.
75. கண்டதிரிய விவரம். [ரம்.
76. விவாக பொருத்தங்களின் விவ
77. பொருத்தங்களின் லட்சணம்.
78. விவாகத்திற்கு தோஷங்கள்.
79. முகூர்த்தங்கள்,

இதன் விலை ரூபா 1—8—0

ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9 கிரகங்களை 12 இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவை களைக கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 7 கிரகங்கள் ஒன்றாகக் கூடி யிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறியிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்ல வும் இதனால் தெரிந்துகொள்ளலாம். இதன் விலை அணா 8.

ஆனந்தபோதி[illegible] பால்பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல்! **புதிய நாவல்**

கிருஷ்ணஸிங்

அல்லது

துப்பறியும் சீடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமார்த்தியங்களும், வீரதீரச் செயல்களும், உலகில் பல பறுமோசப் படுகுழியிலிருந்து தப்புவதற்கான புத்தி மதிகளும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கிணங்க நீதிமதியோடு கூடிய பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய போதனைகளும் அடங்கியது.

இதன் விலை அணா 14.

அம்பாலிகை

அல்லது

அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கறுப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம் புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சி செய்து, ஏற்கனவே அவளுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனுமான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ராஜாங்க சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தஸிங் உண்மையான குற்றவாளியை அதாவது கறுப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம் செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கறுப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தசிங் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கன்னிகையை மணஞ் செய்துகொண்டு மேலும் பிரக்யாதி அடைவதும் படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நே. 167, மதராஸ்.

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

நாலடியார் மூலமும்

விரிவான உரையும்.

செம்பூர் வித்வான்-வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல், மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப் பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகப் பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன் தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந் நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரை யொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந் நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற் கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோத மாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளை வித்துக்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல் களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் [illegible]

க்கப்பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்கள், இந் நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந் நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந் நூல் மூலச் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாலடியில் சில பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில் காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டு [illegible] கருள் ளதாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் [illegible]ங்கிப் படிக்கத் தக்கது.

இதன் விலை ரூபா 2—8—0.

நாகரீகம்?

இரண்டாம் பதிப்பு.

சே. இராஜா-ப செட்டியார், எம்.பி. பி.ஜ., அவர்கள் இயற்றியவை

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் சீர்கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகி வரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இந்நாவல் வரையப் பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியர் எல்லோரும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்று அரும் பெரும் நீதி நுட்பங்க பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் ஊழல்களும், ஆப்தமித்ரனின் அருங்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அத்தாட்சிகளோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து நற்பயனடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

பாஸீலா-Paseela (இந்திய ஔஷதம்)

உலகத்திற்கெல்லாம் நன்மை செய்யக்கூடிய இந்திய வெகுமதி இதுவே. உடம்பின்மேல் உபயோகிக்கக்கூடியது உள்ளுக்கு சாப்பிடக்கூடாது. டாக்டர்களாலும், பொது ஜனங்களாலும் ஆதரிக்கப்பட்டு கீர்த்திவாய்ந்த இம்மருந்தை ஒவ்வொரு வீட்டாரும் கையிருப்பாக வைத்திருக்க வேண்டியது அவசியமே. ஏனெனில் தினம் தற்செயலாய் ஏற்படும் எப்பேர்ப்பட்ட வெட்டுக் காயங்கள், விரணங்கள், எல்லாவித சர்ம வியாதிகள், குன்மம் முதலியவைகளை குணப்படுத்துவதில் இம் மருந்துக்கு நிகரானது எதுவுமேயில்லை. இரணத்தினால் இரத்தம் விஷமாக மாறி வியாதி உண்டாவதைத் தடுத்து நல்ல திட தேகாரோக்கியத்தைத் தரவல்லது இதுவே. ஆபரேஷன் இல்லாமலே, காலில் ஏற்படும் கோளாறுகள், வீக்கங்கள் இவைகளை இதை உபயோகித்து குணமடைந்தவர் அநேகர். இதன் விலை ரூபா 1.

தனலட்சுமி கம்பெனி, சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

இதர ஆக்ட் புஸ்தகங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
இந்தியன் பினல் கோட் சட்டம்	3	0	பஞ்சாயத்துச் சட்டம்	1	4
கிரிமினல் லா	3	0	இந்துதேச சாட்சி ஆக்ட்	1	6
சிவில் லா	3	0	தேவஸ்தான சட்டம்	1	6
புது விவகார சிந்தாமணி	2	8	எஸ்டேட் லாண்டு ஆக்ட்	1	4
புது பெரிய ஹிந்து லா	2	0	ஸ்டாம்பு ஆக்ட்	0	12
மூகம்மதியன் லா	2	0	ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
கிராம மூன்சீப் சட்டம்	1	8	டிரஸ்டிகள் சட்டம்	0	12
பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டம்	1	0	கால நிர்ணயச் சட்டம்	0	8
இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0	நில ஆக்கிரமிப்பு என்குரோச்மெண்ட் சட்டம்	0	4
லோகல்போர்ட் ஆக்ட்	2	0	கிராமச் சுகாதாரம்	0	2

இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இந்த சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய டிஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம் சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக் கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்வனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர் பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிகாரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

மதிமோச விளக்கம்.

(துசி இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

ஆன்றோர் மதிக்கும் நான்காம் பதிப்பு.

223-பக்கங்கள் கொண்டது. 16-விநோதமான சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டது. உயர்ந்த நீக்த கடிதத்தில் அச்சிடப்பட்டது.

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய நம் பாதகண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர், அவசரப்பட்டு, மன மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்மத்தில் செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப வஞ்சமும், சூதும், பஞ்சமா பாதகமும் அமைந்திருக்கும் நெஞ்சமும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள் தோறும், ஊர் தோறும், வீடுகள்தோறும் மலிந்து, விநோதம் விநோதமான பலமோசம், அதிமோசம், கதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்து வருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசநாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதியற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எதிர்த்து விழுங்குவோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன் போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப்புரட்டராயும், அண்டப்புரட்டராயும், ஆகாசப் புளுகராயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூதுவாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக்களவேயில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளிலும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்திலும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக்கடையிலும் மோசம்; கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச் சேவைகளிலும் மோசம்; கோவிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம். இப்படியே மனிதர் தலை நீட்டு மிடங்களெல்லாம் மோசமயமாகவே யிருக்கின்றன. உலக முழுவதும் இவ்வாறே மோசம் நிறைந்ததா யிருப்பதனாலே, வஞ்சகமற்ற மனிதர் துன்பத்திற்குள்ளாகிச் சதா சர்வகாலமும் சஞ்சலப்படுகின்றனர்; இத்தகைய மோசநாச வலையினின்றும் தப்புதற்கு மார்க்கங் காணாதவர்களாய்த் தவிக்கின்றனர். ஆதலின், இந்தப் படுமோசப் பெரும் பாதாளத்தில் மனிதர் வீழ்ந்து மயங்காமல் தப்பித்துய்தற் கேதுவாயிருக்கும்படி, உலகத்தில் உலாவும் எண்ணிறந்த மோசச் செயல்களெல்லாம், இப்புத்தகத்தில் மிக்க விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

இது இவ்வளவு பயன் சேர்ந்ததா யிருப்பதனாலேயே இதன் மூன்று பதிப்புக்களும் வெகு சீக்கிரம் செலவாகி இப்போது இந் நான்காம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இப்பதிப்பிலும் பெரும்பாகமான காப்பிகள் செலவாகிவிட்டன; சொற்பக் காப்பிகளே இருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

பகவத்கீதை வசனம்

ஸ்ரீ மகாத்மாவினால் சிறப்பித்துக் கூறப்படுவதும், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மாத்வர், ஸ்ரீ நீலகண்டர் முதலிய சமயாச்சாரியர்களின் வியாக்கியானங்கட்குப் பாத்திரமாக விளங்கியதும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினால் அருளிச் செய்யப்பட்டதுமாகிய பகவத்கீதையைச் சிறிது கல்வியறிவுள்ள ஆண்களும் பெண்களுங்கூடப் படித்துப் பயன் பெறவேண்டும் என்னும் கருத்துடன் அது பிரபல நாவலாசிரியரும், கைவல்ய நவநீத வசன நூலாசிரியருமாகிய ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எளிய இனிய வசன நடையில் எழுதப்பட்டது.

அழகிய காலிகோ கட்டடம். இதன் விலை ரூ. 1—8—0.

காதலி ? ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' என்னும் பல உயரிய நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர்திருத்தத்தின் சீர்கேடு ஆகிய பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 10.

பவளத்தீவு 2-பாகம்

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூர்ணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும். 2-பாகம் விலை ரூபா. 3.

திருவருட்பா.

(அடக்க விலை)

நாளது வரையில் கிடைத்த பல அரிய உபதேசங்கள், உண்மை நெறிகள், சன்மார்க்க வெளியீடுகள் அடங்கியது. தடித்த கிளேஸ் காகிதம் சுத்தமான பதிப்பு, பலமான அழகிய பட்டு கலிகோ பைண்டு. ஒவ்வொன்று சுமார் ஆயிரம் பக்கங்கள். 2-வால்யமும் ரூபா 6 தான். தபால் அல்லது ரயில் செலவு வேறு. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன. முந்துவோர்க்கே கிடைக்கும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை உணர்ந்து மக்களாய்ப் பிறந்த நாம் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட் குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த இராமாயணம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் அவதரித்து யவுந்தனுக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் ரஹஸ்ய விசயங்களைப் பற்றிப் பேசுவது.

ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜாவிதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களைவிட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்குமென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரூபா 4.

ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(நான்காம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. மிக சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

நாகரீக நங்கையர் கழுத்துச் சங்கிலி

இது சுத்தமான 18 காரட் கோண்ட ரோல்ட் கோல்ட் பிளேட் நெக்லேஸ் என்னும்

கழுத்துச் சங்கிலி

3 வருஷம் உத்திரவாதமுள்ளது. இது சுத்தமான ரோல்ட் கோல்டால் செய்யப்பட்டு இமிடேஷன் வைரம், சிவப்பு, ரத்தினங்கள் முதலியவை பதிக்கப் பெற்றது. படத்திற் கண்டபடி மிகவும் வேலைப்பாடுடையது. பதக்கம் அமைக்கப்பெற்றது. கண்ணைக் கவரக்கூடியது. அசல் தங்கத்தால் செய்ததுபோலவே யிருக்கும். யாவரும் எத்தேயத்தினரும் உபயோகிக்கலாம். இதன் விலை ரூபா 1—8—0

ஒரே சமயத்தில் இரண்டு சங்கிலிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் செலவு இல்லை.

ரோல்டு கோல்டு
"பிடோ" லீவர் கைகெடியாரம்.

எங்கள் ரிஜிஸ்டர் ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கெடியார கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுபவப்படும். 5 வருஷ காரண்டியுடன் அனுப்பப்படும். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 5-12-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

சுபீரியர் வாட்சு கம்பேனி, கெடியார வியாபாரிகள், மதுரை.

ஸ்ரீ மஹா பாரதம் விராடபர்வ வசனம்

நமது இதிகாசங்களில் சிறந்ததும், அறம் பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களைத் திறம்பட வகுத்துரைப்பதினால் ஐந்தாம் வேதம் என்று சிறப்பிக்கப் படுவதுமாகிய ஸ்ரீ பாரதம் விராடபர்வம் புதிய பதிப்பு வெளிவந்து விட்டது. சரளமான செந்தமிழ் நடை. முத்துப்போன்ற பெரிய எழுத்துக்களில் அமைந்த சுத்தப்பதிப்பு; விசித்திரப் படங்களுடன் இலங்குவது. சாமானியப் படிப்புள்ள ஆடவர் பெண்டிர் எல்லாருக்கும் எளிதில் பொருள் விளங்கும். சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. உடனே முந்துங்கள். உறுதியான கட்டிடம்.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 187, மதராஸ்.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும்,

அயக்காந்த செந்தூரமும்

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

விளம்பரம்.

இந்தக் கண்ணுமைக் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாக இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

நாராயண சஞ்சீவித் தைலம்

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம். காதுநோய், கபாலபாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரோரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த் தீரும், தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கரும்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து ஞாபக சக்தியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது தேகம் ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

கூந்தல் வளரும் துவி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 12. தபாற்கூலி வேறு.

கண்நோய் மருந்து

இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலைப் பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம் வெளியாயிற்று!

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(நான்காம் பதிப்பு)

அழகிய சிலை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவர்த்தக்க அநேக ஆப்டோடான் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெரியவெழுத்தில் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் யௌவனர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம். இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் போனந்தக் கடலில் மூழ்கி நல்லின்பம் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி மற்றை இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளிவிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின்சாரம்

18752

ங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரென்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அதற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலாமென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும், மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் சிற்றின்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீஸில் தமிழ்நாட்டுச் சகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம்; இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்

MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலவை முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைக் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்குறக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

சற்குணவல்லி

அல்லது

சித்தூர் இளைய ஜமீன்தாரணி

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது.)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி கொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொற்பின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகளுக்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதைப் படித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும் ஆனந்த

ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எஸ். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

400-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படித்த சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.

இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சியுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி சீக்கிரத்தில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் நாணய வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 8.

கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது பத்திரிகையில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாதாரர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டுவது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குலமுடைய வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிரமாதமான ஆபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வைராக்கியத்தில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேஷமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

விலை ரூபா 1—8—0.

சரமவல்லி இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சந்திரசேகரி.

(இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்திசெய்யக்கூடிய நூல் இதுவே.

இதன் விலை ரூபா 1—4—0

ஞானகாந்தி

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரங் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர்மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின்போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும். எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. அநேக நீதிகளடங்கியது; அறிவு விருத்திக்கு நிகரற்ற ஓர் பொக்கிஷம் என்றே இதைச் சொல்லவேண்டும். புதிய பதிப்பு விலை ரூபா 1—6—0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு விலை ரூபா 1.

அன்பானந்தன்

அல்லது

அருஞ்செல்வன் விழைந்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது. அன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு, ஆனந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றுபட்டு விளங்கும் என்பதொன்று; மற்றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ளதோ, எந்தப் பாஷை நமக்குத் தாய்ப்பாஷையாக வுள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இக் காட்டப்பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள்படும். அன்பைவிட இனிமையுள்ளது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் கலந்தால் ஆனந்தம் பிறக்கத் தடையென்ன? இந்த ஆனந்தம் தமிழ்ப்பாஷை முழுவதும் நிரம்பியிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக்களின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் இந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன.

இதன் விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி	பவ ௵ கார்த்திகை௴ ௧௳	பகுதி
20	1934 ௵ நவம்பர்௴ 16௳	5

கடவுள் வணக்கம்.

அறிவிற் கறிவு தாகமென்று
அறிந்தே அறிவோடு அறியாமை
நெறியிற் புகுதாது ஓர் படித்தாய்
நின்ற நிலையும் தெரியாது
குறியற்று அகண்டா நிதமயக்
கோதில் அமுதே நினைக்குறுகிப்
பிறிவற்று இருக்க வேண்டாவோ
பேயேற்கு இனிநீ பேசாயே. 1.

பேசா அநுபூதியை அடியேன்
பெற்றுப் பிழைக்கப் பொருளால்
தேசோ மயந்தந்து இனி யொருகால்
சித்தத்து இருளும் தீர்ப்பாயோ
பாசா டவியைக் கடந்த அன்பர்
பற்றும் அகண்டப் பரப்பான
ஈசா பொதுவில் நடமாடும்
இறைவா குறையா இன்னமுதே. 2.

சொல்லாய தகுதியெல்லாம் கடந்து நின்ற
சொரூபானந் தச்சுடரே தொண்டனேனைக்
கல்லாகப் படைத்தாலும் மெத்தநன்றே
கரணமுடன் காணுறவு கலக்க மாட்டேன். 3.

எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தென்னாளோ? 4.

அரும்பொருள் விளக்கம்

1. இதனால் பிரிவற்றிருக்க விரும்புகின்றார்.

(இ-ள்.) சிவ போதத்திற்குச் சிவபோதம் ஆதார மென்று உணர்ந்து, அறிவு அறியாமைகளாகிய மாசகத்தில் பிரவேசியாமல் ஒரே தன்மைத் தாகி, நின்ற நிலையையும் உணர்விலாது, அடையாள மற்று, அகண்டா நீத மயமாகிய குற்ற மற்ற அமிர்தமே! தேவரீரை அடைந்து நீக்க மற்று இருக்க வேண்டாமோ? பேய்போன்றவனாகிய எனக்கு இனியாயினும் நீ சொல்லாய் என்க.

உயிர்க்குயிராய் நின்று அறிவிக்கும் அறிவு முதல்வனாகலின் "அறிவுக் கறிவு தாரகம்!" என்றனர் குறி—அடையாளம். கோது—குற்றம். நான்காம் அடி முதற் சீரில் "பிரிவு" என்பதில் எதுகை நயம் நோக்கி வல்லின இகரம் வந்தது.

2. இதனால் மனவிருளை நீக்க வேண்டுகின்றார்.

(இ-ள்.) ஆசையாகிய காட்டினைக் கடந்த பக்தர்கள் பற்றுகின்ற கண்டிக்கப்படாத பெரும் பரப்பாகிய ஈசனே! அம்பலத்தில் நடிக்கின்ற தலைவனே! குறையாத இனிய அமிர்தமே! பேசாமைக்குக் காரணமாகிய அநுபூதியினை ஏழையேன் அடைந்துய்யுமாறு பெருங் கருணையால் உனது தேஜோமயத்தைக் கொடுத்து இனி யொருதரம் அடியேனது மனத்தின் கண்ணுள்ள இருளினையும் நீக்கி விடுவாயோ, என்க.

உலகிருளை நீக்குவதற்குச் சூரிய வொளி இன்றியமையாததாய் இருப்பது போல் சித்தத்தே செறிந்திருக்கும் ஆணவ இருளுக்குத் திருவருளாகிய ஒளிவேண்டு மென்பார் "தேசோமயந் தந்து" என்றனர். இத தேசோமயம் உண்டான போதே ஆணவ இருள் ஒழிய அது சம்பந்தமான மற்றைய மலங்களும் நீங்க மௌன நிலை பிறக்கு மென்பார் "பேசாவ நுபூதியை அடியேன் பெற்றுப் பிழைக்க" என்றனர்.

3. இதனால் பிறவியை வெறுக்கின்றார்.

(இ-ள்.) சொற்களால் ஆகிய கூட்டமெல்லாவற்றையும் தாண்டி நின்ற ஆனந்த சொரூபமாகிய சோதியே! அடிமையாகிய என்னைக் கல்லாகப் படைத்திடினும் மிகவும் நல்லதே! நான் கரணங்களுடன் சிநேகம் செய்யேன் என்க.

4. இதனால் ஜீவகாருண்ய சீலர்களாகிய தவச் சிரேஷ்டர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.

(இ-ள்.) எத்தகைய உயிரினையும் தம் முயிரைப் போலவே நினைக்கின்ற தவச் செல்வர்களின் நல்ல அறிவினை விரும்பி அதன் பொருட்டுச் சிந்தை வைப்பது எந்த நாளோ என்க.

ஆனந்தபோதினி

மலர்

கார்த்திகை மீ 1உ

பண்டிதர் பரிதாப நிலை

ஆங்கிலக் கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் பண்டிதர்களின் நிலைமை என்ன என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவர்கள் வெகு இழிவாக மதிக்கப் படுகிறார்கள்—நடத்தப்படுகிறார்கள் என்னும் உண்மையை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். இதற்கென்ன காரணம்? பண்டிதர்கட்குக் கொடுக்கப்பட்டுவரும் குறைவான சம்பள விகிதமே அவர்களது இழி நிலைமைக்கு மூல காரணமாகும். கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் ஆங்கில ஆசிரியர்கள் எத்தகைய வேலை செய்கிறார்களோ அத்தகைய வேலையைத் தான் பண்டிதர்களும் செய்து வருகிறார்கள். ஆனால் ஆங்கில ஆசிரியர்கள் மட்டும் நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் மாதந் தோறும் சம்பளம் பெற்று மகிழ்கின்றார்கள். பண்டிதர்களோ இருபது முப்பது—நாற்பது ஐம்பது ரூபாய்களை மலைபோல் கருதி வாங்கிக்கொண்டு காலந்தள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இந்நிலையில் ஆங்கில ஆசிரியர்களுக்குள்ள மதிப்பும் மரியாதையும் பண்டிதர்கட்கு எங்கிருந்து கிடைக்கும் என்று கேட்கின்றோம்? அந்நிய மொழி கற்றவர்கள் ஆடம்பர வாழ்வு நடத்துவதும், தாய் மொழி கற்றவர்கள் தரித்திர வாழ்வு நடத்துவதும் கலிகாலக் கோலம் என்று கூறிக் கூறி வருந்துவதைத் தவிர வேறு என்ன செய்வது!

சமீபத்தில் ஸ்தல ஸ்தாபனங்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஆசிரியர்களின் சம்பள வெட்டைப்பற்றி வெளிவந்த அரசாங்க உத்தரவு ஒன்று பண்டிதர்கட்கு நகச் சுற்றின் மேல் உலக்கை இடிபோன்ற வேதனையை உண்டாக்கி நிற்கிறது. அதாவது 1—11—34-ம் தேதி முதல் பண்டிதர்களின் சம்பள விகிதம் ரூ. 30—முதல் 40—வரை ஏற்படுத்தப் பட்டிருப்பதாக சர்க்கார் உத்தரவு வெளிவந்திருக்கிறது. அந்தோ! பரிதாபம்! "அடமெடுவாய் பல தொழிலு மிருக்கக் கல்வி அதிகமென்றே கற்று விட்

டோம் அறிவில்லாமல்" என்று முன்னர் ஒரு புலவர் வயிறெரிந்து கதறினர். அந்த அமுதவாக்கு இன்றைக்கும் பண்டிதர் திறத்தில் முழு உண்மையாகவே விளங்கி வருகின்றது.

சுமார் ஏழெட்டு ஆண்டுகட்கு முன் இருந்ததைவிட இக்காலத்தில் பண்டிதர்களாக நியமனம் பெறுகின்றவர்கள் எல்லா விதத்திலும் தகுதி படைத்தவர்களாகவே இருக்கிறார்கள். சென்னை சர்வ கலாசாலை அல்லது அண்ணாமலை சர்வ கலாசாலைத் தமிழ் வித்துவான் பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவர்களோ, மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தும் பண்டித பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவர்களும் மாத்திரமே கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் பண்டிதர்களாக நியமனம் பெறுகிறார்கள். மேலும், பண்டிதர்கட்குப் போதனாமுறைப் பயிற்சியும் அவசியம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. குறைந்த பக்ஷம் ஐந்தாறு ஆண்டுகள் அல்லும் பகலும் வருந்தி யுழைத்தாலொழியச் சர்வ கலாசாலை வித்துவானாகவோ மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராகவோ யாரும் வருவதற்கில்லை என்பது தேற்றம். ஓராண்டு போதனாமுறைப் பயிற்சியும் பெறுதல் வேண்டும். இவ்வளவு தகுதியும் படைத்த பண்டிதர் பெறும் சம்பளம் என்ன? ரூபாய் முப்பது நாற்பது! இதே நிலையிலுள்ள ஆங்கில ஆசிரியர்கள் பெறும் சம்பளம்—நூறு! இரு நூறு! கொடுமை! கொடுமை!!

ஆங்கிலங் கற்ற ஆசிரியர்கள் அதிகச் சம்பளம் வாங்குவதைக் குறித்து யாம் பொறாமைப்படவில்லை. அவர்களுக்கு எவ்விதத்திலும் இளைக்காதவர்களான தாய்மொழிப் பண்டிதர்களை இழிவு செய்து வறுமைப் பேய்க்கு இரையாக்குவதையே யாம் வன்மையாகக் கண்டிக்க விரும்புகின்றோம். ஒரே அந்தஸ்து படைத்தவர்கள் நூற்றுக்கணக்கான சம்பளங்களைப் பெற்றுக்கொண்டிருக்கும்போது அமிழ்தினும் இனிய தாய்மொழிப் பண்டிதர்களின் தலைகளில் கைவைப்பானேன் என்றே கேட்கின்றோம். நீண்ட காலம் ஊழியம் செய்து உயிர் தேய்ந்த நிலையில் ரூ 60 அல்லது 70 வாங்கிக்கொண்டிருக்கும் பண்டிதர்கள் இந்தப் புதிய அரசாங்க உத்திரவின் பயனாக 30 அல்லது 40 ரூபாய்களே பெறுவார்கள். இவ்வாறு வயிற்றில் அடிக்கப்பட்ட பண்டிதர்களின் பரிதாபத்தை அந்தப் பண்டிதர்களே வருணிக்க வல்லவர்கள். எல். டி. பட்டம் பெற்ற ஒரு ஆங்கில ஆசிரியருக்கும் போதனாமுறைப் பயிற்சி பெற்ற ஒரு பண்டிதருக்கும் எவ்விதத்தில் ஏற்றத் தாழ்வு கற்பிக்க முடியும் என்று எமக்கு விளங்கவில்லை. ஆங்கிலங் கற்ற ஆசிரியர் ஒரு துறையில் வல்லவர்; தமிழாசிரியர் ஒரு துறையில் வல்லவர். இருவரும் ஒரே வேலையைத் தான் செய்து வருகிறார்கள். ஆங்கில ஆசிரியர் கற்பிக்கும் மாணவர்கள் வேறு—தமிழாசிரியர் கற்பிக்கும் மாணவர்கள் வேறு இல்லை. உண்மை யிப்படி யிருக்க, அந்நிய மொழி கற்ற ஆங்கில ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதும் தாய்மொழிப் பண்டிதர்களைத் தத்தளிக்க விடுவதும் இரக்கமற்ற செய்கையே யாகும். இது "தன்னைப் பெற்ற தாய் இன்னலிப் பிச்சை எடுக்கையில், தம்பி, கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்" என்னும் பழமொழிக் கொப்பாகவே இருக்கின்றது.

வட ஆற்காடு கோயமுத்தூர் முதலிய ஜில்லா போர்டுகளின் ஆதிக்கத்தின் கீழுள்ள உயர்தரக் கலாசாலைகளில் பண்டிதர்களுக்கு 40 முதல் 70 ரூபாய் வரை சம்பள விகிதம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஏனைய ஆசிரியர் பெறும் சம்பளங்களோடு ஒப்பிடும்போது இந்த விகிதமே மிக மிகக் குறைவு என்பது நீண்ட காலக் கூச்சல். அந்தக் கூச்சலின் பயன் என்ன? 40 முதல் 70 ரூபாய் வரை வாங்கியவர்கள் இனிமேல் 30 முதல் 40 வரை வாங்கவேண்டியதே அக் கூச்சலின் பயன் போலும்! பண்டிதர்கள் ஊருக்கிளைத்த பிள்ளையார் கோவிலாண்டிகளாகி விட்டார்கள். இவர்களுடைய குறைகளையும் முறைகளையும் அரசாங்கத்தாரோ மற்றவர்களோ செவிகளில் போட்டுக் கொள்ளும் வழக்கம் இல்லை என்பது இதுகாறும் அனுபவத்தில் கண்ட உண்மை. தாய்மொழிகட்கு ஆக்கம் அளிக்க வேண்டும்—அவைகளைப் பல விதத்திலும் முன்னேற்ற வேண்டும் என்று எங்கும் பேசப்பட்டு வரும் இக்காலத்தில், பண்டிதர்களைப் பஞ்சாய்ப் பறக்க விடுவது நேர்மையாகுமா என்று சிந்திக்குமாறு அரசாங்கத்தாரையும் தமிழன்பர்களான பொதுமக்களையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இந்நிலையில் பண்டிதர்களின் கடமை என்ன? ஸ்தல ஸ்தாபனங்களின் ஆதிக்கத்தின் கீழுள்ள கலாசாலைப் பண்டிதர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து தங்கள் நிலைமையை மேலதிகாரிகட்கும் அரசாங்கத்தாருக்கும் தெரியப்படுத்த வேண்டும். சட்டசபை அங்கத்தினர்கட்குத் தங்கள் குறைகளை அழுத்தமாக அறிவிக்க முயலவேண்டும். அரசாங்கத்தார் பண்டிதர்களின் விஷயத்தில் காட்டியுள்ள பக்ஷபாதத்தை ஆணித்தரமாக எடுத்துக் காட்டவேண்டும். எனவே தமிழ் நாட்டிலுள்ள பண்டிதர்கள் எல்லாரும் விரைவில் ஒரு மகாநாடு கூட்ட முயற்சிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். அதில் தமிழ் வளர்ச்சியின் அவசியத்தையும் அதற்கு நேர்மாறாக அரசாங்கத்தார் தங்களுக்குச் செய்திருக்கும் அநீதியையும் தெளிவுபடுத்தும் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். அவைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்குமாறு உறுத்த வேண்டும். இச்சமயத்தில் பண்டிதர்கள் வாய் மூடிக்கொண்டு வாளா இருந்தால் "வறுமையும் இழிவும் பண்டிதர்களின் பிறப்புரிமை" என்கிற பழி உறுதியாகிவிடும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. எனவே, பண்டிதப் பெரியோர்களே! இதுகாறும் உறங்கியது போதும். இன்றே விழிமின்! எழுமின்! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்! இறுதியில் வெற்றி நமதே யாகும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

பம்பாய் காங்கிரஸ்

காங்கிரஸ் மகாசபையின் மாபெருங் கூட்டம் சென்ற மாத இறுதியில் பம்பாயில்—கபார்கான் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சுமார் எண்பதினாயிரம் மக்கள் காங்கிரஸ் வைபவங்களிலும் நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டனர். இதைப் போன்ற காங்கிரஸ் கூட்டம் இதுகாறும் நடந்ததில்லை. இனிமேல் நடைபெறப் போவதுமில்லை என்றே சொல்லவேண்டும். பம்பாய் காங்கிரஸில் தலைமை வகித்தவர் பீகார் முடிசூடா மன்னராக விளங்கும் ஸ்ரீ பாபு ராஜேந்திரப் பிரஸாத். வரவேற்புக் கழகத் தலைவராக விளங்கியவர் தீவிர தேச பக்தியும் அஞ்சா நெஞ்சமும் படைத்தவரான ஸ்ரீ. கே. எப். நரிமன். காங்கிரஸ் நடவடிக்கைகளும் தீர்மானங்களும் காந்தியடிகளின் முன்னிலையிலும் அவரது ஆலோசனை படியும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். காங்கிரஸின் கொள்கை பூரண சுயேச்சை இதற்கு அமைதியும் நியாயமுமான வழியில் பாடுபடவேண்டும் என்று காங்கிரஸ் கருதி வந்திருக்கிறது. காந்தியடிகள் சென்ற பதினைந்தாண்டுகளாக இந்த வழியிலேயே காங்கிரஸை நடத்தி வந்திருக்கிறார். இதனுடைய நிர்மாணத் திட்டங்களெல்லாம் இதுகாறும் அவரது விருப்பம் போலவே வகுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இப்பொழுது காந்தியடிகள் காங்கிரஸினின்றும் விலகி விட்டார். காரணம் என்ன? காங்கிரஸ்காரர்களிடையே தம்முடைய உயிர்க் கொள்கையாகிய சத்திய அஹிம்ஸா தர்மம் வெற்றி பெறவில்லை என்பதை உணர்ந்தே காந்தியடிகள் விலகிவிட்டார். இரண்டு முறை சத்தியாக்கிரக இயக்கம் இந்தியா வெங்கும் ஆரம்பிக்கப்பட்டது. கருதிய நோக்கம் கைகூடவில்லை. எனவே அவர் இப்பொழுது காங்கிரஸினின்றும் விலகித் தமது கொள்கையை உருப்படுத்த விரும்புகின்றார். காந்தியடிகள் விலகினாலும் அதை அன்புடன் ஆதரித்து நிற்கிறார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. பம்பாய் காங்கிரஸில் அவர் அந்த ஸ்தாபனத்தின் அமைப்புச் சம்பந்தமான புதிய ஏற்பாட்டை வற்புறுத்திய தொன்றே அதன் பால் அவருக்குள்ள அன்பை இனிது வெளிப்படுத்தும் என்று நம்புகிறோம். மகாத்மா இனிமேல் கிராம முன்னேற்றத் தொண்டில் சிறப்பாக ஈடுபடுவார் என்பதை அறிந்து நாட்டு மக்கள் எல்லாரும் மகிழ்ச்சிப்பெருக்கு அடைவார்கள் என்றே கருதுகின்றோம்.

பம்பாய் காங்கிரஸில் தலைமைவகித்த பாபு ராஜேந்திரரின் தலைமைப் பிரசங்கம் முழுவதிலும் காந்தீய ஒளியே வீசுகின்றது. பூரண சுயேச்சையே தமது கொள்கை என்பதை அவர் உறுதி செய்திருக்கிறார். அதாகுச் சத்திய அஹிம்ஸா தர்ம நெறியே தகுந்தது என்றும் தெளிவு படுத்தியிருக்கிறார். இப்பொழுது தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டாலும் இறுதியில் வெற்றி உறுதி என்பது ஸ்ரீராஜேந்திர பாபுவின் நம்பிக்கை. கதரே கதி அளிக்கும் என்பதில் அவருக்குள்ள அழுத்தமான நம்பிக்கை அசைக்க முடியாததாகும். வெள்ளைக் காகித அரசியல் உபயோகமற்றது—விபரீதமானது என்று ஸ்ரீ ராஜேந்திரர் ஐயந்திரிபற எடுத்துக் காட்டி விளக்கியுள்ளதை ஏனைய அரசியல் வாதிகளும் அரசாங்கத்தாரும் நன்கு கவனிக்கவேண்டும் என்று விரும்புகின்றோம். ராஜேந்திர பாபுவுக்குச் சட்டசபைப் பிரவேசத்தில் நம்பிக்கை இல்லை. எனினும் மக்கள் கடைபிடிக்க வேண்டிய வேறு புதிய வழி எதையும் அவர் காட்டவில்லை. எனவே சட்டசபைகளில் நம்பிக்கை வைத்துள்ளவர்களை அவர் பெரிதும் ஆதரித்து நிற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வரவேற்புக் கழகத் தலைவரான ஸ்ரீ. கே. எப். நரிமன் நமது நாடு முழுவிடுதலை பெற்றாலொழிய எத்தகைய குறையையும் நிவர்த்தி செய்ய வழியில்லை என்று அச்சமின்றி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பம்பாய் காங்கிரஸ் முன்னர் காரியக் கமிட்டி செய்திருந்த தீர்மானங்களை அங்கீகரித்தது-அதாவது சட்டமறுப்பு-சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்தி விட்டது. சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்தது. காந்தியடிகள் தயாரித்திருந்த அகில இந்திய கிராமபுனருத்தாரண சங்க ஏற்பாட்டை ஒப்புக்கொண்டது. காங்கிரஸ் அமைப்புச் சம்பந்தமான விதிகளை ஏற்றுக்கொண்டது. இவ்வமைப்புச் சம்பந்தமான இந்தப் புதிய தீர்மானத்தின்படிச் சாதாரண காங்கிரஸ் அங்கத்தினர்கள் நாலணாச் சந்தாச் செலுத்தினால் போதும். ஆனால் ஆறு மாதகாலம் அங்கத்தினராயிருப்பவரே வாக்களிக்கும் உரிமையுடையவராவார். நிர்வாகப் பொறுப்பேற்கும் அங்கத்தினர் நூல் சந்தாச் செலுத்தவேண்டும் அல்லது உடல் உழைப்புச் சந்தாச் செலுத்தவேண்டும். உழைப்பின் விவரம் இனிமேல் அந்த அந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகளால் நிர்ணயிக்கப் படும்.

பம்பாய் காங்கிரஸில் பலத்த எதிர்ப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தலைவர்களின் முயற்சி விசேஷத்தால் அங்ஙனம் எதுவும் நேரவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். காங்கிரஸ் சமதர்ம வாதிகளும் மாளவியா கோஷ்டியினரும் சில திருத்தங்களைக் கொண்டுவந்தார்களாயினும் அவை வெற்றி பெறவில்லை. மாளவியா கோஷ்டியும் காந்தியடிகளும் காங்கிரஸினின்றும் விலகியது நாட்டின் துரதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும். ஆனால் காந்தியடிகள் காங்கிரஸுக்கு விரோதமாக எதையும் செய்ய மாட்டார் என்பது உறுதி. காங்கிரஸைப் பலப்படுத்தவே காந்தியடிகள் இப்பொழுது விலகி நிற்கிறார். காங்கிரஸ் இயற்கையான வளர்ச்சி பெறவேண்டும் என்பது காந்தியடிகளின் விருப்பம். காங்கிரஸ்காரர்கள் அஹிம்ஸா தர்மத்திலும் சத்தியத்திலும் பூரண நம்பிக்கை வைக்கும் சமயத்தில் காந்தியடிகள் எங்கிருந்தாலும் காங்கிரஸில் தலைமை வகித்து நடத்தத் தயார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அந்தக் காலம் எது? வந்தே மாதரம்.

ஓம் தத் ஸத்.

மகாத்மா அறிக்கை

—————:(o):—————

காங்கிரஸ் மகாசபையை விட்டு விலகிய மகாத்மாகாந்தி இனி தமக்கும் காங்கிரசுக்கும் எத்தகைய சம்பந்தம் இருக்குமென்பது பற்றியும், காங்கிரஸ்காரர்களின் கடமை என்ன என்பது பற்றியும் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—நான் இப்போது ராஜேந்திரபாபுவுக்கும் மற்ற காங்கிரஸ் அதிகாரிகளுக்கும் கடிதமூலத்தில் ராஜிநாமாவை அனுப்புகிறேன். இதிலிருந்து நாட்டின் அரசியலிலாவது எதிர்கால லட்சியத்திலாவது எனக்குச் சிரத்தை போய் விட்டதென்று யாரும் கருதக் கூடாது. நான் எந்த ஸ்தாபனத்தின் நன்மையைக் கருதி விலகினேனோ அதன் க்ஷேமலாபத்தில் எனக்கு அக்கறை இல்லாது போய்விட்டதென்று நினைப்பது தவறு. காங்கிரசின் தினசரி காரியங்களிலும், உள் சச்சரவுகளிலும் தலையிட முடியாது. அவ்வாறு தலையிட்டு வருவேனாயின் காங்கிரசிலிருந்து நான் விலகியதன் கருத்தே கெட்டுப்போய் விடும். காங்கிரஸ் எந்த லட்சியங்களைக்கொண்டு நிற்கிறதோ அவற்றை நடத்தையில் கடைப்பிடிக்கிறதா என்பதை மாத்திரம் நான் விலகியிருந்து கவனித்து வருவேன். இதுவே என் சிரத்தையாக இருக்கும். காங்கிரஸ் கடைப்பிடிக்கும் வழிகளைப் பற்றிய என் அபிப்பிராயத்தையும், தனிப்பட்டவர்களின் போக்கைப்பற்றியும் தேவையான போது அபிப்பிராயம் வெளியிடுவேனென்று காங்கிரஸ்காரர்கள் எதிர்பார்க்கலாம். காங்கிரசின் விவகாரங்கள் சம்பந்தமாய் இதற்கு முன் என் ஆலோசனையை நாடி வந்ததுபோல் இனியும் வரக் கூடாது. காங்கிரசின் தலைவர்களிடமிருந்தே காங்கிரஸ்காரர்கள் ஆலோசனையைப் பெறவேண்டும். தலைவரின் யோசனைகள் சிறந்தவையாக இருக்குமென்பதை நான் அறிவேன். நான் கருத்தில் கொண்ட வேலையைச் செய்வதற்காக என்னை விட்டுவிட வேண்டும்.

அரசியல் விஷயங்கள் மற்ற தேசிய விஷயங்களினின்றும் வேறானவையென்றும் நான் மதிக்கவில்லை. பிரஜா உரிமையின் தத்துவமே அரசியல். பிரஜா உரிமையின் கட்டுப்பாடுகளுக்கும் உயர்தர நடவடிக்கை முறைக்கும் அரசியலுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. அரசியல் விஷயங்களென்பன அறிவு, யோக்கியதா, பொருளாதாரத் துறைகளில் மனிதவர்க்கம் முன்னேற்றமடைவதைக் குறிக்கும். 1915-ஆம் வருஷம் நான் இந்தியாவுக்கு வந்தது முதல் அரசியல் விஷயங்களின் அடிப்படையான கருத்தைத் தெளிவுபடுத்தியே வருகிறேன். நாம் எல்லா விஷயங்களிலும் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவோமாயின் மேற்கூறிய துறைகளில் முன்னேற்றம் ஏற்படுமாறு காங்கிரஸ் திட்டம் வகுக்கப் பட்டிருப்பது தெரியவரும். அந்நியநாட்டைச் சரிசமத்துவமான அந்தஸ்தில் நாமாக வைத்துக் கொண்டு, அந்நியருக்கு அடிமையாக இருக்கும் ஆட்சி முறையிலிருந்து விடுதலை பெறுவதற்கு இத்திட்டம் மிகவும் ஏற்றது. தேர்தல்களில் வெற்றி பெறுவதிலும், சட்டசபைகளில் வீண் வாதம் செய்வதிலும் மாத்திரம் ஈடுபட்டு, காங்கிரஸ்காரர்கள் ஆக்க வேலைத் திட்டத்தில் ஈடுபெறுவோமானால் அரசியல் இயக்கத்தின் சாரம் என் வசமிருப்பதையும், உபயோகமற்ற நடவடிக்கைகள் நிர்மாணம் நடத்தப் படுவதையும் காங்கிரஸ் காரர்கள் உணர்ந்து கொள்வர். ஆனால் சட்ட சபைக்குச் செல்லும் காங்கிரஸ் வாதிகள் ஆக்க வேலைத் திட்டத்தை நடத்தி நாட்டுக்கு நலம் புரிவர் என்றே நான் நம்புகிறேன். இப்போது கூடிய காங்கிரஸ் பல விதங்களில் எனக்கு உண்மை நிலைமையைத் தெரிவித்தது. நான் கொண்டுவந்த முக்கிய திருத்தங்களைப் பற்றியும், காங்கிரஸ் அமைப்புச் சீர்திருத்தத்தைப்பற்றியும் காரியக் கமிட்டியுடன் தீவிரமாகப் போராட வேண்டியிருக்குமென்று எதிர்பார்த்தேன். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. நியாயமானதும் அமைதியானதும் என்பதற்குப் பதிலாக உண்மையானதும் சாத்வீகமானதும் என்னும் பதங்களை உபயோகிக்க வேண்டியது அவசியமென அவர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டனர். விஷயாலோசனைக் கமிட்டியிலும் இந்த உண்மை எனக்குத் தெரியவந்தது

காங்கிரசின் லட்சியத்தை மாற்றியமைக்கும் யோசனை இங்கு நிறைவேறவில்லையாயினும் விவாதமின்றி நிராகரிக்கப்படவில்லை. இந்த யோசனை மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்டது. நானும் காங்கிரசில் இல்லாததால் அவர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தாராளமாக வெளியிடலாம்.

காங்கிரஸ் திருத்தி அமைக்கப் படுமென்பது இப்போது நிச்சயமாகி விட்டது. ஆகவே இதை நடத்திவைக்க மாகாணக் கமிட்டிகள் முற்பட வேண்டும். இவ்விடத்தில் நான் ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். கதர், சரீர உழைப்புப் பிரிவுகள் உடனே அமலுக்கு வரமாட்டாவென யாரும் நினைக்க மாட்டார்களென்று நம்புகிறேன். அவை நிச்சயம் அமலுக்கு வரும். இப்பிரிவில் நம்பிக்கை இல்லாதவர்களும் வழக்கமாகக் கதரை அணிய விருப்பமில்லாதவர்களும், நாட்டிற்காகக் கொஞ்சம் சரீர உழைப்பைச் செய்ய விருப்பமில்லாதவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தானங்களில் பதவி வகித்திருந்தால் அவற்றை உடனே ராஜிநாமாச் செய்துவிட வேண்டும். நூல் நூற்பது எளியதும் இயற்கையானதுமான காரியமாகும். இது கதர்ப் பிரிவுடன் சம்பந்தப்பட்டது. நூல் நூற்கப் பிரியமில்லாதவர்கள் வேறு வகையில் சரீர வேலை செய்யலாம்; தையல் வேலை சுலபமானது. ஒரு கிராமத்தை ஒருநாள் சுத்தம் செய்வதும், மலேரியா ஜில்லாக்களில் ஒருநாள் வீடு வீடாகச் சென்று மருந்து கொடுப்பதும் 500 கஜம் நூல் நூற்பதற்கு சமானமாகும். காங்கிரஸ்காரர்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டுமென்பதே இப் பிரிவின் நோக்கம். இவையெல்லாம் பரிசுத்தமான சாத்வீக எதிர்ப்பாகும்.

சட்டமறுப்பை ஆரம்பிக்கு முன் இக் காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தாமல் போனதற்கு இப்போது வருந்துகின்றேன். சட்டமறுப்புக் காலத்தில் தேசம் இக் காரியங்களைக் கைக்கொள்ளும் என்று நினைத்தேன். ஆனால் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. எனினும் இப்போது புதிய அமைப்புப் பிரிவுகள் உடனே அமலுக்கு வருமென்று நம்புகிறேன். சட்டமறுப்பு அவசியமில்லாதபடி செய்யத்தக்க சாத்வீக எதிர்ப்புத் திறமை ஏற்படவேண்டுமென்பதே என் லட்சியம். உண்மையான சாத்வீக எதிர்ப்பு பிறரின் எதிர்ப்பை ஒருகாலும் உண்டு பண்ணாது. காங்கிரஸ்காரர்கள் தக்கபடி நடந்து கொள்வார்களென்று நம்புகிறேன்.

பம்பாய் காங்கிரஸ் தீர்மானங்கள்

காங்கிரஸ் மகாசபையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

(1) "1934-மே மாதத்திலிருந்து காங்கிரஸ் காரியக்கமிட்டி சட்டசபை விவகாரப் பஞ்சாயத்து சம்பந்தமாகவும், நிர்மாண வேலைத்திட்ட சம்பந்தமாகவும், மேனாட்டு இந்தியரைப்பற்றியும், சுதேசியத்தைப்பற்றியும் நிறைவேற்றிய தீர்மானங்களை யெல்லாம் இம்மகாநாடு ஊர்ஜிதம் செய்கிறது"

(2) "ஆயிரக்கணக்கான சட்டமறுப்பாளர்கள் விசேஷ தியாகங்களைச் செய்வதற்கும் மிகுந்த கஷ்டங்களை ஏற்றுக்கொண்டதற்கும் தேசத்தைப் பாராட்டுவதாகவும், பலாத்காரமற்ற ஒத்துழையாமையும் சட்டமறுப்பு மின்றேல் தேசமெங்கும் விசேஷ உணர்ச்சி ஏற்பட்டிரா தென்பதைத் தெரிவித்துக் கொள்வதாகவும், மகாத்மா ஒருவர் தவிர மற்றவர்கள் விஷயத்தில் சட்டமறுப்பை நிறுத்தி வைப்பது விரும்புவதாகவும், அவசியமாக இருந்த போதிலும் பயங்கர இயக்கமானது அதைக் கையாளுவோரும் அதை ஒடுக்க முற்படுவோரும் பயங்கரமான காரியங்களைச் செய்வதிலேயே கொண்டுபோய் விடுவதாக இருக்கிறதென்று அனுபவத்திலிருந்து நிதரிசனமாகத் தெரிந்திருப்பதால் பலாத்காரமற்ற ஒத்துழையாமையும் சட்ட மறுப்பும் அதற்குப் பூரண பதிலி யாகும் என்னும் நம்பிக்கையையும் இம்மகாநாடு தெரிவித்துக் கொள்கிறது"

(3) ஸ்ரீமதி. கமலா நேருவின் தேக அசௌக்கியத்துக்கு அநுதாபம் காட்டுவதாவும், அவர் சீக்கிரம் குணமடைய வேண்டுமென்று பிரார்த்திப்பதாகவும், சட்டசபைப் பஞ்சாயத்தை தோற்றெடுக்க வேண்டுமென்றும் குறிப்பிடும் தீர்மானங்களைத் தலைவரே பிரேரேபித்தார்.

(4) "கிராமக் கைத்தொழில் சங்கத்தைக் காங்கிரசின் ஆதரவிலும், ஆனாலும் ராஜீயக் கலப்பற்ற முறையிலும் அமைப்பதென்றும், அதற்கு பொருளாதார நிபுணரான ஜே. சி. குமரப்பா தலைவராகவும், மகாத்மா யோசனை கூறுவோராகவும் இருப்பதென்றும், அதற்குத் தனிபோர்டு ஏற்பட்டு அதுவே பணத்தைத் திரட்டிக்கொண்டு கிராம புனருத்தாரண வேலையை மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது"

(5) காங்கிரஸ் பொருட்காட்சி நிர்வாக வேலையை நூற்பவர் சங்கத்துக்கும் கிராமக் கைத்தொழில் சங்கத்துக்கும் விட்டுவிட வேண்டுமென்ற பிரேரணையைத் தலைவர் ராஜேந்திர பாபுவே கொண்டுவந்தார்.

(6) காங்கிரஸ் அமைப்பில், காரியக்கமிட்டியின் சப் கமிட்டியார் செய்த திருத்தங்களைக் காங்கிரஸ் அப்படியே ஏற்றுக்கொள்கிறது.

(7) "மகாத்மா காந்தியின் தலைமையில் இக்காங்கிரஸ் பூரண நம்பிக்கையைத் தெரிவிப்பதோடு காங்கிரசினின்று விலகவேண்டுமென்று அவர் செய்துள்ள தீர்மானத்தைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது அவர் இதுவரையில் காங்கிரசுக்குச் செய்துள்ள ஒப்பற்ற சேவைக்குக் காங்கிரஸ் நன்றி செலுத்துகிறது"

(8) அடுத்த காங்கிரஸ் லக்ஷ்மணபுரியில் கூடும் என்று தீர்மானிக்கப்பட்டது.



பிரம சூத்திரம்.

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

(300-ம் பக்கத் தொடர்ச்சி.)

8-வது. ஆகாசாதி கரணம்.

22-வது சூத்திரம். அவதாரிகை:—

சாந்தோக்கிய உபநிடதத்தில்

"அஸ்ய லோகஸ்யகாகதி ரித்யாகாச இதிஹோவாச
ஸர்வாணிஹவா இமானி பூதாந்யாகாசாதேவ ஸமுத்பத்யந்தே!
ஆகாசம் ப்ரத்யஸ்தம் யந்த்யாகாசோஹ்யேவைப்யோ
ஜ்யா நாகாச: பராயணம்"

என்று ஒரு வாக்கிய மிருக்கிறது.

சாலாவாத்யன் என்னும் பிராம்மண னொருவன் ஜைவலி என்னும் ஓர் அரசனிடம் சென்று, "அரசனே! இவ்வுலகத்திற்கு ஆதாரமா யிருப்பது எது?" என்று வினவ, அவ்வரசன் "இவ்வுலகத்திற்கு ஆதாரம் ஆகாசம். அவ் வாகாசத்தினின்று எல்லாப் பூதங்களும் தோன்றி பின் அதனிடத்தே தானே ஒடுங்குகின்றன. அவ்வெல்லாப் பூதங்களினும் ஆகாசமே மேலானது. அதுவே எல்லாவற்றிற்கும் ஆதாரமானது" என்று விடை யிறுத்தான். இவ் விஷயம் மேற்படி வாக்கியத்திற் கூறப்பட்டுள்ள விஷயமாகும்.

மேற்படி வாக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆகாசம் எது? என்பது கண்டு ஆராய்ச்சிக் குரியதாகும். ஏனெனில்; ஆகாசம் என்னும் பதம் சிலவிடங்களில் பிரம்மத்தையும் குறித்து நிற்கின்றது; சில விடங்களில் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களுள் ஒன்றாகவுள்ள ஆகாசத்தை (பூதாகாசத்தை)யும் குறித்து நிற்கின்றது ஆகலின், மேல் கண்ட சுருதி வாக்கியத்திலுள்ள ஆகாசம் எந்த ஆகாசம்? என்பது சந்தேகித்தற்குரிய விஷய மாயிற்று.

ஆகாசம் என்னும் பதம் பூதா காசத்தையே குறிக்கும் என்று வாதிக்கும் பூர்வ பக்ஷிகள் பின் வரும் காரணங்களைக் காட்டுகின்றனர் அக்காரணங்கள் இவை.—

"பிரம்மம் ஆகாசத்தைப் போல வியாபகம் முதலிய தர்மங்களை யுடையதாக விருத்தலின் கௌணமாக (அமுக்கியமான) பிரமமும் ஆகாசம் என்னும் பெயரால அழைக்கப் படுகின்றது. காசம் என்பது முக்கியமாக பூதாகாசத்தையே குறிப்பதாகும். இதுவே பிரசித்தியான அர்த்தம் சுருதி வாக்கியத்திற்கு முக்கியார்த்தம் கொள்வது யுக்தமே யன்றி அமுக்கியார்த்தம் கொள்வது யுக்தமன்று. தவிர வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் இவ்வெல்லாப் பூதங்களுக்கும் ஆகாசமே காரணம் என்பது எல்லா நூல்களின் அபிப்பிராயமாகும். (ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவு (நெருப்பு)ம், தேயுவினின்று அப்புவு (ஜலமு)ம், அப்புவினின்று பிருதிவி (பூமி)யும் தோன்றுகின்றன; பின், தோன்றிய முறையே பிருதிவி அப்புவிலும், அப்பு தேயுவிலும், தேயு வாயுவிலும், வாயு ஆகாசத்திலும் ஒடுங்குகின்றன என்ற நூல்கள் கூறுகின்றன) மேலும், சிரேஷ்டத் தன்மையும் ஆதாரமாந்தன்மையும் மற்றைப் பூதங்களினும் ஆகாசத்தினிடத்து அதிகமா யிருக்கின்றன. ஆகவின், ஆகாசம் என்னும் பதம் இங்கு பூதாகாசத்தைக் குறிக்குமே யன்றிப் பரப்பிரம்மத்தைக் குறிக்காது."

இவ்வாறு தோன்றிய பூர்வ பக்ஷம் பின் வரும் சூத்திரத்தால் கண்டிக்கப் படுகின்றது.

சூ. 22. "ஆகாசஸ்தல்லிங்காத்"

பதவுரை:—ஆகாச:=ஆகாசம் என்னும் பதத்தின் பொருள் (பரப் பிரம்மமே); ஏனெனில், தல்லிங்காத்=அதற்குப பிரம்மத்திற்குரிய லக்ஷணங்கள் கூறப்பட் டிருத்தலால்.

(கருத்து) பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பூதங்களெல்லாம் ஆகாசத்தினின்றும் தோன்றின என்று நூல்கள் நுவல்கின்றன. அங்ஙனமாக, அந்த ஆகாசம் பஞ்ச பூதங்களு ளொன்றான ஆகாசத்திலும் வேறு என்பது விளங்குகின்றதல்லவா? அது பூதாகாசமே என்று கொள்வோமானால், அந்தப் பூதாகாசத்தினின்றே பூதாகாசம் தோன்றிற்று என்றல்லவா அர்த்தமாகும்? தனக்குத் தானே காரணமென்பது அசம்பாவிதமன்றோ?

"ஆகாசம் ப்ரத்யஸ்தம் யந்தி" என்னும் வாக்கியம் எல்லாப் பூதங்களும் ஆகாசத்தனிடத்தில் ஒடுங்குகின்றன என்ற உபதேசிப்பதால், எல்லா ஒடுக்கங்களுக்கும் ஆதாரமாக இருப்பதாகிய பிரம்ம லக்ஷணம் கூறப்பட் டிருக்கின்றதே.

தவிர, மேல் கூறப்பட்ட சாந்தோக்கிய வாக்கியத்தில் மேலே காட்டியவாறு எல்லா பூதங்களும் ஆகாசத்தில் லயமடைகின்றன என்பதைக் காட்டும் "ஆகாசம் ப்ரதயஸ்தம யந்த" என்னும் வாக்கியம் பிரயோகிக்கப்பட் டிருப்பதோடு "ஜ்யாய"—"பராயண" என்னும் பதப் பிரயோகங்களு மிருக்கின்றன. இவற்றன் "ஜ்யாய" என்னும் பதம் சிரேஷ்டம் என்றும், "பராயண" என்னும் பதம் ஆதாரம் என்றும் பொருள்படும். ஆகவே, சிரேஷ்டத் தன்மையும் ஆதாரத் தன்மையும் பிரம்மத்தின் அசாதாரண லிங்கங் (லக்ஷணங்)களாம்.

"ஜ்யாயாந் ப்ருதிவ்யா ஜ்யாயா அந்தரிக்ஷா ஜ்யாந்திவோ,
ஜ்யாயா நேப்யோ லோகேப்ய:

"விஞ்ஞான மாநந்தம் ப்ரஹ்ம ராதேர்தாது: பராயணம்"

"பூமியை விடப் பெரியது, ஆகாசத்தை விடப் பெரியது, தேயுவை விடப் பெரியது, எல்லா உலகங்களை விடப் பெரியது"

"ஞானானந்த சுபருபமான பிரம்மம் பணம் கொடுப்போனைவிட உயர்ந்தது."

என்று ப்ருஹதாரண்யகோப நிடதம் கூறுவதுங் காண்க. ஆகவின் ஆகாச பதம் எண்டு பிரம்மத்தையே குறிக்கின்ற தென் றறிக.

9-வது. பிராணாதி கரணம்.

23-வது. சூத்திரம் அவதாரிகை.

சாந்தோக்கிய உபநிடதத்தில், "ப்ரஸ் தோத்தர்யா தேவதா ப்ரஸ்தாவமந்வாயத்த * * கதமாஸா தேவதேதி ப்ராண இதிஹோவாச ஸர்வாணி ஹவா இமானி பூதானி ப்ராணமேவாபி ஸம்விசந்தி ப்ராண மப்யுஜ்ஜிஹதே, ஸைஷா தேவதா ப்ரஸ்தாவமந்வாயத்த."

என்னும் வாக்கியத்தில் பிரயோகிக்கப்பட் டிருக்கும் பிராணம் என்னும் பதம் பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்னும் பஞ்ச வாயுக்களுள் ஒன்றாகிய பிராண வாயுவைக் குறிப்பதா? பரமாத்மாவைக் குறிப்பதா? என்பது சந்தேகத்திற் கிடமான விஷயமாம். ஏனெனில்,

பிராணன் என்னும் பதம் பிராண வாயு என்னும் பொருளின் வேதத்திலும் உலக வழக்கிலும் வழங்கி வருகின்றது. "ப்ராணபந்தநம்ஹி ஸோம்ய மந:" அதாவது, "பரமாத்மாவால் ஜீவன் நிலை நிறுத்தப்பட் டிருக்கிறான்" என்னும் சாந்தோக்கிய வாக்கியத்திலும், "ப்ராணஸ்ய ப்ராணம்" அதாவது, "பிராண வாயுவுக்குப் பிராணனாக (பிரேரகனாக) வுள்ளவன்" என்னும் பிருஹதாரணிய வாக்கியத்திலும் பிராணன் என்னும் பதம் பிரம்மம் என்னும் பொருளில் பிரயோகிக்கப்பட் டிருக்கிறது. ஆகவின், மேற் காட்டியுள்ள சாந்தோக்கிய வாக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ள பிராணம் என்னும் பதம் பிரம்மத்தைக் குறிக்கின்றதா? அல்லது பிராண வாயுவைக் குறிக்கின்றதா? என்னும் சந்தேகம் தோன்றுகிறது. இதற்குச் சிலர் (பூர்வ பக்ஷிகள்) பிராணம் என்னும் பதம் பிராண வாயுவைக் குறிக்குமே யன்றிப் பிரம்மத்தைக் குறிக்காது என்பர். அதற்கு அவர்கள் காட்டும் காரணம் வருமாறு:—

"பிராணம் என்று அழைக்கப்படுவது பிராண வாயுவே என்பது உலகப் பிரசித்தியான விஷயம். நூல்களும் அவ்வாறே கூறுகின்றன. "சகல பூதங்களும் பிராண னிடத்திலே ஒடுங்கி பின் அதினின்றே தோன்றுகின்றன" என்னும் சுருதியின் கருத்து பிராண வாயுவுக்கும் பொருந்தும். 'தோற்ற வொடுக்கங்களுக்குக் காரணமா யிருத்தலால் பிராணம் என்னும் பதம் பிரம்மத்தையே குறிக்கும்' என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் பிராண வாயுவினிடத்தும் அத்தகைய காரணத் தன்மை யிருக்கின்றது. எப்படியெனில், சுஷுப்தி (உறக்க) காலத்தில் இந்திரியங்களின் விருத்திகளெல்லாம் பிராணனிடத்தில் ஒடுங்கி, விழிக்குங் காலத்தில் அதினின்றே தோன்றுவதை யாவரும் அறிவர். சுருதியும் இவ்வாறே இயம்புகின்றது.

"யதாவை புருஷஸ் ஸ்வபிதி ப்ராணம் தர்ஹிவாகப் யேதி,
ப்ராணம் சக்ஷு:, ப்ராணம் ச்ரோத்ரம், ப்ராணம் மந:
ஸயதா ப்ரபுத்யதே ப்ராணா தேவாதி புநர் ஜாயந்தே."

என்னும் சாந்தோக்கிய உபநிடத்திலுள்ள இந்த வாக்கியம், "பூதங்களுக்கு இந்திரியங்கள் சார பூதங்களாய் (முக்கியமானவையாய்) இருத்தலாலும், இந்திரியங்களுக்குப் பிராணனிடத்தில் ஒடுக்கமும் தோற்றமும் நிகழ்தலாலும், ஒடுக்கத் தோற்றங்கள் பூதங்களுக்கே என்று விளங்குகின்றது. ஆகலின், சர்வ பூதங்களும் பிராண வாயுவினிடத்தே ஒடுங்கித் தோன்றுகின்றன என்று கூறத் தடையாது? இதனால் பிராணம் என்னும் பதம் பிராண வாயுவையே குறிக்கும் என்பதே பூர்வபக்ஷிகள் காட்டும் காரணம்.

சூ 23. அத ஏவ ப்ராண:

பதவுரை:—அத ஏவ=முந்தின சூத்திரத்தில் சொல்லப்பட்ட பிரம்ம லக்ஷணங்கள் இங்கும் இருத்தலால், ப்ராண:=பிராணம் என்னும் பெயரால் அழைக்கப்படுபவன் (பரமேசுவரனே.)

கருத்து:—"எல்லாப் பூதங்களும் பிராணத்தினின்றே தோன்றி அதனிடத்தே ஒடுங்குகின்றன" என்று சுருதி கூறுகின்றது. இங்கு குறிக்கப்பட்டுள்ள பிரம்ம லக்ஷணங்கள் தோற்ற வொடுக்கங்கள். இந்த லக்ஷணங்கள் பிராண வாயுவுக்குப் பொருந்தா. "சுஷுப்தி காலத்தில் இந்திரியங்கள் பிராணனில் ஒடுங்கி பின் விழிக்குங் காலத்தில் அதனில் தோன்றுகின்றனவாகலின் பிராண வாயுவினிடத்தும் தோற்ற வொடுக்கங்களுக்கு ஆசிரயமாயிருக்கும் தன்மை பொருந்தும்" என்று பிரதி பக்ஷி கூறுவது யுக்தமாகாது. ஏனெனில், இந்திரியங்களுக்கு மாத்திரமே அவ்வாறு ஜாக்கிர சுஷுப்தி காலங்களில் பிராணனில் தோற்ற வொடுக்கங்கள் காணப்படுகின்றனவேயன்றி "சர்வாணி ஹவா இமானி பூதானி" என்னும் வாக்கியத்திற் சொல்லியிருப்பதுபோல, எல்லாப் பிராணிகளுக்கும் அத்தகைய தோற்ற வொடுக்கங்கள் காணப்படுவதில்லை.

இந்திரியங்களுக்கும் கூட ஆத்மாவினிடத்தில் லயம் கூறுவதே யுக்தமாகுமன்றிப் பிராண வாயுவினிடத்துக் கூறுதல் யுக்தமன்று.

"யதாஸுப்த: ஸ்வப்நம் நகஞ்சந பஸ்யத் யதாஸ்மிந்
ப்ராண ஏவை கதா பவதி ததைநம்வாக் ஸர்வைர்நாமபிஸ்
ஸஹாப் யேதி."

"சுஷுப்தியிலுள்ளவனாகிய ஜீவன் யாதொரு சொப்பனமும் காணாதவனாகி எப்பொழுது பிரம்மத்தினிடத்தில் ஐக்கியத்தை யடைவானோ அப்போது எல்லா விஷயங்களுடன் வாக்கு முதலாகிய இந்திரியங்களும் அதனிடத்தில் லயமடைகின்றன" என்று சுருதி போதிப்பதால் உறக்க நிலையிலுள்ள ஜீவனுக்கும் அவனுடைய வாக்காதி இந்திரியங்களுக்கும் பிராணனிடத்தில் லயம் உண்டாகின்றதென்று ஏற்படுகின்றது. அத்தகைய லயத்திற்கு ஆசிரயமாக வுள்ள பிராணம் பிராணவாயுவே என்பது பொருத்தமற்ற வாதமாகும். ஆதலால் பிராணன் என்னும் பதம் பரப்பிரம்மத்தையே குறிக்கும் என்பது சந்தேகமற்ற விஷயமாம்.

10-வது ஜ்யோதிரதிகரணம்.

24-வது சூத்திரம். அவதாரிகை:—

சாந்தோக்கிய உபநிடதத்திலுள்ள கீழ்காணப்படும் வாக்கியத்தில் "ஜோதி" என்னும் பதம் எந்த ஜோதியைக் குறிக்கின்றது? (1) ஆதித்தனை (சூரியனை)யா? (2 பஞ்ச பூதங்களு ளொன்றான அக்கினியையா? (3) ஜடராக்கினியையா? (வயிற்றினுள்ளிருக்கும் அக்கினி ஜடராக்கினி எனப்படும்) (4) பரப்பிரம்மத்தையா? என்பது ஆராய்ச்சிக் குரியதாகின்றது. ஏனெனில், அந்த பதம் (ஜோதி) ஆதித்தனைக் குறிக்கு மென்றும், பூதாக்கினியையே குறிக்கும் என்றும், ஜடராக்கினியையே குறிக்கும் என்றும் வெவ்வேறு விதமாகப் பொருள் கொள்ளுவர்.

அவ்வுபநிடத வாக்கியம் இது:—

"அதயதத: பரோதிவோ ஜ்யோதிர்த்தீப்யதே விஸ்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷ்வ நுத்தமே ஷுத்தமேஷு லோகேஷ்விதம்
வாவதத்யதித மஸ்மிந்நந்த: புருஷேஜ்யோதி:"

"காயத்ரியை யாதாரமாகக்கொண்ட பிரம்மோபாசனையை ஒரு புருஷன் கைக்கொண்டால் முடிவில் அப்புருஷன் உடலுக்குள் ஒரு தேஜஸ் விளங்குகின்றது. அது தேவலோகத்திற்கும் மேலாகப் பிரகாசிப்பது; பிராணிவர்க்கங்களின் மீதும் பூவுலகின் மீதும் இவற்றினும் மேலான எல்லா வுலகங்களின் மீதும் பிரகாசித்துக் கொண்டிருப்பது" என்பது இவ்வாக்கியத்தின் பொருளாம்.

இவ்வாக்கியத்திலுள்ள "ஜ்யோதிஸ்" என்னும் பதம் (1) ஆதித்தனையே குறிக்கும் (2) பூதாக்கினியையே குறிக்கும் (3) ஜடராக்கினியையே குறிக்கும் எனத் தனித்தனி வாதிப்போர் காட்டும் காரணங்கள் வருமாறு:—

(1) "ஜ்யோதிஸ்" என்னும் பதம் ஆதித்தனையே குறிக்கும் என்பதற்குக் காரணங்கள் வருமாறு:—உலக விருளைப் போக்குபவன் ஆதித்தனே. அதனால் அவன் ஜோதி என்னும் பெயரா லழைக்கப்படுவது மிகப் பிரசித்தமான விஷயம். பிரம்மத்திற்கு ஜோதி என்னும் பெயர் பொருந்தாது. ஏனெனில், பிரம்மமோ வடிவம் முதலியன இல்லாதது. வடிவம் இல்லாத வொன்று பிரகாசிக்கின்றன என்பது பொருத்தமற்ற வாதம். மேல் சாந்தோக்கிய வாக்கியத்தில் "தீப்யதே" (பிரகாசிக்கின்றது) என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. தவிர, சுருதி ஜோதிப் பொருளுக்கு ஆகாயம் எல்லை என்று குறிக்கின்றது. பிரம்மத்திற்கு இவ்வாறு எல்லை கூறப்படுவது பொருந்தாதல்லவா? சூரிய னல்லவா ஆகாயத்தை எல்லையாக வுடையவன்? ஆதலால், 'ஜ்யோதிஸ்' என்னும் பதம் சூரியனைக் குறிப்பதாகுமே யன்றி பிரம்மத்தைக் குறிப்பதாகா தென்றறிக.

(2) பூதாக்கினியையே குறிக்கும் என்போர் காட்டும் காரணங்கள் வருமாறு:—

மேற்காட்டிய விஷய வாக்கியத்தில் "விஸ்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு நுத்தமேஷுத்தமேஷு லோகேஷு." என்னும் வாக்கியம்

இருக்கிறது. அதில் ஜோதிக்குச் சர்வாதாரத் தன்மை கூறப்பட்டிருக்கிறது. பிரம்மம் நிராஸ்ரயமானது. சூரியனுக்கும் சர்வாதாரத் தன்மையில்லை. அன்றியும், அவ்வாக்கியத்தில் "ஜ்யோதிர் தீப்யதே" "அக்கினி பிரகாசிக்கிறது" என்னும் பிரயோக மிருக்கிறது. இத்தியாதி காரணங்களால் "ஜ்யோதிஸ்" என்னும் பிரம்மத்தையோ ஆதித்தனையோ குறிக்காமல் அக்கினியையே குறிக்கும் என்பது தெளிவாகின்றதே.

(3) ஜடராக்கினியையே குறிக்கும் என்பதற்குரிய காரணங்கள் வருமாறு:—

மேல் காட்டிய வாக்கியத்தில் "அந்தஃ புருஷே ஜ்யோதிஃ" என்னும் வாக்கியப் பிரயோக மிருக்கிறது. இதற்கு "புருஷனுக்குள்ளே இருக்கும் ஜ்யோதிஸ்" என்பது பொருள். ஆகவே, புருஷனுக்குள் ஜோதி ஜடராக்கினியேயாகும். மேலும்,

"தஸ்யைஜா த்ருஷ்டிஸ் தைஸ்யெக்ஷிஸ்ருதிஃ"
"ததேஷத் த்ருஷ்டஞ் சஸ்ருதம்ஷோ த்யுபாஸீத"
"சக்ஷுஷ்யஸ்யஸ்ச ஸ்ருதோ பவதி."

என்னும் சுருதி வாக்கியங்கள் "தேக பரிசத்தா லுண்டாகும் உஷ்ணமும் செவி கோசுகத்தா லுண்டாகும் ஒலியும் ஜடராக்கினியின் அடையாளங்கள்" என்றும், "பார்க்கத் தக்கதும் கேட்கத் தக்கது மென்று ஒருவன் அதனை உபாசிப்பானுல் அவன் பார்வைக்கு அழகானவனுகவும் கீர்த்திமானுகவும் இருப்பான்" என்றும் கூறுகின்றன. ஆகலின், "ஜ்யோதிஸ்" என்னும் பதம் ஜடராக்கினியையே குறிக்கின்றதென்று நிச்சயமாகின்றது.

(4) "ஜ்யோதிஸ்" பதம் பிரம்மத்தைக் குறிக்காதென்பதற் குரிய வேறு காரணங்கள் வருமாறு:—

"முற்காட்டிய பிராணுதி காரணம் ஆகாசாதி காரணம் இவற்றில் பிரம்ம லக்ஷணம் சொல்லப்பட்டிருத்தல் போல, இங்கு விஷய வாக்கியத்தில் பிரம்ம லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கவில்லை. இதற்கு முன்புள்ள வாக்கியங்களில் சொல்லப்பட்டிருப்பினும் அவ்வாக்கியங்களை யனுசரித்து இந்த வாக்கியங்களிலும் சொல்லப்படவில்லை. எப்படி யெனில், இந்த விஷய வாக்கியத்திற்கு முந்திய வாக்கியம் "காயத்ரீவா இதக்ஸர்வம் பூகம்" (சர்வப் பிரபஞ்சமும் காயத்ரி சொரூபமே) என்பது. இதற்கு முன்புள்ளது "த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" (அமிர்தத்திற்கு ஆகாசம் ஆதாரம் என்னும் வாக்கியம். இவற்றில் பிரம்ம லக்ஷணம் பேசப்படவில்லை. ஆகலின், விஷய வாக்கியத்திலுள்ள "ஜ்யோதிஸ்" சப்தத்திற்கு ப்ராகிருத (உலக சம்பந்த) ஜோதியே கொள்ளத்தக்க பொருளாம் என்பது திண்ணம்."

"எண்வகை மலர்கள்"

—:(o):—

(ஆரியூர். வ. பதுமநாப பிள்ளை.)

'மலர்' என்ற சொல்லைச் சொல்லும்போதே, நமது மனம் மலர்கின்றது! மலரின் இயற்கையழகில் ஈடுபட்டு நிற்கும்போது, நமது அகமும் முகமும் ஒருங்கே மலர்கின்றன! கண்களுக்கும் கருத்துக்கும் ஒருங்கே பெருங்களிப் பூட்டும் அழகிய பொருள்களில், மலர் தனிப்பெருஞ் சிறப்புடையதாக விளங்குகிறது. அழகிற் சிறந்த நறுமண மலர், தனது வடிவினுல் காண்போர் கண்களுக்கும்—மனோகரமான வாசனையில் நாசிக்கும்—மென்மைத் தன்மையால் கைகளுக்கும் ஒருங்கே பெருமகிழ் ஆட்டுவதாக இலங்குகிறது. மனிதர் மட்டுமேயன்றி, தேவதைகளுங்கூட மலர்களின் மேல் பெருவிருப்பம் கொண்டிருக்கின்றனர். உயிர்களைப் படைக்கும் நான்முகன், செந்தாமரை மலரின்மேல் வீற்றிருப்பதால் 'மலரோன்' என்று கூறப்படுகிறான். உயிர்களைக் காத்தருளும் திருமால், தனது உந்தியின்மேல் சீரிய செந்தாமரை மலரைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். சம்மார கர்த்தாவாகிய சிவபெருமான், தமது முடி சடை முடியாக இருந்தும்—அம்முடியின்மேலும் கொன்றை மலர்களையும் வெள்ளெருக்கம் பூக்களையும் சூடிக்கொண்டு விளங்குகிறார். பொருட் செல்வத்திற்கு அதிதேவதையாகிய திருமகள் செந்தாமரைமலரின் மேலும், கல்விச்செல்வத்திற்கு அதிதேவதையாகிய கலைமகள் வெண்டாமரை மலரின் மேலும் வீற்றிருக்கின்றனர். இவ்வண்ணம் மனிதர்களுக்கும் தேவதைகளுக்கும் ஒருங்கே பெருமகிழ்வூட்டக் கூடிய ஒப்பற்ற அற்புத வசீகர சக்தி, மலர்களிடம் இயல்பிலேயே அமைந்து விளங்குகின்றது. இன்னருள் வடிவினனாகிய இறைவன் எழுந்தருளியிருக்கும் நமது இருதயத்தை, நமது முன்னோர் தாமரை மலருக்கு ஒப்பிட்டு வருணித்துளர். ஆண்டவனது திருவடிகளும், கமலமலரோடு ஒப்பிட்டு வருணிக்கப் படுகின்றன. 'இருதய கமலம்' 'பாதாம்புஜம்'—என்ற சொல்வழக்குகளின் சீரிய தத்துவங்கள், நன்றி ஆராய்ந்து உணர்ந்து மகிழ்வதற்கு உரியனவாகும். இறைவன் உறையும் அகக் கோயிலுக்கும் அவனது திருவடிகளுக்கும் உவமையாகக் கூறக் கூடிய ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் சிறப்பைப் பெற்றுள்ள மலர்களின் மாண்பை, கேவலம் எழுத்துக்களால் எவ்வண்ணம் விளக்கிக் காட்டமுடியும்?

மணத்திலும் அழகிலும் சிறந்த மலர்கள் பலவகைப் பட்டனவாக இருப்பினும், அவற்றுள் எட்டுவகைப்பட்ட மலர்கள் இறைவனது திருவுள்ளத்திற்குப் பெரிதும் உகந்தனவாக சிறப்பித்துக் கூறப்படுகின்றன. பெரியாழ்வார் திருமொழியிலே—அசோதைப் பிராட்டி கண்ணபிரானை மலர் சூட அழைக்கும் திருமொழியிலே—1-செண்பகப்பூ; 2-மல்லிகைப்பூ; 3-பாதிரிப்பூ; 4-செங்கழுநீர்ப்பூ; 5-புன்னைப்பூ; 6-குருக்கத்திப்பூ; 7-இருவாட்சிப்பூ; 8--கருமுகை (நீலோற்பலப்)பூ எனும் எண்வகை மலர்கள் சிறப்பா

கக் குறிக்கப் படுகின்றன. கருணைக்கடலாகிய இறைவனது திருவுள்ளத்திற்கு இவ்வெண்வகை மலர்களும் மிக உகந்தனவாகச் சிறப்பித்துக் கூறப்படுவதே போல், எட்டுவகைப்பட்ட சீரிய குணங்களும் பெரிதும் இன் பூட்டக் கூடியனவாக இருப்பதால், அவ்வெண் குணங்களையும் 'அஷ்டஞான புஷ்பங்கள்' என்று மெய்யன்பர்கள் சிறப்பித்துக் கூறுகின்றனர். செண்பக மலர் முதலிய எண்வகை மலர்களும் புறப்பூசையிலே இறைவனது திருவுள்ளத்திற்கு எவ்வண்ணம் இன்பூட்டுவனவோ, அவ்வண்ணமே அகப்பூசையிலே 1-கொல்லாமை; 2—ஐம்பொறி அடக்கல்; 3—பொறுமை; 4-அருள்; 5-அறிவு; 6 வாய்மை; 7—தவம்; 8—அன்பு எனும் எண்வகைக் குணங்களும் என்றென்றும் இறைவனது திருவுள்ளத்திற்குப் பெருமகிழ்வூட்டக் கூடிய—எக்காலத்திலும் வாடாத—சீரிய ஞானமலர்களாகச் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. அத்தகைய சிறப்புடைய எண்வகைப்பட்ட ஞானமலர்களைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

1—கொல்லாமை

இறைவனது திருவருளை எய்துவிக்கக் கூடிய சிறந்த நெறிகளில், 'அஹிம்சா தர்மம்' எனப்படும் 'கொல்லா நெறி' சிறந்த தொன்றாகும். இவ்வுண்மையை அறிவுறுத்தவே, தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும் "நல்லாறு எனப்படுவது யாதெனின், யாதொன்றும்—கொல்லாமை சூழும் நெறி"—என்று அறிவுறுத்தியருளினார். சைவானுபூதி கைவரப் பெற்ற தவப்பெருஞ் செல்வராம் தாயுமானவரும்,

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்; மற்(று)
அல்லாதார் யாரோ? அறியேன் பராபரமே!"

என்று அருளிச் செய்தார். ஏனைய நாடுகளுக்கில்லாத தனிப்பெருஞ் சிறப்பை நமது பாரத மணித் திருநாட்டுக்கு அளித்தது, 'அஹிம்சா தர்ம'மேயாம். ஏனைய நாட்டினர் பலரும் கொலை—களவு—கொள்ளை—யுத்தம் முதலிய ஹிம்சை முறைகளையே தத்தமது நாட்டின் முன்னேற்றத்திற்கு உரியவழிகளாக மேற்கொண்டிருக்க, நமது பாரதமணித்திரு நாடு ஒன்று மட்டுமே அஹிம்சா தர்மத்தைத் தனக்கெனச் சிறப்பாக உரிய சீரிய தர்மமாக இன்றளவும் மேற்கொண்டு வந்திருக்கிறது. நமது நாட்டினரை உய்விக்கத் தோன்றிய சாந்த மூர்த்தியாகிய காந்தியடிகளும், 'அஹிம்சா—தர்மம் ஒன்றே நமது நாட்டை உய்விக்கக் கூடியது' என்னும் உண்மையை இன்றும் அறிவுறுத்தி வருகிறார்.

ஆனால், இக்காலத் தமிழ்நாட்டிலே கொள்ளை—கலகம்—யுத்தம் முதலிய ஹிம்சை முறைகளை நிகழாதவாறு அரசாங்கத்தார் தடுத்துவந்தும், அஹிம்சா தர்மம் எங்கும் பரவியிருக்கிறது என்று சொல்வதிற்கில்லை. ஒரு மனிதனை மற்றொரு மனிதன் அடித்தால் சிறைத்தண்டனையும்—கொன்றால் மரண தண்டனையும் விதிக்கும் அரசாங்கத்தினர், வாயில்லாத ஏழைப் பிராணிகளை விரும்பியபோ தெல்லாம் கொன்று குவிக்கும் கொடியோரைத் தண்டிக்க எவ்வித சட்டமும் செய்தபாடில்லை. தற்காலத் தமிழ்நாட்டிலே, அருள்வடிவான தெய்வத்தின் பெயரால்—ஞானசொருபமான வேதங்களின் பெயரால்—அன்புமயமான சமயத்தின் பெயரால் உயிர்க்கொலைகள் நடைபெற்று வருவது சர்வசாதாரணமாக இருந்துவருகிறது. வாயில்லாத ஏழைப்பிராணிகளைக்

கொல்வதில், சாஸ்திரப் பயிற்சியற்ற பாமரர்கள் மட்டுமன்றி—சாஸ்திரப் பயிற்சி மிக்க பண்டிதர்களுங்கூட கலந்துகொண்டிருப்பது, மெய்யன்பர்களின் மனத்தைப் பெரிதும் புண்படுத்துவதாக இருக்கிறது. 'தேவர்களை மகிழ்விக்கும் யாகங்கள்' எனும் பெயரால் பிராமணர்களில் சிலரும், 'கிராம தேவதைகளை மகிழ்விக்கும் பூசைகள்' எனும் பெயரால் பிராமணரல்லாதாரில் பலரும் இன்றைய தமிழ்நாட்டில் உயிர்க்கொலையில் தலைப்பட்டிருக்கின்றனர். "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின், ஒன்றன்—உயிர் செகுத்(து) உண்ணாமை நன்று"—எனும் நாயனாரது அருள்மொழியை, அவர்கள் சிறிதும் பொருட்படுத்துவதாகக் காணோம். எவ்வுயிர்க்குந் தாயாகிய இறைவன் ஏழைப் பிராணிகளின் உயிர்ப்பலியை ஏற்றுக்கொண்டு மகிழ்வானென்று கருதுவோர், 'பகவத்—பக்தர்' எனும் சிறப்புக்குச் சிறிதும் உரியவராகார் என்பது உறுதி.

'அஹிம்சா தர்மம்' எனப்படும் 'கொல்லா நெறி' இறைவனது திருவுள்ளத்தைப் பெரிதும் மகிழ்விக்கக் கூடிய சீரிய ஞான மலராகும். அம்மலரால் ஆண்டவனைப் போற்றி வழிபடுவது அவனது திருவுள்ளத்திற்கு இன்பூட்டுமேயன்றி, ஏழைப் பிராணிகளைப் பலியிட்டு நடத்தும் யாகங்களும் செய்யும் பூசைகளும் அப்பெருமானைச் சிறிதளவும் உகப்பிக்கக் கூடியனவாகா. அதற்கு மாறாக, இறைவனது அருளைப்பெற உயிர்ப்பலியைத் துணையாகக் கருதுவோர், அப்பெருமானது கொடிய சினத்திற்கே உரியவர்களாகி, இம்மையில் கேவலமான பழிப்பையும் மறுமையில் கொடிய நரகானுபவத்தையுமே அடைவார்களென்பது உறுதி. ஆதலின், 'இறைவனது திருவருளுக்கு உரியவர்களாக நம்மை நாமே பண்படுத்திக் கொள்வதற்காகவே, நமக்கு ஆண்டவனால் மனிதப் பிறவி வழங்கப்பட் டிருக்கிறது' என்னும் உண்மையை, இன்றைய தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் தத்தமது மன—மலரில் இருத்திக் கொண்டு, 'அஹிம்சா—தர்ம' மாகிய சீரிய ஞானமலரால் இறைவனது இன்னருளைப் பெற்றுய்ய முயலுதல் வேண்டும்.

"கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவ(து) என் இச்சை பராபரமே!"—

என்றபெரியாரின் ஆர்வத்தை, இன்றைய தமிழ்நாட்டில் வாழும் எல்லோரும் மேற்கொண்டு, நமது தெய்வத் திருவருள் மணக்கும் செந்தமிழ்நாடு முழுவதும் சீரிய அஹிம்சா தர்மம் பெரிதும் செழித்தோங்கி வளருமாறு தீவிரமாக உழைக்க உறுதி கொள்ளவேண்டும்.

2—ஐம்பொறி அடக்கல்

மெய்—வாய்—கண்—மூக்கு—செவி எனும் ஐம்பொறிகளுக்கும் தாம் அடிமையாக இராமல், அவற்றைத் தமக்கு அடிமைப்படுத்திக் கொள்வோரே மெய்யறிவுடையோர் ஆவர். ஐம்பொறிகளுக்கு அடிமைப்பட்டு—ஆசை எனும் பெருங்கடலில் சிக்கி—மன அமைதியை இழந்து இரவும் பகலும் இடையறாத பெருங்கவலை உடையவர்களாக இருப்போர், இக்காலத்தில் எண்ணிறந்தோராக இருந்து வருகின்றனர். அவ்வைம்பொறிகள் நமது அறிவை அடிமைப் படுத்திக்கொண்டு விடும்படி விட்டுவிடுவோமானால், நமது அகத்தில் அமைதி என்பதே சிறிதும் இல்லாமற் போய்விடும். ஆதலின், அவ்வைதி

பொறிகளையும் அடக்கியாண்டு சீரிய நன்னெறியிற் செலுத்த முயல்வது, மனிதராகப் பிறந்த நமக்கு உரிய கடமைகள் எல்லாவற்றிலும் தலை சிறந்ததாகும்.

"மெய் வாய் கண் மூக்குச் செவி எனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்—கை வாய்
கலங்காமல் காத்(து) உய்க்கும் ஆற்றலுடையான்
விலங்காது வீடு பெறும்"—

("மெய்—வாய்—கண்—மூக்கு—செவி என்று கூறப்படும் ஐம்பொறிகளையும் அவற்றால் விளையும் ஆசைகளையும் நல்லொழுக்க நெறியில் செலுத்தி கலக்கமடையாமல் காத்துக்கொண்டு வாழ்வு நடத்துவோன், பேரின்பப் பெருவீடாகிய முத்தி பெறுவது உறுதி")—என்பது நாலடியார். 'நான் செய்கிறேன்'—'நான் அனுபவிக்கிறேன்'—என்ற ஆணவத்தை நமது அகத்தினின்றும் அகற்றிவிட்டு, "அருள் வடிவினனாகிய ஆண்டவனே! என்னை ஒரு அற்பக் கருவியாகக் கொண்டு, எல்லாவற்றையும் நீயே செய்விக்கிறாய்; ஆதலின், நானும் எனது ஐம்பொறிகளும் எனது உடைமைகளும் உன் ஒருவனுக்கே அடிமைப்பட் டிருக்கிறோம். எனது ஐம்பொறிகளுக்கும் நான் அடிமைப்பட்டு வருந்தி—அமைதி இழந்து—ஆசை மிகுந்து உழலும்படி என்னை விட்டுவிடாமல், இவற்றை நீயே உனக்கு அடிமைப் படுத்திக் கொண்டருளத் திருவுள்ளம் இரங்கியருளவேண்டும்."—என்று இறைவனைக் குறித்து ஹிருதய பூர்வமான உண்மைப் பக்தியுடன் ஒவ்வொருவரும் பிரார்த்திக்க வேண்டும்.

வையத்திலுள்ள நிலையற்ற பொய்யின்பப் பொருள்களில் ஆசையைப் பெருக்கி நம்மைப் பலவழிகளிலும் உழல்விக்கக் கூடிய ஐம்பொறிகளை, மாய இன்பப் போர்வை போர்த்திக்கொண்டு நம்மை மயக்க முயலும் உலக சுகானுபவங்களில் செல்ல விடாமல் தடுத்துக் காத்து, அவற்றை அருட்பெருங்கடலாகிய ஆண்டவன் விஷயத்திலேயே செலுத்த முயல்வோமாயின், அவற்றை அடக்கியாள்வதும் எளிதில் சாத்தியமாகும்; அகத்திலும் கவலை சிறிதும் சேராமல், அமைதியான இன்பமே நிலவிக்கொண்டிருக்கும்; ஆன்மாவும் உய்வடையக் கூடும்.

அவ்வாறு அவ்வைம்புலன்களை அடக்கியாள்வதற்கும், அருட்பெருங்கடலாகிய ஆண்டவனது திரு அருள் துணையையே நாடுதல் வேண்டும். இறைவனது திரு அருள் துணையின்றேல், ஐம்பொறிகளை அடக்கியாண்டு வெற்றி பெறுவது அரிதாகும். "ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத ஓர் ஐவர் வன் கயவரை—என்று யான் வெல்கிற்பன் உன் திருவருள் இல்லையேல்?"—என்றார் நம்மாழ்வாரும். ஆதலின், "தலையே! நீ தலைவர்க்கெல்லாம் தனிப் பெருந்தலைவனாகிய இறைவனது இணையடிகளையே வணங்கி மகிழ்வாய். கைகாள்! அருள் பொழியும் திருக்கையினனாகிய ஆண்டவனையே தினந்தோறும் தொழுது மகிழுங்கள். வாயே! நீ எப்பொழுதும் இறைவனையும் அவனது மெய்யடியாரையுமே துதித்து உன்னை உய்வித்துக்கொள். கண்களே! "பூணா மார்வனைப் புள்ளூரும் பொன்மலையைக்—காணாதார் கண் என்றும், கண்ணல்ல கண்டாமே!"—என்ற ஆழ்வார் அருள்மொழியைக் கவனித்து இறைவனது திருவருள் வடிவை நோக்கி நோக்கி இன்புறுங்கள்; பரமனது

மெய்யடியார்களைக் கண்டு களிப்புறுங்கள். மூக்கே! இறைவனது இணையடிகளின் சம்பந்தம் பெற்ற மலர்களை முகர்ந்து மகிழ்ந்து, பகவத்—சம்பந்தம் பெற்ற பொருள்களின் மணத்தையே சிறந்த மணமென மதிக்கக் கடவாய். செவிகளே! "தோளாத மாமணியைத் தொண்டர்க்(கு) இனியானைக்—கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே!"—என்ற ஆழ்வார் அருள்மொழியைக் கவனித்து, எப்பொழுதும் இறைவனது இன்னருட் பெரும்புகழை இனிதில் உணர்த்தும் புண்ணிய கதைகளையும் அருளனுபூதிச் செல்வர்களாகிய மெய்யடியார்களின் அன்பு கனிந்த துதிகளையும் கேட்டு ஆனந்தியுங்கள்."—இவ்வாறு, மெய்—வாய்—கண்—மூக்கு—செவி எனும் ஐம்பொறிகளையும் ஒவ்வொருவரும் பரம கருணாநிதியாகிய பரமாத்மாவைப் பற்றிய விஷயத்திலேயே செலுத்த முயல்வார்களானால், அவற்றை அடக்கி ஆளக்கூடிய சக்தியையும் ஒப்புயர்வற்ற பேரின்பத்தையும் பெற்று உய்வார்கள் என்பது உறுதி.

3.—பொறுமை

எவ்வளவு காலமாகப் பெருமுயற்சி செய்தாலும், எது எது எவ்வெக் காலத்தில் நிறைவேற வேண்டுமென்பது இறைவனது திருவுள்ளமோ, அது அது அவ்வக்காலத்தில் தான் நிறைவேறும். வேலைகளைச் செய்யவேண்டியது நமது கடமையேயன்றி, நாம் அவற்றின் பலாபலன்களில் இச்சைமிகுந்து ஏங்கி நிற்கக்கூடாது. "செய்த்தலை எழும் நாற்றுப்போல் அவன் செய்வன செய்து கொள்க"—என்று நம்மைப் பற்றிய கவலை முழுவதையும் நமது தனிப் பெருந்தலைவனாகிய இறைவனிடமே ஒப்புவித்து விட்டு, அவனது திருவுள்ளத்திற்கினிய செயல்களைச் செய்து கொண்டிருப்பதே நமக்கு உரிய கடமையாகும்.

"தைரியங்கொண்டு அபாரமான பொறுமையைப் பெற்றிரு. பொறுமை எதையும் வெற்றி கொண்டுவிடும்"—என்றார் ஒரு பெரியார். பகவத்—பக்தியில் ஈடுபடும் மெய்யன்பர்களுக்கு, பலவகைப்பட்ட சோதனைகள் இடையூறுகளாக நேர்வது இயல்பு. அவற்றைக் கண்டு சிறிதளவும் அகம் கலங்காமல், எத்தகைய நிலையிலும்—எப்பொழுதும் பொறுமையோடு இருக்க வேண்டுவது அத்தியாவசியம். நாம் செய்யும் செயல்களின் வெற்றியும் தோல்வியும் நமது திறமையைப் பொறுத்தனவாகவன்றி, நமது கார்யபலனையும் இறைவனது திருவுள்ளத்தையுமே பொறுத்தனவாக இருக்கின்றன. நமது முயற்சிகள் வெற்றி பெறும்போது, இறைவனது திருவருளைச் சிறிதும் கருதாமல் செருக்குறுவதும்; அவை தோல்வியுறும்போது, பொறுமை இழந்து இறைவனைப் பலவாறு பழிப்பதும் அறிவுடையோர்க்குச் சிறிதும் பொருந்துவனவாகா.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல, தம்மை—இகழ்வார்ப் பொறுத்தல் தலை"—என்பது நாயனார் அருள்மொழி. பிறரால் எவ்வளவுதான் கோபமூட்டப் பட்டாலும், பொறுமையினின்றும் சிறிதும் வழுவாதிருக்கக் கூடிய மன உறுதியைப் பெற்றோரே 'மெய்யன்பர்கள்' என்ற சிறப்புக்கு உரியோராவர். அத்தகைய மெய்யன்பர்கள், தங்களது வாழ்வில் நேரும் பலவகைப்பட்ட சோதனைகளையும் பிறரது பழிப்புரைகளையும் அடிக்கடி நேரும் தோல்விகளையும் கண்டு சிறிதளவும் சிந்தை கலங்காமல்—பக்தி நெறியில் உறுதியிருந்தோராய் நடந்துகொண்டு, இறைவனது இன்னருளுக்கு இலக்காகி ஒப்புயர்வற்ற பேரின்பத்தைப் பெற்று உய்வர். ஆதலின், 'பொறுமை' எனும்

ஞானமலர், இறைவனது இன்னருளைப் பெற்றுய்ய விரும்பி நிற்கும் மெய்யன்பர்களது பக்திக்குப் பெரிதும் துணை செய்யக் கூடியதாகும்.

4—அருள்

அருள் வடிவினனாகிய இறைவனது திருவருளைப் பெற முயல்வோர், மற்ற உயிர்களிடம் அருளுடையோராக இருக்க வேண்டுவது அவசியம். மக்களிடமும் மற்ற உயிர்களிடமும் அருளில்லாத எவரும், இறைவனது திருவருளைப் பெறுவது அரிதே. பொருட் செல்வமில்லாதவர்களுக்கு இவ்வுலகத்திய சுக—போக அனுபவங்கள் வாய்ப்பது அரிதாக இருப்பதைப் போல், அருட் செல்வமில்லாதவர்களுக்கு மறுமையில் இறைவன் திருவருள் கிடைப்பது அரிதாகும். எறும்பு முதல் நான்முகன் வரையிலுள்ள எல்லா உயிர்களிலும் அருட்பெருங் கடலாகிய ஆண்டவன் அந்தர்யாமியாக நின்று அனைத்துயிர்களையும் ஆட்டிவைத்து வருவதால், மெய்யன்பர்கள் எல்லாவுயிர்களிடமும் என்றென்றும் அருளை மேற்கொண்டு வாழ்வர். அருளனுபூதிச் செல்வராகிய தாயுமானவப் பெருந்தகையாரும்,

> "எவ்வுயிரும் என் உயிர்போல் எண்ணி இரங்கவும், நின்
> தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே!"

—என்று இறைவனை நோக்கி முறையிட்டு நின்றது கவனித்தற்கு உரியது.

"அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை, இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல்"—; "மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப—தன்னுயிர் அஞ்சும் வினை"—எனும் பொய்யிற் புலவரது பொன்மொழிகளுக்கு இணங்க, அருள் நிரம்பிய அகத்தினராகிய அன்பர்களுக்கு, இம்மையிலும் மறுமையிலும் எத்தகைய அச்சமும் இல்லை; எவ்வித கவலையும் இல்லை. மற்றவர்களிடம் எவன் அருள் மிகுந்து நிற்கும் அகமுடையனவாக இருக்கிறானோ, அவனுக்கு ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் சிறப்புடைய இறைவனது திருவருள் துணை கிடைப்பது உறுதி. ஆதலின், இறைவனது திருவருளைப் பெற முயலும் மெய்யன்பர்களுக்கு, அவர்கள் மற்றவர்களிடம் கொள்ளும் 'அருள்' பெரிதும் துணை செய்யக் கூடிய சீரிய ஞான மலராகச் சிறந்து விளங்குகின்றது.

5—அறிவு

"உள்ளம் சென்ற விடத்தில் உடம்பைச் செல்லவிட்டு மன அமைதி இழந்து அல்லல் படாமல், நன்மை தீமைகளைப் பகுத்து உணர்ந்து தீமை பயப்பனவற்றை அகத்தினின்றும் அகற்றி நன்மை தருவனவற்றைக் கடைப்பிடிப்பதும்; எப்பொருளை எவரெவர் வாயினின்றும் கேட்க நேர்ந்தாலும், அப்பொருளின் மெய்ப்பொருளை நன்கு ஆராய்ந்து உண்மை உணர்வதும்; எளிதில் விளங்காத அரும் பொருள்களையும் பிறர் மனத்தில் எளிதிற் பதியும்படி இனிது விளங்கச் சொல்லி, மற்றவர்கள் சொல்வனவற்றிலுள்ள நுண்ணிய அரும்பொருள்களைக் கவனித்துக் கண்டு களிப்பதும்; அன்பிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்த பெரியோரது நட்பைப் பெறுவதும்; செல்வம் வந்த போதும் இன்பம் எய்திய போதும் அவற்றால் செருக்குறாமலும், வறுமை வந்தபோதும் துன்பம் மிகுந்தபோதும் அவற்றால் மனங் கலங்காமலும் —என்றும்—எந்நிலையிலும் ஒரு மனத்துடனிருப்பதும்; உலகத்திலுள்ள

உயர்ந்தோர் எவ்வாறு நடக்கிறார்களோ, அவ்வாறே அவ்வுயர்ந்தோரது சீரிய நன்னெறியைப் பின்பற்றி நடப்பதும் அறிவின் தன்மை"—என்று அருட்பெருஞ் செல்வராகிய நாயனார் அறிவுறுத்தியுள்ளார்.

> "நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும்—தன்னை
> நிலை கலக்கிக் கீழிடுவானும்—நிலையினும்
> மேன்மேலுயர்த்து நிறுப்பானும்—தன்னைத்
> தலையாகச் செய்வானும் தான்".

—என்ற நாலடியார்க் கிணங்க, 'ஒருவன் என்றென்றும் தன்னை எல்லோராலும் புகழப் படுவதற்கு உரிய உயர்ந்த நிலையிலேயே நிலைபெற்றிருக்கச் செய்து கொள்வதும்; அவ்வுயர்ந்த நிலையைக் கெடுத்துக்கொண்டு, தன்னை அந்நிலையிலிருந்து கீழாக்கிக் கொள்வதும்; முன்னிருந்த நிலையிலிருந்து இடையறாத முயற்சியின் பயனாக தனது நிலையை மேன்மேலும் உயர்த்திக்கொண்டு, தன்னை ஏனைய எல்லோரும் புகழக் கூடியவாறு பெருமை மிகுந்து சிறப்புறுவதும் அறிவின் துணை கொண்டே'—என்னும் உண்மையை ஒவ்வொருவரும் கவனித்து உணர்ந்து கொள்ளவேண்டும்.

மேலும், நிலையாத பொய்யின்பப் பொருள்களில் ஆசை மிகுந்து நிற்கும் பேதைமையை அகத்தினின்றும் அறவே அகற்றிவிட்டு, என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய மெய்ப் பேரின்பத்தை அளிக்கத் தக்க இறைவனது திருவருளைப் பெற முயல்வதிலேயே இடையறாத ஆர்வம் உடையோராக இருப்பதும்; தெய்வத் திருவருள் பெற்ற மெய்யன்பர்களது சீரிய நூல்களை ஆராய்ந்து, அவற்றில் அறிவுறுத்தப்படும் சீரிய உண்மைகளை உணர்ந்து சத்துவ சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பதும்; 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'—என்னும் நோக்கத்துடன், தான் கண்டறிந்த உண்மைகளை மற்றோருக்கும் வெளியிட்டு அறநெறிக்கு மாறுபட்ட வாழ்வு நடத்துவோரைச் சீர்திருத்த முயல்வதும் இன்னோரன்ன பிற பலவும் மெய்யறிவிற் சிறந்த அன்பர்களது சீரிய கடமைகளாகும். இவ்வாறு, 'அறிவு'ம் ஆண்டவனது திருவருளைப் பெறுவிக்கக் கூடியனவற்றில், சிறந்ததொரு ஞானமலராக விளங்குகின்றது.

6—வாய்மை

உள்ளும் புறமும் ஒத்தவர்களே உத்தம பக்தர்களாவர். சொல்லும் செயலும் ஒன்றோடொன்று முரண்படாத வாழ்வு நடத்துவோரே, தெய்வத் திருவருளைப் பெறுவதற்கு உரிய மெய்யன்பர்கள். உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசும் கள்ள உள்ளத்தினரிடம், உலகிலுள்ள பேதைகள் சிலர் ஏமாறக் கூடுமாயினும் மெய்யறிவுடையோர் சிறிதும் ஏமாற்ற மடையார். அத்தகைய கள்ள உள்ளத்தினர் தமது நடிப்பின் திறமையினால் வெளியிலுள்ள சிற்சிலரை ஏமாற்றிவிடக் கூடுமாயினும், உள்ளத்திற்குள் உறையும் இறைவனை ஏமாற்றிவிட முடியாதன்றோ? "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம், பூதங்கள்—ஐந்தும் அகத்தே நகும்" —என்றார் நாயனாரும்.

புறத் தூய்மைக்கு நீராடுவது எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வாறே அகத் தூய்மைக்கு வாய்மை கடைப்பிடிப்பது மிக்க இன்றியமையாத தாகும்.

எல்லாவற்றையும் உணர வல்லவனாகிய இறைவன், சத்திய வடிவினனாக விளங்குகிறான். ஆதலின், பொய்மை உரைக்கத் துணிவோர் எவரும் அவனது திருவருளைப் பெறுவது அரிதென்பதும்; சத்திய சன்மார்க்கத்தில் ஈடுபடுவோர் அவனது திருவருளைப் பெறுவது உறுதி என்பதும் சாத்திரங்கள் பலவும் அறிவுறுத்தும் பேருண்மையாகும். தற்காலம் காந்தியடிகள் அறிவுறுத்தி வரும் 'சத்தியாக்கிரகம்' என்பது, 'வாய்மை கடைப்பிடித்த'லேயாகும். "எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்—பொய்யா விளக்கே விளக்கு"—எனும் அருள் மொழி, இறைவனது திருவுள்ளத்தை உகப்பிக்கக் கூடியனவற்றுள் 'வாய்மை' என்பது சிறந்த ஞான தீபமாகவும்; என்றும் வாடாத சீரிய ஞான மலராகவும் விளங்குகிறது என்னும் உண்மையை நன்கு உணர்த்துவதாகும்.

7—தவம்

காவியணிந்து காட்டிலிருந்து காய் கனி தின்று காலங்கழிப்பதே 'தவம்' என்பது பலர் நினைவு. ஊழ்வினைப் பயனாலும் பிறாது சூழ்ச்சிகளாலும் தம்மை வந்தடையும் துன்பங்களைக் கண்டு துணிவை இழந்து மனம் கலங்கி நிற்காமல், அவற்றைச் சிறிதும் கலங்காத மன உறுதியுடன் வரவேற்றுப் பொறுத்துக்கொண்டு தமது கருமங்களை ஒழுங்காகச் செய்வதும்; மற்ற உயிர்களுக்கு மறந்தும்—மனத்திலும்—துன்ப மிழைக்கக் கருதாமையுமே 'தவம்' என்ற தனிப்பெருஞ் சிறப்புக்கு உரியனவாகும். நெருப்பு சுடச்சுட மாசற்று ஒளி சிறந்து விளங்கும் பொன்னைப் போல், குற்றமற்ற தூய தவம் செய்வோரைத், துன்பங்கள் வருத்த வருத்த, அவர்களது பகவத்—பக்தி பெரிதும் உறுதி பெறுகிறது. எனவே, தவத்திற் சிறந்தோர் தங்களது தவத்திற்கு இடையூறாக எய்தும் துன்பங்களைக் கண்டு மனங் கலங்காமல், அவை தமது பக்தியின் உறுதியைச் சோதிக்க இறைவனால் அனுப்பப்பட்டவையே என்பதை உணர்ந்துகொண்டு அவற்றைப் பெரு மகிழ்வோடு வரவேற்கக் கூடிய பலத்தைப் பெறுகிறார்கள்.

ஹிருதய பூர்வமான உண்மைப் பக்தியுடன் இறைவனை வழிபடுவோர் யாவரும், தவம் செய்வோரேயாவர். அத்தகைய மெய்யன்பர்கள், பின்வரும் பெரியாரின் மணிமொழிகளை தங்களது ஹிருதய கமலத்தில் நன்கு பதிய வைத்துக் கொள்வார்களாக:—

"நமது தனிப்பெருந் தலைவனாகிய இறைவன், நம்மைச் சுற்றிலும் சாந்தியையும் அருளையும் வாரி இறைப்பான். அவனுடைய பிரியமான குழந்தைகளான நம்மிடம், அவன் தனது இயல்பான அன்பைச் செலுத்தத் தவற மாட்டான். அலைகள் வந்து போய்க் கொண்டிருக்கும்—சுகம், துக்கம் எனும் அலைகள்; அவை நமது ஆத்ம வளர்ச்சிக்கு மிகவும் நல்லவை. திடமாக நில். எது வேண்டுமாயினும், வந்து போகட்டும்; நீ பாறையைப் போல் உறுதியுடன் நின்று, உன்னிலும் உனது இஷ்ட—லக்ஷ்யத்திலும் நம்பிக்கையுடன் இரு. நம்பிக்கை, ஆத்ம தியாகம் ஆகிய இவைகளால் தான் உண்மையை அறிய முடியும்; பயனற்ற தர்க்க வாதங்களாலும் புத்தி விசேஷத்தாலும் அதை அடைய முடியாது"

8—அன்பு

"அன்பின் வழியது உயிர்நிலை; அஃது இ(ல்)லார்க்கு—என்பு தோல் போர்த்த உடம்பு"—என்றார் நாயனார். இறைவனது திருவுள்ளத்தைப் பெரிதும் மகிழ்விக்கக் கூடிய ஞான மலர்களில், ஒன்றே ஒப்புயர்வற்ற தனிப் பெருஞ் சிறப்புடையது. அன்புடையோர் அனைத்தும் உடையோராவர்; அன்பில்லார், எதை உடையவராக இருப்பினும், ஒன்றும் இல்லாதவரையே ஒப்பவராவர். ஆதலின், இறைவனது திருவருளைப் பெற விரும்பும் ஒவ்வொருவரும் இறைவனிடமும் அவனது மெய்யடியார்களிடமும் அவர்கள் அருளிய அருள் நூல்களிடமும் இடையறாத பேரன்பு உடையோராக வாழ்தல் வேண்டும்.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனும் குடில் புகும் அரசே!
அன்பெனும் வலைக்குட் படு பரம் பொருளே!
அன்பெனும் கரத்(து) அமர் அமுதே!
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே!
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே!
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே!
அன்புருவாம் பர சிவமே!"

—எனும் அருட்பா ஒன்றே, அன்பெனும் ஞான மலரின் ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் சிறப்பை இனிது விளக்கிக் காட்டப் போதியதாகும்.

சகோதரிகளே! சகோதரர்களே!! இதுகாறும் கூறிவந்த எண்வகை ஞான மலர்களைக் கொண்டு ஹிருதய பூர்வமான உண்மைப் பக்தியுடன் இன்னருள் வடிவினனாகிய இறைவனை வழிபட்டு, அருட்பெருஞ் சோதியாகிய ஆண்டவனது திருவருளுக்கு இலக்காகப் பெற்று, ஒப்புயர்வற்ற—என்றுங் குன்றாத—பேரானந்தத்தை எல்லோரும் அனுபவிப்போம், வாரீர்! வாரீர்!!

"கந்த மாமலர் எட்டு மிட்டு நின்காமர் சேவடி கைதொழு தெழும்
புந்தியேன் மனத்தில் புகுந்தாயைப் போகலொட்டேன்!"
—திருமங்கை யாழ்வார்;

"நாமடீர் நாள் தோறும்—வாடா மலர் கொண்டு
பாடீர் அவன் நாமம்—வீடே பெறலாமே!"
—நம்மாழ்வார்.

ஔவையார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அகிலாம்பிகை அம்மையார்.)

இனி ஏற்பதிகழ்ச்சி என்பது. இதை வேறு பல அறிஞர்களு எவ்வளவு கண்டிக்கக் கூடுமோ? அவ்வளவும் கண்டித்து வெறுத்திருக்கின்றனர். இதனைப் புகழேந்தியாரும்,

> "சினக்கதிர் வேற்கண் மடவாய் செல்வர்பாற் சென்றீ
> எனக்கென்னும் இம்மாற்றம் கண்டாய்—தனக்குரிய
> தானம் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
> மானம் துடைப்ப தோர்வாள்."

என்றார். ஒருவரை யடுத்து ஈ—கொடுப்பீராக என்று கூசாது கேட்கும் ஓரெழுத்தொரு மொழியானது தானம் துடைத்துத் தருமத்தை வேர் பறித்து மானம் துடைப்பதாகிய வாள் என்னும் ஆயுதம் போலும் என்றார். இங்கே தானம் என்றது தனது தகுதிவாய்ந்த நிலைமை என்பதைச் சுட்டுகின்றது. வடமொழியில் இதனை ஸ்தானம் என வழங்குவர். அடுத்தபடி தருமம் என்பது நீதியையே குறிக்கும் இதன் விவரம் அறஞ்செய விரும்பு என்ற நீதித்தொடருக் கெழுதிய விளக்க உரையிற் கண்டிருத்தலால் ஈண்டு விளக்க வேண்டுவதன்றாம். அத்தகைய நீதியினை வேரையே பறித்து மாய்ப்ப தென்றருளினார். இதனால் இரப்பது நீதியின்பாற் பட்டது அல்லவென்பதும் தெளிவாகின்றது. இம்மட்டோடும் அமையாமல் மானம் தனது மரியாதை, அல்லது மதிப்பு இதனைத் துடைப்பதாகிய கூர்மையாகிய வாளாயுதம் என்றும் குறிப்பிட்டார். யாசிப்பது ஒரே செய்கை யாயினும் அதன் பயனாக மூன்றுநலங்கள் அழிந் தொழியுமென்று தெரிகிறது. பதவி, நீதி, மதிப்பு என்னும் அம் மூன்றும் உயிரினும் சிறந்த தென்பதை உணராதார் இல்லை. இதனை விட ஒருபடி மேலேறிப் பொறுமைக்கு இலக்கண புருஷராகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் அதிக வன்மையுடன்,

> "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற்
> பரந்துகெடுக உலகியற்றி யான்."

எனப் பிரமனைச் சபிக்கின்றார். ஏன்? உலகில் இரப்பவரை நோக்கி இத்

தொழில் இழிவு. தொழில் செய்து மானத்துடன் வாழ்மின் என்று எல்லோர் கூறுவாராயின் அதற் கவர் இரத்தல் என்னும் தொழிலை பிரமனே எங்கள் தலையில் எழுதி யிருக்கின்றார் என்று கூசாமல் (இரந் திரந்து மானம் அழிந்து சோம்பல் மிகுதியாகி) விடை பகர்கின்றார். இது இன்றும் கண்கூடு. இது குறித்தே வள்ளுவனார் பிரமன் இரத்தலை யொரு ஜீவனமாக விதி செய்திரார். அப்படிச் செய்திருப்பின் அவரும் பிறர்க் கிழைத்த தீமை தனக்காகித் தானும் இரக்கும் தொழிலை யேற்று உலகில் அலைந்து திரிவானாகுக என் றழுத்தமாகக் கூறினார். எனவே மூவரில் ஒருவனாகிய பிதாமகன் இன்றளவும் பிச்சை யெடுத்து அலைந்ததைக் கண்டிலம். ஆதலின் பிச்சை யெடுத்தலை ஒரு தொழிலாக அவர் விதித்தது மில்லை என்பது பெறப்படுகின்றது. இனிப் பிறர் உதவியை நாடுவது மனிதன் கடமையல்ல. கடவுளையே சரண்என நம்பும் துறவியர்க்கும் மன அமைதியாளர்கட்கும் வேண்டும் உதவிகள் வலிந்தெய்துவ துறுதி. பற்றும், அவாவும் அற்றவர்கட்கு வேண்டுவன அறிந்து விரும்பிச் செய்தல் பற்றுடையார் (இல்லறத்தார்) கடமை யாகும். அதனால் இழி வென்பதில்லை. இத் தகைய முறையில் ஈகையே மறுமையைத் தரும் ஞானத்திற்கு வித்தாகும். அன்பினாற் கட்டுண்டும் பெரியோர் பலர், உத்தமர்களின் உதவியை மறுக்க முடிவதில்லை. இது கருணைபற்றி ஏற்பதாகும். இவ்வாறன்றி மெய்வருந்திப் பிறர் தேடும் பொருளைத் தாம் மெய் வருந்தாது எளிதாக இரந்தேற்ப தென்பதைப்போல இழிவைத் தரும் செய்கை வேறில்லை என்பதை இளமையிலிருந்தே அகத்திற் பதியச் செய்தல் அவசியம்.

இதனைக் கவிவேந்தர்,

> "இன்னுயிரேனும் கொள்ளுதல் தீது
> கொடுப்பது நன்றால்."

என் றறிவுறுத்தினார். அற்றேல் இரப்போர்க்குக் கொடுப்போரே இல்லாமல் செய்வது நலந்தருமோ? என்றும் வினா எழலாம். அது கூடாது. இந்து மதமே பரோபகாரம், நிஷ்காமியச் செயல் இவைகளின்மேல் நிலைபெற் றிருப்பது. இரப்போர்களுக்கு இரக்கும் செயல் இழிவாயினும் கொடுப் போர்க்குக் கொடைத்தொழில் சிறந்ததே யாகும். அதனை மறுப்பது மேல் நாட்டு நாகரிகத்தின் பயனாக முளைக்கும் உணர்ச்சி யாகும். கேட்டவர்கட்கு மறாது வழங்கி இந்நாட்டில் இரப்போர் தொகையைப் பெருக்கி விடுகின்றனர் என்று தாக்குவோரும் உளர். அவ்வாறு பேசுவோர்கள் ஆத்ம சகோதர இரக்கத்தினால் உதவாச் சிறு பொருளையும் பிறர்க்குத் தருவதில்லை. உலோபிகள் வாதமே யது. அன்னார் சமூகத்தில் உழைத்து இரப்போர்களுக்கு உதவக் கூடிய பொதுநிலையங்களை அமைத்திட முயல்வாராயின் போற்றப் படுவர். தொழில் செய்யும் உறுப்புக்களின் நலம், உடல் நலம் இழந்த ஆதுலர்களை இரங்கி ஆதரிக்க வேண்டுவது செம்மையாளர்களின் கடமைதான். ஆனால் அத்தகையாரும் இரந்திரந்து மான மிழக்காமல் கடவுளை நம்பி அமைதி கொண்டிருப்பது தலைக்கடனாகும். கடவுளின் எல்லையற்ற கருணையில் நம் பிக்கை குன்றியதன் காரணத்தினாலேயே இப்பிறவியில் மனிதர் உதவிக்குக் கையேந்தும் வறுமை வாய்ப்பதென்பது உறுதி. இங்கு சிவப்பிரகாச சுவாமிகள் "கொடுப்போர்க்கு இரப்போர் இல்லாத குறையொன் றுளது கூறுங் கால்" என்று புகன்றிருப்பதும் சிந்திக்கத் தக்கது. என்னை? ஒருநாடு சிறந்

புற வேண்டுமெனின் இரப்போர் தொகை குறையவேண்டுமென்பதே அதன் கருத்து. கொடுப்பவர் மிகுந்திருப்பது அருள் நிறைந்த செல்வ நாடாகும். ஈண்டு ஔவையார் வெகு நயமாகவும் நுட்பமாகவும் இரப்பது இகழ்ச்சியென்று கூடப் பேசாமல் ஏற்பது இகழ்ச்சி என்றார். என்னே மொழிகளை அமைக்கும் நயம்! வலிந்தொருவர் கொடுக்க முன்வரினும் இரு கரங்களுமேற்று வாங்கத் துணிவது இகழத் தக்கதே யென்றருளினார்.

இதுபற்றி, "தாழ்வில், கனக்கரியானது கைத்தலம் தனக்கியலா வகை தாழ்வது என்னில், எனக் கிதன்மேல் நலம் யாது கொல்" என்று மாபலி தன்னைத் தடுத்த குருவாகிய சுக்கிரபகவானை நோக்கிக் கூறினான்.

அதாவது யாசிக்க வேண்டிய அவசியம் சிறிதுமில்லாத திருமகள் தலைவனாகிய புருஷ சிரேஷ்டனே தனது கையை (வஞ்சனையாக வேனும்) தாழ்த்தினான் என்றால் இதைவிடச் சிறப்பு தனக்குப் பிறிதில்லை என்கின்றான். கொடையின் பெருமையையும், ஏற்பதின் சிறுமையையும் நன்குணர்ந்த நம்பி மாபலி யாதலினால் தனக்கு வரக்கூடிய நாசத்தையும் பொருட்படுத்தாது உற்சாகத்துடன் வழங்கத் துணிந்தான்—இதனாலேயே நமது பெருமாட்டியார் ஏற்பது (மூவரில் ஒருவராயினும்) இகழ்ச்சி யென்றார் போலும். அதையும் நீ ஏற்காதே என்று ஆணையிட்டுத் தடுக்காமல் இகழ்ச்சி என்று மென்மைபடக் கூறினார். எத்தகையோராயினும் அவர் மனம் புண்படப் பேசுவது மூதாட்டியார்க்கு உடன்பாடன்று. மொழிகளை ஆளும் முறையு மன்று. தவிரத் தவறிழைப்போரைத் திருத்த முயல்வோர் கடிந்து மொழிந்து திருத்தினார் என்பது இவ்வுலகில் எக்காலத்திலும் இல்லை. பெருமாட்டியாரே,

"பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது
நெட்டிருப்புப் பாறைக்கு நெக்கு
விடாப்பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்."

என்றருளி யுள்ளார். நெடுகிலும் இம்முறையையே கைக்கொண் டியம்பி வைத்திருப்பது கூர்ந்து நோக்குவோர்க்குப் புலனாகும். இது பெண்மைக்கியல்பாய் அமைந்த தனிச் சிறப்பாகும் என்பதை மறப்பதற்கில்லை. தவிர அறிவு முதிர்ந்து பக்குவம் அமையப் பெறாத நிலையில் உண்மையான காரணம் பற்றியும், இன்றியமையாத சமயத்தும் ஒரு சமையம் அன்பும் இரக்கமும் உடையார் உதவும் ஒன்றை வணக்கத்துடன் ஏற்கவும் வேண்டும் நிலை வரலாம். ஆனால் அதுவும் பிறகு இகழ்ச்சிக்கே இடம் தரும் என்பதை மட்டில் உணர்த்தினாரே தவிர அப்படி ஏற்றவர் மனம் உடைந்து புண்பட ஏதும் புகல விரும்பினாரில்லை. சிலர் ஈசனே இரக்கும் தொழிலை மேற்கொண்டதாகப் புராண கதைகள் கூறுவதால் அது சிறப்பே என்றும் தம்முட் கருதி உலகை வஞ்சிக்கும் போலிவேஷதாரிகளாய் நம்நாட்டில் உலவி வருகின்றனர்.

மாபலியிடம் திருமால் இரந்தது மண்ணாசையினால் அன்று. ஈசன் இரந்ததும் பிற ஆசைகளினால் அன்று. அறத்தை நிலைநிறுத்தவும் மெய்யன்பர்களின் பந்த நிவர்த்தியை உலகில் விளக்கவுமே ஆதலின் இக்குழுவினர் காட்டும் புராண கதைகளின் மேற்கோள்கள் அவர்க்குப் பொருந்துவன வன்று. பொருளாசையினால் பெண் வேடம் புனைந்துகொண்ட தனது சகாவான

பிரமசாரியை மனைவி யென இயம்பி ஓர் பிரமசாரி ஸத்தியவிரத சீலையாகிய சீமந்தனி என்னும் அரசியிடம் தம்பதி பூசைபெற எண்ணினான். அச்சூதையறிந்த பேரறிவுடைய பெண்ணரசி இவர்களை உமையும் சிவமுமாகவே பாவனை செய்து தானம் உதவினாள். இவர்கள் அதனைப்பெற்று மீண்டதும் போலி வேடம் உண்மைப் பெண்ணாகவே மாறியது கண்டு திடுக்கிட்டு வருந்திப் பிறகு அவ்விரத சீலையிடமே சென்று தம் குற்றத்தை வெளியிட்டு இரங்கிப் புலம்பினர். அவ்வம்மையாரும் கருணை கூர்ந்து தனது பதிவிரதா பலத்தினால் பழைய ஆண்வடிவம் பெறுமாறு அருள் புரிந்து விடை யளித்தனர் என்பதைப் பிரமோத்ர காண்டத்தால் அறிகிறோம். இவர்கள் செய்தது பொருளாசை பற்றியது. ஆசைபற்றிய தாதலின் துன்பம் விளைந்தது.

திருமாலும் சிவபெருமானும் செய்தது நல்லோர் நலம் பெறும் பொருட்டுப் பெருங்கருணையினால். ஆகவே இஃது போற்றித் துதிக்கும் புராண கதையாகியது. கொடுப்போர்க்குப் புண்ணிய பலனை யளிக்கவும் அவர்கள் பழவினைகளால் விளைந்த துயரங்களைத் தீர்க்கவுமே இப்போலி வேடதாரிகள் இவர்களிடம் யாசிக்க வந்திருப்பதாக நடிக்கின்றனர். இவ் வினத்தார் அஞ்சாது வழிப்பறி செய்யும் பரம்பரைக் கள்வரினும் கொடியர். இவ்வித கூட்டத்தினருக்கு உதவுவது அறமாகாது தானமாகாது என்பதை ஆயிரம் தடவை கூறினும் பிழை யாகாது. நம்நாட்டில் சில முக்கிய க்ஷேத்திரங்களில் அவ்வநாகரிகக் குழுவினரை வெகு எளிதாகக் காணலாம். அசுத்தமும் கூடா ஒழுக்கமும் ஒருங்கே கொண்ட இவர்களைத் திருத்துவதைவிடச் சிறந்த புண்ணியம் பிறிதில்லை யென்றே தோன்றும். இவர்கள் பசிப்பிணியால் நொந்து இரங்கும் நிலையில் இருப்பவர்களு மன்று. இதனை விவரிக்கிற் பெருகும்.

இனி அடுத்தபடி பெருமாட்டியார் "ஐய மிட்டுண்" என்றருளினார் மேலே கூறிய ஏற்ப திகழ்ச்சி என்ற தொடரினால் பிறனுக்கு இகழ்ச்சியை வருவிப்பதற்குக் காரணம் நாம் இடுவது ஆதலினால் அதைத் தவிர்ப்பது அறம் என்று கொடுப்போர் எண்ணாமல் இருக்கும்படி எச்சரிக்கை செய்தது போல அதனை யடுத்து "ஐயம் இட்டுண்" என்ற நீதித்தொடர் அமை[illegible]னது. இதனாலேயே உணவுப் பசியைத் தணித்தல் ஒன்றே ஏனைய மு[illegible]பத்திரண்டு அறங்களைவிடச் சிறந்த தென்பது பெறப்படுகின்றது. தேவைக்[illegible] மிஞ்சி உதவும்படி சொல்லியதாகவும் இதனால் ஏற்படவில்லை. தேவைய[illegible] பூர்த்தி செய்து பிறகு நீ புசி என்று அருளியதாகவும் கொள்ள முடியாது ஏற்போர் நிலைமைக் கிரங்குவதுபோல இடுவோரின் நிலைமையையும் [illegible]துக்கி அவ்வவர்களின் இயல்புக் கேற்பப் பிச்சை யிடு என்றருளி யுள்ளா[illegible] ஐயம் என்பது ஒரு கைகொண்ட அன்னத்தையே மிகுதியும் உணர்த்து[illegible]றது. சுருங்கிய செல்வரும் பிச்சையாகிய கவள உணவைப் பசித்திரக்[illegible] ஒருவருக்கு இடுவதால் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பது மூதாட்டிய[illegible] நோக்கம் போலும். இத்தகைய அன்னம் இடுவதிலும் பற்பல வகையா[illegible] அபிப்பிராயங்கள் நம்நாட்டில் உண்டு. மகாபாரதத்தில் அருச்சுனனின் அ[illegible] பாவத்தை அகற்ற வேண்டிக் கண்ணபிரான் ஒரு பக்கம் பொன்மயமாகி ம[illegible] பக்கம் அவ்வண்ணம் ஆகாமல் இயற்கையோடு தருமபுத்திரரால் செய்[illegible] பட்டு ராஜசூய யாகத்தில் அமுதருந்திய கோடிக்கணக்கான வேதியர்களி[illegible] இலைகளிற் புரண்டு உருண்டிருந்த ஓர் கீரிப்பிள்ளையை நோக்கியதாகவும் [illegible] வாறு அக்கீரி புரள்வதன் காரணத்தை அருச்சுனனை வினவச் செய்ததாக[illegible]

கம்பரின் கவித் திறமை

கோதாவரி ஓவியம்

(ஜமதக்னி.)

கவியென்பவன் அற்புத சக்தி வாய்ந்த ஓர் சித்திரக்காரன் ஆவன். அவனது கவி ஒவ்வொன்றும் கொள்ளையின்பம் கொடுக்கும் அழகிய ஓவியமே. சித்திரம் வரைதற்குத் தலைமையுடைய விசித்திரப் பொருளும் தகுந்த கருவிகளும் தேவை. சராசரப் பொருள்களில் தன் மனத்தைக் கவரும் பொருள்களை வரைய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பவை கவிக்குத் திரை, கோல் ('பிரஷ்') திறங்களாக அமைகின்றன. எப்பொருளை வரைய முற்படுகின்றானோ அப்பொருளாகவே அவன் மாற வேண்டும். இது புதுமையாகத் தோன்றும். ஒரு பொருளில் லயம் ஏற்படுமாகில் ஒருவன் தன்னை மறக்கின்றான். தனக்கும் அப்பொருளுக்கும் யாதொரு வேற்றுமையும் தோன்றுவ தெங்ஙன் ? இந்நிலை யாவருக்கும் ஏற்படாததால் பலர் கவிகளாகவும் சித்திரக் காரர்களாகவும் அமைவதில்லை. கம்பன் போன பின்னர் அவனது சிம்மாதனத்தில் அமரத் தகுதி யுடையோன் இதுவரை தோன்றியதில்லை.

கம்பன் வரைந்த சித்திரங்கள் எண்ணில், ஒவ்வொன்றும் நுண்ணியது; கூர்த்த மதியாலேயே ஆழ்ந்து அனுபவிக்கற்பாலது. அவனது சித்திரங்களை யனுபவிப்பதற்கு ஓர் தனித்த மூளை வேண்டும். அவற்றை யனுபவிக்கும் சமயத்து நாமும் ஓவியக் காரர்களாகி விட்டோம் என்று தோன்றும். எனினும் நமது ஈனம் பின்னரே புலப்படும். அவனுடைய சித்திரங்களை அனுபவிக்க முடியுமே யன்றி அவற்றில் ஆயிரத்தில் ஒரு பங்கு அழகுடைத்தானவற்றை எழுத யாவரால் இயலும் ?

கோதாவரி நதியின் சித்திரத்தை நெஞ்சை யள்ளும் விதத்தில் புனைந்துள்ளான் செஞ்சொற் கவிஞன்.

"புவியினுக் கணியா யான்ற பொரு(ள்) தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைக(ள்) தாங்கி யைந்திணை நெறிய ளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

என்று தீட்டியதன் காரணத்தை ஆய்ந்தால் எல்லையற்ற இன்பம் எய்தும். சான்றோர் கவி (1) பல அலங்காரங்கள் உடையதாய் உயர்ந்தோர் பலரால் நன்கு மதிக்கப்படும்; (2) அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப்பொருள்களின் தன்மை யுணர்த்தும்; (3) படிப்போருக்கு நுண்ணறிவு பயப்பதல்லாமல் அறிவைக்கொண்டு ஆராய ஆராய ஆழ்ந்த பொருள் புலப்படுத்துதலாலும் அறிவுக்கு உரியதாயிருக்கும்; (4) கேட்போருக்கு மகிழ்ச்சி தரும் சிருங்கார ரசமாகிய அகப் பொருள் தன்மையைக் கூறும் (5) புணர்தல், இருத்தல், பிரிதல், இரங்கல், ஊடல் முதலிய ஐந்து ஒழுக்கங்களைத் தெரிவிக்கும்; (6) மயங்க வைத்தல் என்னும் குற்றத்தை நீக்கி விளங்க வைத்தல் எனும் அழகையுடையதாய் செம்மையாகப் பொருள் விளக்கும்; (7) தீய வொழுக்கத்தைக் கடிந்து நல்லொழுக்கத்தை நாட்டுவதன்றி இனிய வோசையோடு தட்டின்றிச் செல்லும் நடை யுடையது.

ஓர் சிறந்த நதியின் மாண்புக ளென்ன வென்று நோக்குக.

(1) உலகத்திற்கு அழகைக் கொடுப்ப தல்லாமல்,

"விலகி வில்லுமிழ் விரிகதிர் மணிபல வான்றி
பொலன் முகட்டுயர் பொன்னெடுங் குன்றின் வீழருவி
குலவு வெண்திரைக் குரைகடல் உடுத்த பார் மடந்தை
அலர்முலைத் துலைத் துயல்வரு ஆரம் ஒத்துளதால்"

என்று நைடதக்காரர் சொன்னது போன்று பூமிக்கு முத்தாரம் போற் பொலிந்து பெருநதியாகித் திகழ்தல்; (2) மணி, பொன், சந்தனம் முதலிய சிறந்த மலைபடு பொருள்கள் தந்து தனது பெருக்கால் விளைவுப் பொருள்கள் விளைத்தல்; (3) வயல்களுக்கு உரியதாய்ப் பெருகுதல்; (4) ஆங்காங்கே நீராடுதற்குக் குளிர்ந்த துறைகள் உடையதா யிருத்தல்; (5) குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனும் ஐந்து வகை நிலங்கள் வழியாகச் செல்லுதல், (6) தனது உட்பொருள் விளங்குமாறு படிகம் போல் தெளிந்திருத்தல்; (7) ஜீவ நதியாதலால் குளிர்ந்த நீரோட்ட முடையதா யிருத்தலுமாம். இத்தகைய மாண்புகளெல்லாம் கோதாவரி நதியில் குறைவுபடாமல் மலிந்து கிடந்தன.

சான்றோர் கவிக்கும் கோதாவரி நதிக்கும் உள்ள பண்புகளைச் சிலேடையாக ஓரே கவியில் புதுமை பெறும்படி வர்ணித்துள்ளார் செந்தமிழ்ப் பாவலர். கம்பராமாயணத்தில் அற்புதமான கவிகளில் இஃதொன்று. சான்றோர் கவியின் மாண்பை உரைக்கப் புகுந்தவர் தன்னை யறியாது தன் கவியின் இலக்கணம் விளக்கிப் போந்தார் ! தான் ஒன்று நினைத்து ஒன்றைத் தெரிக்கப் புகும்போது தனக்குத் தெரியாத அரிய பொருளையும் உடன் கூறி விடுகின்றார். இதுவே அருட்கவியின் பெற்றி.

கோதாவரி நதி உயிரில்லாப் பொருள்களின் பாற்படும். அதை உயிருள்ளதாகப் பாவித்துப் பெண்பாலாக்கிச் சில அரிய கற்பனைகள் சித்திரிக்கின்றார். உயிரில்லாப் பொருள்கள் மாந்தர் வாழ்க்கையில் (உணர்வில் தொடர்பு கொண்டிருப்பதாகக் கற்பித்து; அவை நன்மைக்கு மகிழ்தலும் தீமைக்குத் துயருறுதலுங் கொண்டு இயங்குவதாகப் படிப்போர் நினைக்குமாறும் இயற்கையாக நிகழும் செயல்கள் மக்களின் செயல்களைப் போன்று தோன்றுமாறும் குறித்தல் பெருமை வாய்ந்த கவிச் சித்திரமாகும். இதை மேல் நாட்டார் Pathetic Fallacy, (தற்குறிப்பேற்றம்) என்பர். ஜீவன் இல்லாப் பொருள்கள் உணர்ச்சியுடன் இயங்குவதாகப் பொருத்தமுடன் வர்ணித்து மனத்திற்குப் பேருணர்ச்சியை யூட்டுதல் கவியுலகின் சிறந்ததோர் நெறியாகும்.

மன்னன் மைந்தரும் மருகியும் நதியை நண்ணியதும் ஆங்கு வந்தனம், முகமன் உள்ளிட்ட பதினாறு உபசாரங்களும் நிகழ்ந்தனவாம். அஞ்சன வண்ணன் முதலிய மூவராக நாம் மாறினாலன்றி அது நமக்குப் புலப்படாது. ஆற்று வெள்ளத்தில் மிதந்து வரும் அலர்ந்த தாமரை நதியின் மலர்ந்த முகமாகவும், கமலங்களின் அருகருகே நிமிர்ந்து பூத்திருக்கும் நறுமணமுள்ள நீலோத்பல மலர்கள் கண்களாகவும் முறையாக வரும் அலைகள் ஆற்றின் கைகளாகவும் அலைகளால் கரையில் ஒதுக்கப்படும் பூக்கள் கைகளில் ஏந்திய மலர்களாகவும் நினைத்துக் கொள்ளுங்கள். இந்த நிலையோடு கோதாவரி நதி விரைவாகத் தணிந்து வருகின்ற தன்மை கண்டால் மிகு பெருமை வாய்ந்த மூவரின் வருகையால் கோதாவரி நங்கை சந்தோஷத்தால் முகமலர்ச்சியுற்று அன்புள்ள விருந்தினரின் வருகையையே உற்றுநோக்கிய வண்ணமாகத் தனது அழகிய கைகளால் அவரது தூய அடிகளில் மலர்கொண்டு அருச்சிப்பது போன்றிருக்கும் அன்றோ?

"வண்டுறை கமலச் செல்வி வாள்முகம் பெரிய வாச(ம்)
உண்டுறை குவளை யொண்கண் ஒருங்குற நோக்கி ஊழில்
தென்திரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச் செல்வர்க்
கண்டடி பணிவ தென்னப் பொலிந்தது கடவுள் யாறு."

இதுதான் முன் விளங்கிய சித்திரம்.

பின்வரும் சித்திரம் உள்ளத்தைக் கனியச் செய்து கண்ணருவி பாயச் செய்யும்.

"எழுவுறு காதலா(ல்) இங்கி வைத்திரைத் தேங்கி யேங்கிப்
பழுவநாட் குவளைச் செல்விக் கண்பனி பார்ந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்த(ம்) நோக்கி
யழுவது(ம்) ஒத்ததாலவ் வலங்குநீராறு மன்னோ,"

முகமன் கூறிக் குசலப் பிரசினை செய்து உண்மை அறிந்ததும் நற்செய்திக்கு மகிழ்ச்சியும் துக்க செய்திக்குத் துயரமும் அனுபவித்தல் மாந்தர் இயல்பன்றோ? இதுவும் கோதாவரிக்கு நிகழ்ந்ததாம்! அவதார புருஷன்; சக்கரவர்த்தித் திருமகன்; பேரழகன், மெல்லியலுடையன்; கூரிய முட்களும் கல்லும் உடைய கடுங்கானகத்தில் வாழ்ந்தவனல்லன்; கால் நடையாக வெய்யிலிலும் மழையிலும் நடந்தறியான்; மிகவும் மிருதுவான பஞ்சணையில் துயில்பவனே யன்றி வெட்டவெளியில் போதிய போர்வை முதலியன வின்றிக் கரடுமுரடான தரையில் உறங்கிய தில்லை; அறுசுவை யுண்டி யல்லால் இலை காய் கிழங்குகளைக் கண்டவனில்லை; கம்பீரமான அரசாட்சிச் செய்ய விருந்தவனைத் திடீரெனக் காட்டை யாளும் வினை சூழ்ந்து விட்டது. இதை யுன்னும் யார்தான் அழாதிருப்பார். "வள்ளல் வனம் புகுவான் என்ற மாற்றத்தால்"

கிள்ளையொடு பூவை யழுத கிளர் மாடத்
துள்ளுறையும் பூசையழுத உருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை என் சொல்ல!

....

ஏனைய அஃறிணைப் பொருள்கள் பேசாம லிருந்தனவோ?

"ஆவும் அழுத அதன்கன் றழுத அன்றலர்ந்த
பூவும் அழுத புனல்புள் ளழுத கள்ளொழுகும்
காவும் அழுத களிறழுத கால்வயப்போர்
மாவும் அழுத அம்மன்னவனை மானவே"

என்றால் பல சீரிய குணமும் செல்வமும் படைத்த கோதாவரி மங்கையென் பாடு படுவள்? மலர்ந்த கருங்குவளை மலர்களில் தேன் பெருகுதல் இயற்கை. விரைவாகச் செல்லும் நீர்ப்பெருக்கு மிகுந்த ஓசை யுடையதா யிருத்தலும் இயற்கையே. இவற்றைக் காணும் இராமனுக்கோ அல்லது இராமனின் நிலையில் நிற்கும் நமக்கோ எவ்வாறு தோன்றும்? சக்கரவர்த்திக் குமாரர் வனத்து வசிக்கும் துக்ககரமான செய்தியை நோக்கிக் கண்ணீர் மல்கி அவர்களிடத்துக் கொண்ட எல்லையற்ற அன்பினால் கூக்குரலிட்டு அழுவது போன்றிருந்ததாம். நமக்கொன்று நேர்ந்தால் நாமும் எத்தனை முறைகளில் இயற்கைப் பொருள்கள் நம்முடன் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வன போன்றிருப்பதைக் கண்டனுபவித் திருக்கின்றோம்.

இத்தகைய சுந்திர முறையில் ஆற்றின் பல்வளங்களையும் சிரமமின்றி வர்ணித்தது அதிசாமர்த்திய மாகும். இன்னும் இதர வளங்களைக் குதூகல முறையில் சித்தரிப்பதை யோர்ந்து களிக்க.

ஆற்றில் மிதக்கும் தாமரை மலர்களில் சக்கரவாளப் பறவைகள் ஆணும் பெண்ணுமாக இணை பிரியாமல் நெருங்கி அமர்ந்திருந்தன. கரைகளில் கணக்கற்ற நீல மணிகள் செறிந்த மணற் குன்றுகள் பார்ப்பதற்கு அழகான விதத்தில் கிடந்தன. இரட்டைச் சக்கரவாளங்களைக் காணும்போது இராமனுக்கு ஓர் ஆலோசனை தோன்றியதால் சீதையின் தனங்களைப் பார்த்தான். சீதையோ மணிகளின் செறிவால் நீலநிறம் வீசும் மணற் குன்றுகளைப் பார்த்து இராமனின் திரண்ட தோள்களை நினைத்தாள்.

இச் சித்திரத்தை விட மனோகரமானது மற்றொன்று அடுத்தாற்போ லுள்ளது.

"ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையளாகுஞ்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல்செய்தான்
மாதுஅவள் தானும் ஆண்டுவந்து நீருண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல்பூத்தான்"

இவர் ஆற்றங்கரையில் உற்சாகமாக சஞ்சரிக்கும்போது அன்னப்பறவைகள் (இயற்கையாக) ஒதுங்குவதைக் கண்டனன் இராமன். ஒன்று தோன்றியது அவனுக்கு. மாதருடைய நடை அன்னத்தின் கதிபோன்றிருக்கும். சீதை மங்கையர் திலகம் அன்றோ! அவளது நடைக்கு இவ்வுலகில் ஒப்புமையுண்டோ? ஆதலின் சீதையின் நடை கண்ட அன்னம் வெள்கி ஒதுங்குவதாக் காண்டல் எத்தனையும் தவறன்று. சீதை நடையின் மேன்மையையும் அன்னநடையின் தாழ்மையையும் உன்னிப் புன்முறுவல் செய்தான் கமலக்கண்ணன். சீதையின் நாட்டம் வேறாயிருந்தது. அங்கு வந்து நீர் வேட்கை தணிக்க மீளும் யானைக் குட்டியைக் கண்ணுற்றாள். இராமனது கம்பீர நடை

நினைவிற்கு வந்தது. உடனே அதைக் கவனித்தான். அவனுக்கு அவன் நடையே கம்பீரமாகத் தோன்றியது. அவனது அழகிய நடைக்குத் தோற்றே யானை ஒதுங்குவதாக நினைத்தான். இராமனது பீடு நடையின் பெருமையையும் யானை நடையின் சிறுமையையும் நினைத்து புன்னகை செய்திட்டான்.

வெள்ளத்தோடு அசைந்து வரும் கொடிகளைக் கண்ட காகுத்தன் ஒல்கி யொசியும் தன்மை யுள்ள சானகியின் இடையைக் கண்டான். கூட்டங்கூட்டமான நீலோத்பலங்களிடையே பூத்திருக்கும் தாமரை மலர்களைக் கண்ட சீதை கருத்த மேனியையும் கமலத்தைப் போன்ற அடி, கை, கண் முதலியன உடைய இராமனை நினைவுறுத்திக் கொண்டாள். இராம சீதையரின் ரசிகத் தன்மையும் கம்பனது சித்திரத்தின் மாண்பையும் நோக்குமின்!

இப்படிப்பட்ட தொரு தன்மையால் ஆற்றின் எண்ணிறந்த வளங்களைக் கண்டு இன்புற்ற வண்ணமாக ஓர் அழகிய சோலையில் சாலை சமைத்து அமர்ந்தனர். உலாம் மலர்களால் அப் பொதும்பர் மிகு குளிர்ச்சி தரும் பான்மையது. உலகின் குழப்பங்கள் இல்லாத இனிய தனித்த இடம். சிறிய தவத்திற் குரியது. ரசிகன் தகுதியுடையோனாகில் உலகில் எய்தப் பெறும் எல்லாவித போகங்களையும் ஆண்டு அனுபவிக்கலாம்.

"குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மாதராடும் அரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை அரச அன்னம் பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பிகாலைச் செவ்வழி முரல்வ சோலை."

மரத்தின் ஒரு கிளையில் குயில்கள் கலியாணஞ் செய்து கொள்கின்றன. அவ்வைபவத்தை அலங்காரஞ் செய்ய மற்றோர் கிளையில் மயில் அழகான நடனஞ் செய்கின்றது. இதன் முன் உலகில் நடந்தேறும் மன்றல் வைபவங்களில் நாடக மேடையில் நடிக்கும் மாதர்களின் நடிப்பு என்ன செய்யும்? இராஜ அரண்மனை, மெல்லணையில் சயனிக்கும் அரசன், வைகறையில் அவனை யெழுப்புவதற்காகப் பாடப்படும் இன்னிசைகள் எல்லாம் நாட்டில் தான் உண்டோ? தாமரை மலர்களில் துயின்றுகொண் டிருக்கும் இராஜ அன்னங்களைக் காலையில் புதிய தேன் பருக வரும் வண்டுகள் கொட்டித் தாத்த மனம் இசையாது செவ்வழி ராகம் பாடி யெழுப்புவது ஒவ்வொருவனுக்கும் கொள்ளை யின்பம் கொடுக்காதோ? மனம் இடங் கொடுக்குமானால் சோலைகளில் வேண்டியதைத் துய்க்கலாம். இத்தகைய இயற்கைச் செல்வங்கள் நிறைந்த காட்டில் இராம லக்ஷ்மணரைப் போன்ற நல்லறிஞருக்கு மகிழ்ச்சி யுறாமற் போகுமோ? ஆதலின் கம்பர் "அவ்வருவி நீராற்றின் பாங்கர் பனிதரும் படிவப் பஞ்சவடி யெனும் பருவச் சோலைத் தனியிடம் அதனை நண்ணி......இனிய பூஞ்சாலை யெய்தி இருந்தனன் இராமன்......" என்று பொறித்தது மிகவும் பொருத்தமாகும்.

மலரும் மணமும்.

(தென்னாபிரிகா, டர்பன் சரஸ்வதி சபைத் தலைவர்
திரு. சு. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.)

உலகிற் பற்பலரும் தந்தம் மனப் போக்குக் கேற்ப மலரின் குணத்தைக் கிரகிக்கிறார்கள். அது யாவர்க்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும். காமுகர்க்குக் காம இன்பம் விளைக்கும்; அதுபோலவே பெரியோர்க்கு மனத் தூய்மையும் அன்பையும் குறிப்பதுடன் இறைவனது பொருளையும் குறிக்கும்.

தாயுமான சுவாமிகள் கூறியபடி, சரியை—கிரியை—யோகம்—ஞானம் என்ற நான்கும்—அரும்பு—மலர்—காய்—கனி ஆக நான்கும் போலாகும். ஆகவே, மோட்ச சாதனமென்று சைவாகமங்கள் கூறும மேற்கூறிய நான்கும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாயும், ஒன்றை யின்றி யொன்று நிகழாததாயு மிருக்கின்றன.

இனி அவை மலர், கனி ஆக இரண்டு முக்கிய பொருள் ஆவனபோல், கிரியை—ஞானம் இரண்டும் முக்கியம். திராவிட சுருதியிற் புஷ்பங்கள் பூசைக்கு ஏற்றவென்று கிரியாபாதத்திற் கூறுகின்றபடி, புஷ்பத்தை இறைவன் விரும்புகின்றாரா என்றால், அப்பர் சுவாமிகள் தனித் திருக்குறுந்தொகையில் கூறுகிற "நெக்கு நெக்கு" என்னும் திருப்பாசுரத்திற் கூறிய பிரகாரம் புஷ்பங்கள் கொண்டுபோய்ப் பூசை செய்பவரை நாணி இறைவன் மறைந்தே நிற்பன். ஆனால் உள்ளன்பு கொண்டு அன்பர் செய்யும் பூஜையை ஏற்கிறான். இத்தகைய பூஜையில் சரீராரோக்கியம், மனத்தூய்மைகளுக்காகவும் புஷ்பங்கள் வேண்டப்படும். இந்தப் பூஜையையே ஞானபாதத்தில் வைத்துப் பார்க்கும்பொழுது எண்வகை பூக்கள் பூஜைக் குரிய என்று சொல்லப்படும். அவையாவன அன்பு முதலிய எண் குணங்களேயாம். இறைவன் எட்டிதழ்க் கமலத்தில் வீற்றிருப்பன் என்றால், மேற்படி எண் குணங்களும் பொருந்திய அனபர்களது ஹிருதயத்திலே வீற்றிருப்பன் என்பதாம்.

தருக்க நூலிற் கூறிய உபமானப் பிரமாணத்தைப் பின் பற்றி ஆராயும்பொழுது, மலர் மணம் என்னும் இரண்டும் பிரிக்கக் கூடியவையல்ல. இவற்றில் மலர் பொருள், மணம் அதன் குணம்; அதுபோல் இறைவனாகிய பொருளுக்கு "பூவண்ணம் பூவின் மணம்" என்று திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் கூறிய பிரகாரம், சத்து—சித்து—ஆனந்தம் என்னும் மூன்றும் குணங்கள். இவற்றை விட்டுப் பிரியான். இங்ஙனமாக தேவார—திருவாசகப் பாசுரங்களும் கூறுகின்றன. மேலும், ஒரு பொருளை உணர்ந்து தருக்க நூற்பிரகாரம் அவற்றின் பல குணங்களாலுமே யன்றிப் பொருளைத் தனியே உணர முடியாது. அதுபோல இறைவனது மேற்கூறிய குணங்களாலன்றி அவனை அறிய முடியாது. அதுவுமன்றி மலரின் வெண்மை, மென்மை முதலிய குணங்களால் மலரை யறிவதுபோல், உலகில் தோற்றம்,

இருப்பு, இறப்பு என்னும் கிருத்தியங்கள் நிகழ்வதால் இறைவனை யறிகின்றோம். அப்படியானால், நிர்க்குணன் என்றும், குணாதீதன் என்றும் கடவுளைக் குறித்துச் சொல்வதெப்படியென்றால் தருக்க நூலில் அபாவம் என்னும் அளவை, பாவத்தை யுணர்வதுபோல் நிர்க்குணம் சகுணத்தையுணர்த்தும் சூனியம் என்னும் ஒரு பொருளே கிடையாது. ஆதலின், இறைவனது குணங்கள் அடங்கி நிற்றலையே குணாதீதன் என்றும், நிர்க்குணனென்றும் உணர்த்தலவர்.

அன்றியும், திருவிளையாடற் புராணத் திருமணப் படலத்தில் "பாலும் பாலி னண்ணு மின்சுவையும்" என்னும் பாசுரத்தை எடுத்துச் சொல்லி, அதிலே பிரிக்கப்படாத மலரும் மணமும் பிரித்து வைக்கப் பட்டனபோல் "இறைவனும் உலகம் ஈன்ற அம்மையும் இருந்தனர்." என்று சொல்லியிருப்பதால் அங்கே கூறிய திருமணமாவது கேவலம் உலகினர் முடிக்கும் மணம் போலன்றி, இறைவன் அல்லது சத்தனாகிய மலருக்கும் உலகினிடத்தில் தோன்றும் முத்தொழிற் குரிமையான குணம் அல்லது சத்தியாகிய மணத்துக்கும் ஏற்பட்ட பிரிக்கக் கூடாமையான சம்பந்தத்தையே உணர்த்தி நின்றது.

பின்னும் சரீரம் மலரும், சரீரியாகிய ஆன்மா மணமாகவும், ஜீவான்மா மலரும், பரமான்மா அதனிற்றிகழ்ந்த மணமெனவும் கொள்ளலாம். அவையிரண்டனுக்கும் ஏற்பட்ட சம்பந்தமே மலரும் மணமும் குறித்து நிற்கின்றனவெனவும் கூறலாம். இவையேதான் 'சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" என்று திருமூலர் திரு மந்திரத்திற் கூறியது. "உற்ற ஆக்கையின் உறுபொருளெறு மலர்" என்னும் மாணிக்க வாசகப் பெருமானது திருவாக்கும் இதனையே குறித்தது.

ஆனந்தபோதினி அச்சுக்கூடத்தில்

போஸ்ட் கார்டுகள் முதல் போஸ்டர்கள் வரை புஸ்தக வேலைகள் உள்பட எல்லாவித அச்சு வேலைகளும் சுத்தமாகவும், அழகாகவும், கால தாமதமின்றியும் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்.

"ஆனந்தபோதினி" மதராஸ்.

அநுபவக் களஞ்சியம்.

(அரு. சு. அழகப்பன்.)

1. தற்கால இளைஞர்களே பிற்காலப் பெரியார்கள். ஆதலால் அவர்களின் உண்மை யுணர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் முட்டுக் கட்டை போடாதீர்கள். இளைஞர்களின் தீவிர உழைப்பினாற்றான் நாடு முற்போக்கடையவேண்டும்.

2. எந்த விஷயத்தையும் நிதானித்து ஆலோசித்துச் செய். வீணாய் அவசரப்பட்டு ஆலோசிக்காது செய்வாயாகில் இடர்ப்படுவாய்.

3. மனித சிருஷ்டியில் பாகுபாடில்லை. இவன் தாழ்ந்தவன்; அவன் உயர்ந்தவன் என்பதெல்லாம் சுய நலக்காரர்களின் சூழ்ச்சி.

4. பெண்களுக்குக் கல்வி யறிவு மிகவும் அவசியம். ஆனால் கல்வியளிப்பதற்கு ஒரு சிலர் முன் வந்தும் ஏனையோர் பின் பற்றாத குறையொன்றினால் பெண் கல்வி விருத்தி யடையவில்லை. என்று தான் ஆண்களுக்குப் பெண் கல்வி அவசிய மெனத் தோன்றுகின்றதோ? தெரியவில்லை.

5. உலகத்திலுள்ள சகல பொருள்களும் உனக்குப் பிரயோஜனப்படுவதைப் போல் நீயும் பிறருக்குப் பிரயோஜன முடையவனாக இரு.

6. உண்மை யுழைப்பாளர்களுக்கும் உத்தமர்களுக்கும் இந்நாட்டிற் பெருமையில்லை. போலிவேட தாரிகளுக்கும், துஷ்டர்களுக்குந் தான் அளவற்ற மதிப்பு ஏற்படுகிறது. காரணம் மக்களின் அறியாமையே யாகும்.

7. பிறர் மெச்ச வாழ்க்கையை நடத்துபவன் பேடியாவான். தனது மனச்சாக்ஷிக்கு விரோத மின்றி, காலதேச வர்த்தமானம் தெரிந்து, தூய வழியில் வாழ்க்கையை நடத்துகிறவனே ஞானவானவன்.

8. ஒரு ஏழை உன்னிடத்தில் யாசிக்க வரும்பொழுது உன்னாலியன்ற உதவியைச் செய், இல்லையானால் அவனைத் தூஷிக்காதே. ஒரு காலத்தில் நீயும் அந்நிலை யடையலாம்.

9. உனது சரீரத்தை உழைப்பினால் உறுதிபெறச் செய். உண்டி மிகுதியினால் உறுதி செய்யாதே.

10. கலியாணம் புதுமை முதலிய விசேடங்களில் செலவிடும் எண்ணற்ற பொருள்களைக் கைத்தொழில், கல்வி, விவசாயம் முதலிய நாட்டு முன்னேற்றத்திற்குச் செலவிடுவாயானால் அளவற்ற பயனும்; புகழுமுண்டு.

11. பத்திரிகைப் படிப்பினால் அளவற்ற நன்மையுண்டு. உலகில் நடக்கும் ஆச்சரிய சம்பவங்கள்; அரசியல் விஷயங்கள், பற்பல அறிஞர்களின்

அபிப்பிராயங்கள், நமது வாழ்க்கையைத் தூய்மை பெறச் செய்து கொள்ளும் மார்க்கங்கள், பெரியோரின்—வாழ்க்கையின் அதிசயங்கள், முதலிய எண்ணற்ற விஷயங்களைப் படிப்பதினால் நமது வாழ்க்கை தூய்மை பெற்று, அறிவு வளர்ச்சி ஏற்பட்டு இவ்வுலகில் கீர்த்தியுடன் விளங்க ஓர் காமதேனு போல் நமக்கு நன்மை செய்கின்றது.

12. இவ்வுலகில் நீ செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் உனக்குத் தெரியாமல் கடவுள் பார்த்துக்கொண்டு வருகிறார். ஆதலால் உனது மனசாக்ஷிக்கு விரோதமின்றி நேரிய முறையில் காரியங்களைச் செய்.

13. உனது வாழ்க்கையில் நேரும் துன்பங்களெல்லாம் உன்னை நல்வழியில் திருப்புவதற்கே யாகும். நல்லோ ருறவை நாடு; நல் வழியில் உன் வாழ்க்கையை நடத்தி நன்மை யடைவாயாக.

14. எந்த விஷயத்தையும் நடு நிலையாய் நின்று ஆலோசித்துப் பார்ப்பாயானால் உண்மை விளங்கும். அவசரப்பட்டு ஆலோசிக்கா விட்டால் உண்மையை அறிய மாட்டாய்.

15. மூடப் பழக்க வழக்க மெனும் பேய் மிகவும் கொடியது. ஆகையால் அதனை யுன்னிடம் அணுகாது தூரத்திவிடு. இல்லை யேல் அது உன்னைப் படு குழியி லாழ்த்தி விடும்.

"Funny" Magzin of India

(Bi-monthly) Published on the 5th & 20th.

GIVES THE BEST OF EVERYTHING

Jokes, Stories, Serials, Humorous articles. Cartoons of great events and Competitions.

LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE OUR ADDITIONAL FEATURES.

Price As. 1-6.

AVAILABLE AT ALL STALLS & NEWS AGENCIES.

Apply to:—

The "Funny Magzin" Office,

No. 6, Lawyer Chinnathambi Mudali St.,

Sowcarpet, MADRAS

ஆழ்வார் அருள்மொழி

(த. பதுமாவதியம்மாள்.)

செல்வம் மக்கட்குப் பல்வகை யின்பங்களையும் நயவல்லது. அஃதின்றேல் மக்கள் இவ்வுலக சுகங்களையும், மறு உலகப் பயனையும் அநுபவித்தல் முடியாது. ஆயினும் குன்றத்தனை நிதியும் இமைப் போதில் மாய்தல் கண்கூடு. நிலைபெற்ற பொருளை யுடையேம் எனச் செருக்கித் திரியும் சக்கரவர்த்திகள், கோடீஸ்வரர்களுங் கூட ஒருகால் வறியராகிப் பிச்சை புகுந்துண்பதற்கும் வெட்கிப் பசியினால் மெலிந்து இறந்ததை நாம் கேள்வியுற் றிருக்கின்றோம். சில மாதங்கட்கு முன் உண்டாய பூகம்பத்தின் காரணமாக எத்தனைச் செல்வர்கள் ஒரு காசுமின்றி துன்புற்றனர். இதன் காரணம் செல்வத்தின் நிலையாமையே யன்றோ! இச் செல்வம் ஓரிடத்திலும் நிலை பெறாது சகடக் கால் போன்று சுழலும் சுபாவ முடைய தென்பதை அறியாதார் யார்! ஆதலின் என்றும் இது நம்மிடமே நிலைபெற் றிருக்கும் என்ற எண்ணத்தை அறவே விட்டு அதனிடத்துப் பற்றற்றவராய் அதை நல்வழியில் உபயோகித்து ஈஸ்வரனருளைப் பெற முயற்சித்தலே தகுதி.

ஆயினும் எம்பெருமான் கொண்ட மோகினி அவதாரத்தைக் கண்டு மயங்கிய அசுரர்களைப் போன்று செல்வத்தைக் கண்டு மயங்கி அதற்கே அடிமையாகும் ஸ்வபாவத்தை யுடையவர்களன்றோ நாம்? ஆதலின் இத்துணை பற்றற்ற தன்மை நமக்கு உண்டாகுமா? இதை உண்டாக்கிக் கொள்வது யாங்ஙனம்? எனச் சில ஐயங்கள் தோன்றலாம். இதற்கு ஒரு மருந்துளது; அம்மருந்தை உட்கொள்ளின் இதன் மயக்கிலிருந்து விடுபடலாம். நிலையுற்றதும், புகலிடமானதும், இன்பமளிக்கக் கூடியதும், ஆன்ம லாபத்தைப் பெறச் செய்வதும் அஃதே. அது யாதோ வெனின் ஈஸ்வரனுடைய திருவடிகளே யாகும். அதனிடத்து திட பக்தியைக் கொள்ளலே முன்றமை. அதுவே செல்வத்தின் பற்றினின்றும் நம்மை விடுவிக்கும். இத்துணை எண்ண முடையவர் தான் ஈஸ்வரனுடைய அருளாம் செல்வத்தை யடைவர். அவனைப் பற்றினவர்கட்கு என்றும் இன்பமே யன்றி துன்ப மணுகாது. ஒருகால் கர்ம மடியாகத் துன்பம் நேரினும் அவற்றையும் அவர் இன்பமாகவே கொள்வர். இன்பத்திற்கு மகிழலும், துன்பத்திற்கு இரங்கலும் அவர்களிடத்துக் காணப்படமாட்டா. இத்தகைய சிறப்பு வாய்ந்தவரே உலகில் உயர்ந்தவரென எண்ணப்படுகின்றனர். அவர்களையே உலகம் வழிபடா நிற்கும். எத்துணை மன்னாதி மன்னரும் இவர்கள் காலடியிலே தலைக் கவிழ்ந்து நிற்பர்.

இத்தகைய சிறப்புடையார் யாவரினும் முதற்படியில் நிற்பவர் நம்மாழ்வார். உலகம் இன்னோரன்ன பெரியோரை இது காறும் பெற்றிலது; இனியும் பெறலரிது. இவர் பிறந்ததிலிருந்து உலகப் பொருள்களை வெறுத்து ஈஸ்வரனையே உண்ணும் உணவாகவும், பருகும் நீராகவும் கொண்டு வளர்ந்தவர்.

இங்ஙனம் சடத்தைக் கோபித்ததினாலேயே இவருக்குச் "சடகோபர்" என்ற திருநாம முண்டாயிற்று. இப்பெரியாருக்கு ஈஸ்வரன் மாட்டு பொங்கிவழிந்த பக்தி வெள்ளமே பாக்களாக வெளிவந்தன. இதுவே திருவாய்மொழி எனக் கூறப்படுகிறது. இவற்றில் ஓரிடத்தில் ஆழ்வார் "உலக மக்களே! செல்வம் நிலையற்றது; அதனிடத்து அன்பு வையாதீர்கள்; அது தரும் இன்பத்தைக் காட்டிலும் எல்லையற்ற இன்பமளிக்கவல்ல எம்பெருமானை வழிபடுங்கள்; அவன் எல்லா நலங்களையும் ஒருங்கே தருவன்; அவனடிகளைப் பற்றியதனாலன்றோ நான் இத்துணை இன்பத்தை அநுபவிக்கிறேன். நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்" என்று தம் அனுபவத்தை ஒரு பாவின் மூலமாக உபதேசிக்கிறார்.

ஒரு தேயத்தில் வட்டமாக வளர்ந்திருந்த ஒரு மலையே ஓர் அழகிய உயர்ந்த கோட்டையைப் போன்று காணப்பட்டது. அதைச் சுற்றிலும் ஒரு பேரகழி யுண்டு. கோட்டைக்கு நாற்புறங்களிலும் வாயில்க ளிருப்பினும் அவைகள் எப்போதும் அடைப்பட்டே யிருக்கும். வருவோர் தம்மை இன்னாரென தெரிவித்த பிறகே உள் நுழையலாம். அவ்வாயில்களே யன்றி நாட்டிற்குள் வருவதற்கும், நாட்டிலிருந்து வெளிச் செல்வதற்கும் மலை வழி ஒன்றுண்டு. வெளியார் ஒருவருக்கும் அவ்வழி தெரியாது. அதோடு அது அதி கரடுமுரடா யிருந்தபடியினால் ஏறுதல் மிகவும் கடினம். நிற்க, வெளியில் நிற்போர்க்கு அந்நாடு தெரியாவிடினும், மலையின் தோற்றமே கண்கொள்ளா காட்சியளிக்கும். ஆங்காங்குக் காணப் படும் மலைப்பாதைகளும், இருபுறமும் வளர்ந்திருக்கும் சிறு சிறு குத்துச் செடிகளும், அவற்றில் மலர்ந்திருக்கும் மலர்களும், முத்தாரங்களைப் போன்று மிக்க ஒலியுடன் இழியும் மலை யருவிகளும், எங்கணும் தெளிக்கும் நீர்த்திவலைகளும் மக்கட்கு இன்பத்தை யளிக்கும். மான்கள் துள்ளி விளையாடுங் காட்சி கவலையற்ற இளஞ் சிறார் குதித்தலை ஒத்திருந்தது. இங்ஙனம் எங்கு நோக்கினும் இன்பக் காட்சியே நிறைந்த அம்மலையைக் கண்ணுற்றோர் அதைக் கடந்து சென்று நாட்டினழகைக் காண விரும்பாமலிரார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அந்நாட்டில் ஓர் அரையர் ஆட்சி புரிந்து வந்தார். அவர் புயவலியினால் வென்ற நாடுகள் பல. தம்மால் வெல்லப்பட்ட மன்னர் யாவரும் தம்மடி தொழ சக்கரவர்த்தியாக பன்னெடு நாள் நாட்டினை ஆண்டுவந்தார். அவர் ஆட்சியில் நிலத்தின் சிறிது பிரிவேனும் பயனற்றிருந்ததில்லை. அது பயன்படுதற்கேற்ற முயற்சிகள் பலவும் இயற்றுதலே அவர் தொழிலாயிருந்தன. இரவில் தாமே நாடு முழுதும் மறைந்து சென்று குடிகள் பேசும் கருத்துக்களை அறிந்து வருதலின் குடிகளின் குறைகளைத் தீர்த்தற்கு அவருக்கு எளிதாயிருந்தது. அவர் செங்கோன்மையைப் பலரும் புகழ்ந்தனர். குடிகளன்பு அவர் மாட்டு பெரிதும் பொருந்தி யிருந்தது. அவர் நீடூழி வாழ யாவரும் இறைவனை இறைஞ்சினர். அவர் புகழும் ஆண்மையுமே மாற்றரசர் தவறாது கப்பஞ் செலுத்தற்கு ஏதுவாயின. மந்திரிகள் முதலிய சிலர் தவிர மற்றையோருக்கு அவர் தரிசன மளித்தலில்லை. பல சிற்றரசர் பன்னாட்கள் அவரைக் காண வேட்டு கப்பத்தோடுங் காத்திருந்தனர். அது பயனளித்திலது. இங்ஙனம் அவ்வரசர் மிகு செல்வமும், புயவலிமையும், தம்மையொப்பார் ஒருவருமின்றென்னுஞ் செருக்குங் கொண்டு பல ஆண்டுகள் செவ்வனே ஆட்சி புரிந்து வந்தார்.

காசிக்குச் செல்லப் புறப்பட்ட சிற்றரசன் ஒருவன் மேற்கூறிய சக்கரவர்த்தியின் நாட்டைக் கடந்தே செல்லவேண்டி யிருந்தது. ஆகவே அவன் மன்னரைத் தரிசித்துச் செல்லல் நலமெனக் கருதி அந்தி வேளையில் அந்நகரை யடைந்தான். அன்று பூரண மதியாதலின் மலைப்பாதை அவன் கண்ணுக்குத் தோன்றியது. அது ஒருகால் ஊருக்குள் செல்லும் பாதையா யிருக்கக் கூடுமெனக் கருதி அவன் அதன் மீதேறி செல்லத் தொடங்கினான். இது நிற்க,

இரவு மணி பன்னிரெண் டிருக்கும். பூரண மதியொளி எங்கும் பரவி யாவரையும் ஆனந்தக் கடலி லாழ்த்தியது. சக்கரவர்த்தியின் நகர் முழுதும் அரவமற் றிருந்தது. மாளிகைகளினுச்சியில் எரியும் விளக்குகள் ஒன்றோடொன்று இமை கொட்டி பேசுவது போன்று காணப் பட்டன. பகற்போதில் இளஞ் சிறார் விளையாடி யெறிந்த முத்துக்களினொளி சந்திர னொளியைப் பரிகசித்தன. மாடங்களில் நாட்டிய கொடிகள் காற்றில் அசையுந் தோறும் வரும் விருந்தினரை கைநீட்டி வரவேற்பன போன்றிருந்தன. வெண்சுதை தீட்டிய மாடங்களும், அவற்றில் தொங்கிய பல நிற மகர தோரணங்களும், காண்போர் கண்களைக் கவர்ந்தன. அந்நகருக்கு நடுவண் ஆகாய மளாவியதும், பல அடுக்குக ளமைந்ததுமான மாளிகை ஒன்றிருந்தது. பல வேலைப்பாடுகளோடுங் கூடின அதன் அமைப்பு இந்திரலோகமெனத் திகழ்ந்தது. சிறு துயிலிலிருந்த காவலர்கள் புரளுங்கால் ஆயுதங்கள் ஒன்றோடொன்று உராசின. அச்சிற்றொலியைத் தவிர்த்து வேறோ ரொலியும் கேட்டிலது.

அவ்வமயத்தில் ஏதோ கனவு கண்டு விழித்த அந்நாட்டின் சக்கரவர்த்தியார் துயில் வாராமையின் நிலவில் சிறிது போழ்து இருத்தல் நலமென நினைந்து அம்மாளிகையின் மேன்மாடியை யணுகினர். அவர் மனதில் உருக்கொண்டு பதிந்திருந்த அக்கனவை நினைந்து கொண்டே மெல்லென நடந்து கொண்டிருந்தனர். அடிக்கடி அவர் உடல் நடுங்குவதனாலும், திடுக்கிட்டு நாற்புறமும் நோக்குவதனாலும் ஏதோ ஒரு துன்பம் அவர் மனத்தை வருத்துவது போன்று தோன்றிற்று. ஏதோ முணுமுணுத்துக் கொண்டே அவர் சலவைக் கல் ஆசனம் ஒன்றில் அமர்ந்தார்; தம் மன வேதனைக் காற்றாது அதன் மேற் சாய்ந்து சிந்தனையி லாழ்ந்தனர். "நாம் கனவிற் கண்டது ஒரு போதும் நிகழாது! அவை யாவும் பொய்த் தோற்றமே! யானோ காட்டில் மறைந்து வாழ்வேன்! ராஜாதி ராஜனான என்னை எவர் வெல்லவல்லவர்? அங்ஙனம் பிறர் வெற்றி கண்டும் உயிர்வாழ்வேனோ! பிராணனை யன்றோ விட்டொழிப்பேன்! என் கோட்டையை அணுகவல்லாரும் உண்டோ? அங்ஙனம் வரினும் என் முன் நின்று யுத்தஞ் செய்யக்கூடிய வன்மையாளன் எவன் உளன்? இங்ஙனம் நினைத்தல் சுத்தக் கோழைத்தனம்! மானம்பட வரின் வாழா குலத் துதித்தவனன்றோ யான்! யானென்ன, பிறருக்குப் பயந்து காட்டில் வதிவதென்ன! இது ஒரு நாளும் நடவாது! ஈதென்ன வீணெண்ணம்! இங்ஙனம் நினைத்

தலே தகுதி யற்றது! ஏதோ பித்த மிகுதியினால் இத்துணை கனவு தோன்றிற்று போலும்! இத்தோற்றம் உண்மையன்று! இதை நம்புதலுங் கூடாது!" எனத் தமக்குத் தாமே கூறிக்கொண்டு சிறு போழ்து வாளாவிருந்தனர். திரும்பவும் திடுக்கிட்டெழுந்து சிறிது உலாவினர். தன் சயன அறையை நோக்கி நடந்தனர்.

திடீரென இவர் பார்வை ஒரு திசையை நோக்கிற்று. அங்கு எதையோ கண்டு பிரமித்தனர். அவர் உடல் அசையாது நின்றது; பன்முறையும் அவர் பார்வை அத்திசையையே நோக்கிச் சென்றது. நெடுமூச் செறிந்தனர். "ஆ! அஃதென்ன படையா! இன்றேல் இந் நள்ளிரவில் கள்ளத் தனமாய் ஓர் ஓசையு மின்றி இக் கூட்டம் இவண்போதற்குக் காரணம் என்னை! இல்லை இல்லை. நாம் கண்ட கனவு நம் மனக் கண்முன் நிற்றலால் இவ்வுரு வெளித்தோற்றம் ஏற்படுகிறது போலும்! அது படையன்று, காட்டு மிருகங்களாயிருக்கும்! அன்று அன்று உண்மை மனிதர்களே! மிருகங்களாயின் வரிசையாகச் செல்லுமா! அதோ உயர ஏறிய மக்களின் ஆயுதங்கள் சந்திர னொளியில் மின்னுகின்றனவே! உண்மையில் சேனைதான்! எவர் இங்ஙனம் படையெடுத்து வரக்கூடும்! நம்மினும் வன்மையுற்றவன் யாவன்? போருக்கு வந்தோர் வெளியிலிருந் தன்றோ பொரல் வேண்டும்? இவன் உள்வருதற்குக் காரணம் யாது? கள்ளத்தனமாக நம்மைக் கொன்று நம்முடியைக் கவரவேண்டுமென்றோ? அன்றி ஊருக்குள்ளே வந்து நம்மோடு போரிட எண்ணியா? ஒன்று மறியோமே! அம்மலை வழி நெடுகத் தலைகளாகக் காணப்படுகின்றனவே யன்றி படையினளவு தெரிந்திலதே! என்ன, நம்மனம் இங்ஙனம் தடுமாறுகிறது! கண்ட கனவிற்குத் தக படைகள் வந்துவிட்டனவே! நமக்கு இப்போது கொடுங்காலம் தொடங்குகிறது போலும்! ஆம், ஆம்; அது உண்மையே! இத்துணைக் காலம் இம்மலையரணைக் கடந்து ஒருவரும் உட்புகுந்த தில்லையன்றோ! இதற்கென் செய்வது! அவர்களுடன் நேர்நின்று போர்புரிதலன்றோ தகுதி. அது முடியாது! ஏனெனில் நம் கனவின் ஒருபாகம் உண்மையாயவிடத்து மற்றதும் உண்மையாகவே முடியக் கூடும்! ஆதலின் நாம் சிறிது போழ்து மறைந்திருந்து இவன் கருத்தை யறிதலே தகுதி! நம் நாட்டிற் கருகிலுள்ள காடு சென்று இவ்விரவு கழித்து, நாளை என் செய்வதெனத் தீர்மானித்தல் நலம்," என்று தன்னுள் நினைந்துகொண்டே விரைந்து சென்று ஓரறையை யடைந்தார். தன் ஆடையைக் களைந்து கறுப்புடை யணிந்து முற்றத்திற்கேக மறுமுறையும் அவர் கண்கள் அத்திசையையே நோக்கின. பின்னர் அவர் கால்கள் விரைவாக மேன்மாடியை விட்டிழிந்தன. இக் குழப்பத்தில் தாம் செல்லவேண்டிய இரகசிய வழியையும் மறந்து பொது வழியே சென்றார். ஆங்காங் குற்ற காவலாளிகட்கு இவர் அரசரெனத் தெரிந்தது. மன்னர் ஏன் விரைந்து செல்லுதல் வேண்டுமென்றும் ஐயம் அவர்கட்குண்டாயினும், அவரைத் தடுத்து வினவ அஞ்சினார்கள். இந் நிகழ்ச்சி அவர

ர்கட்குத் தோன்றியவாறு எண்ண இடந்தந்தது. மன்னர் பல வாயில்களையுங் கடந்து காடுநோக்கி நடந்தார். நிற்க, சிற்றரசன் படைகள் அன்றிரவே நகருக்குள் வந்து சேர்ந்தன. அந் நாட்டரையர் நாட்டை விட்டோடினாரென்ற செய்தி காலையில் சிற்றரசன் செவிபுக்கது. உடனே அவன் முடிசூடித் தன் கொடியை அங்கு நாட்டினான். குடிகள் யாவரும் தனக்கடங்கி நடக்க வேண்டுமென்றும் ஆணையைப் பிறப்பித்தான்.

ஆதித்தன் தன் கிரணங்களை மெல்லெனப் பரப்பி எழுந்தான். காடடைந்த சக்கரவர்த்தியாருக்குப் பகற்போதில் வெளிவர அச்ச முண்டாயிற்று. ஆகவே, அன்றிரவு அவர் நகருக்குள் பிரவேசித்துக் கூட்டத்தை நாடிச் சென்று மறைந்து நின்று செவிசாய்த்துக் கேட்டார். அங்குப் பழைய மன்னர் திடீரென நகரைவிட்டோடினதும், யாத்திரை வந்த புதிய வரசன் முடிசூடிக் கொண்டதுமே எங்கும் பேசப்பட்டது. பல்லிடங்கட்கும் சென்றலைந்த அரையர் பின் காடடைந்து அயர்ந்து உட்கார்ந்தார். மனமாழ்கி, "என்னே என் மதியீனம்! இங்ஙனம் அரசை யிழப்பேனா! என் விதியிருந்தவாறென்னே! அவன் யாத்திரை வந்த தறியாது நான் ஐயுற்று நாட்டை விட்டு வந்தது தகுதியோ!" என்று பலபட நினைந்து மனம் புழுங்கினார். சோர்ந்து நிலத்தில் வீழ்ந்தார். மனச் சோர்வும், பசிப்பிணியும் மன்னர்க்கு நித்திரையை யுண்டாக்கின.

மறுநாள் இரவு சக்கரவர்த்தியின் பசிக்கொடுமை பிச்சை யெடுத்தேனும் உண்ணத் தீர்மானித்தது. பிச்சை யேற்பதற்குப் பாத்திரம் வேண்டியிருந்ததால் குப்பைமே டொன்றை யடைந்து அங்குக் கிடந்த உடைந்த மண்பாத்திரத்தைச் செங்கோற்றாங்கிய கரத்திலேந்திச் சென்றார்; பிறர் கண்ணிற் படாவாறு நிழலில் மறைந்து சென்று ஒரு வீட்டின் படி யேறினார். வாய் திறந்து பிச்சையெனக் கேட்க மனம் கூசிற்று; எவரேனும் வெளிவரின் கேட்கலாமென்னும் எண்ண முடையாராய்ப் பேசாது நின்றார். வெகுநேரம் காத்திருந்தும் பயனளித்திலது. பசிப்பிணியோ சிறிது உட்செல்லத் தூண்டிற்று. அங்ஙனம் சென்றபோது இருட்டில் படுத்திருந்த கருப்பமுடைய நாய் ஒன்றின் மீது அவர் தன் காலைவைக்க நேர்ந்தது. அது உடனே கோபங்கொண்டு காலைக் கௌவிற்று. அரசர் வேதனைக் காற்றாது காலைப் பிடுங்கிக் கொண்டார். இம் முயற்சியில் மன்னர் கையிலிருந்த மண்பாத்திரம் கீழ்வீழ்ந்து பல துண்டுகளாயிற்று. நாய் குரைத்தலைக் கேட்ட அவ்வீட்டார் திருடனென்றஞ்சி விளக்குகளோடும் வீதிக்கு வந்தனர். அதன் சத்தத்தைக் கேட்ட ஊர் நாய்களும் குரைக்க ஆரம்பித்தன. அதனால் ஊராரனைவரும் விளக்குகளோடும் வெளிப் போந்தனர். அரசர் மானத்திற் காற்றாது ஓடினர். சிலர் அவரை மன்னரென அறிந்து கொண்டனர். அவர் மற்றையோர்க்கு முரைக்க யாவரும் அரையனைக்காண விழைந்து பின் தொடர்ந்தனர். இத்துணைப் புகழ் வாய்ந்த சக்கரவர்த்தியார் ஓரிமைப் பளவில் யாவுமிழந்து பிச்சை புகநேருமா! என

யாவரும் இறும்பூதெய்தினர். அரசனை யழைத்து உபசரிக்க சிலர் விரும்பினும் தற்போதைய மன்னன் கோபத்திற் கஞ்சி வாளாவிருக்க நேரிட்டது. இம் முறையில் மன்னர் வெறுங் கையோடுங் காடேகினர்.

இன்னணம் ஆழ்வார் ஒரு பாவின் மூன்றடியினால் செல்வம் நிலையாமையை நன்கு வற்புறுத்தி நிலையற்ற பொருள் இது வென்பதனை மற்றுமோர் அடியினால் விளக்குகிறார். "மாந்தர்களே! திருமகளை மார்பிலே வைத்த நாரணனை வணங்குங்கள். அவனே நித்திய வஸ்துவாகும். செல்வத்தைப் போன்று இச்சரீரமும் நீர்க்குமிழி யாதலின் அவனை யறிந்த அந்நிமிடமே வழிபடுங்கள்" என்று கூறுகிறார்.

பாசுரம்

"ஒரு நாய கமாய் ஓட உலகுட னாண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித் துய்மினோ"

இப்பாசுரம் சில சொற்களால் ஆக்கப்பட்டதே யாயினும் இதன்பொருள் விரிந்து கிடக்கின்றது. ஆழ்வார் இதன் முதலடியில் மன்னன் சுகநிலைமையை விரிவுபட வுரைத்து இரண்டாமடி எடுத்தவுடனே "கருநாய் கவர்ந்த காலர்" என்று தொடங்குகிறார். இதனால் மக்கள் உயிர்வாழ்க்கை எங்ஙனம் நிலையற்றதோ அங்ஙனமே இச் செல்வமும் என்பதை வற்புறுத்த வேண்டு மென்பது இவர் கருத்தெனத் தோன்றுகிறது. நிற்க, பெரியோர் முன்னடியோடு பின்னதைப் பொறுத்தவேண்டி மன்னன் அரசிழந்த வரலாற்றை ஒருவாறு கூறி இரண்டினையும் சம்பந்தப் படுத்துவர். அதில் நினைவிருக்கு மளவும் வரைந்துளேன். அறிந்தோர் கொள்வன கொண்டு ஒழிப்பன ஒழிக்க.

இங்ஙனமே, ஆழ்வார் பாசுரங்கள் யாவும் தாம் எம்பெருமானை அநுபவிக்குந் தன்மையும், தாமடைந்த இன்பம் உலகுமடைய விழைந்து அவர்கட்கு உபதேசிக்கும் வகையுமாகவே அமைந்து கிடக்கின்றது. சமயம் நேர்ந்துழி அனைவரும் இவைகளை அறிந்தோர் வாயிலாகக் கேட்டு ஆனந்த முறுதல் மாத்திரமே யன்றி அத்துணை பக்தியை நமக்கு மீந்தருளுமாறு எம்பெருமானை வழுத்தலும் வேண்டும்.

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

மணிமேகலை' நூலின் அமைப்பும் சரித்திரக் குறிப்பும்.

R. V. இராமஸ்வாமி B. A., B. L. வக்கீல், சேலம்.

(Rights Reserved.)

(267-ம் பக்கத் தொடர்ச்சி.)

VII. அணிவகையும் கூறியது கூறலும்

அணிகள்

தன்மை நவிற்சியணி, உவமையணி, உருவகவணி, இப்பொருளுவமை; முதலிய இன்னோரன்ன அணிகள் பலவும் நூலெங்கும் நிறைந்திருத்தலால், ஆசிரியர் நூலில் கூறப்பட்டுள்ள மலை, கடல், தீவு, நகர் முதலிய பலவற்றையும் நேரில் கண்டு அறிந்து கொண்டாற் போன்று, படிப்பவர்களுடைய மனதில் நன்றாகப் புலப்படுமாறு செய்துள்ளனர். தெளிந்து அறிவோர்க்கு இன்பத்தையும், ஆழ்ந்து படிப்போர்க்கு நற்கருத்தையும் கொடுக்கும் அணிகள் அதிகமாகச் செய்யுள் தோற்க ளிடத்துக் கிடப்பது, செய்யுளுக்குக் கவி அளிக்கும் நல்லணிகளே யாகும். இதுபற்றியே, "அணியிலாக் கவிதை பணியிலா வனிதை" என்றும் கூறப்படுவது போலும். சாத்தனார் கையாண்டுள்ள சில அணிவகைகளை இங்கு குறிப்போம்.

(1) மாதவி தன் காதல னிறந்த பின்னர் வாழ்க்கையை வெறுத்து மாதவர் பள்ளியை யடைந்த தனது செயலைத் தனது தோழிக்கும் தன்னைப் பெற்றெடுத்த சித்திராபதிக்கும் 'செப்புக' என்று கூற,

"ஆங்கவ ளுரைகேட் டரும்பெறன் மாமணி
யோங்கு திரைப்பெருங் கடல் வீழ்ந்தோர் போன்று."

(2: 72-3) வயந்தமாலை கலங்கிய நெஞ்சினோடுஞ் சென்றனளென ஒற்றுமை நன்கு விளங்குமாறு புகன்றுள்ளனர்.

(2) செங்கைகளுக்குத் தாமரையும், முகத்திற்கு மதியையும் உவமை செய்து,

"மாதவி மணிமேகலை நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றி."

(3: 11-13) எனச் செப்பி யுள்ளனர்.

(3) நகரில் யானையின் வரவுக்கு அஞ்சியோரின் நிலைமை மக்களும் முறிந்த மீகானுக்கு நிகராக்கி,

"........................உருகெழு மூதூர்
ஊர்நடு வீதியில் நின் றேங்கிய
கூம்பு முதன் முறிய வீங்கு பிணி யவிழ்ந்து

கயிறு கால்பரிய வயிறு பாழ்பட்டாங்
கிதை சிதைந்தார்ப்பத் திரைபொரு முந்நீ
ரியங்குதிசை யறியா தியாங்கணு மோடி
மயங்கு காலெடுத்த வங்கம்போல"

(4: 28-34) காழேர் கையறப் பாகன் முதலியோர் அலவுற்றுவிளிப்ப, மூதூரில் மேலோரின்றி ஒருபாற் படாது ஒரு வழித் தங்காது ஓடியாடியதை வெகு அழகாகக் கூறி யுள்ளனர்.

உவமைகள்

(4) அழகிலும் ஆண்மையிலும் ஒத்திருத்தலின் உதய குமரனைக் கடம்பமாலை சூடிய முருக பிரானுக்கு உவமையாகக் காட்டி யுள்ளனர். (4: 49-50;5: 13-4) "பண்மலர்ப்பூம் பொழிற்பகன் முளைத்ததுபோல்" (4: 92) உதய குமரன் வந்தனனென்றும்; "நன்மணி யிழந்த நாகம் போன்று" (7: 131; 25: 194-5) என்றும்,

"திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
வொருதனி வரூஉம் பெருமகன் போலத்
தானே தமியன் வருவோன் றன்முன்."

(14: 70-2) என்றும் இரக்கந் தோன்றக் கூறி யுள்ளதும்; பழுத்த மரத்தின் கண்ணே பறவைகள் விரைந்து சென்று கூடுதலைப்போல ஆபுத்திரனைச் சூழ்ந்துகொண்டனரென்றும் (14: 26); ஆதிரை மைதீட்டிய கண்ணழு துயர் நீங்கிப் பொய்கையாடிப் போவனை நிகர்க்கத் தீயினின்று எழுந்து சென்றன ளென்றும் (16:45-7); வெயிலாற் சுட்டு எரிக்கப்பட்ட கானத்திலேற்ற அம யத்தின் விண்மாரி பெய்ததை ஒப்ப, பசியால் வருந்திய மக்களின் முன்னர் அமுத சுரபியோடு ஆயிழை தோன்றினளென்றும், (17: 91-4) இவ்வாறாகப் பார்த்த விஷயங்களில் முதிர்ந்த அறிவைக் கொண்டுள்ளதால், சாத்தனார். கூறும் எவற்றையும் பொருத்தம் நன்கு தோன்றுமாறு நவிலு கின்றனர். இந்நூலில் பல விடங்களில் இவை போன்ற அணி கள் பல காணப்படுகின்றன. (9: 6-7; 10: 3-4; 10: 11; 46: 47; 12: 79-82; 17: 34; 20: 79: 80; 24: 35; 25: 105-6; 25: 110-111.)

உருவகம்

(5) இரவின் வரவுக்கும் உதய குமரனின் காமச் செயலுக்கும் புனைந்து உருவகித்து (19: 17-28), 'உதயகுமரன் இரவில் போயினன்' என்பதைக் கூற, இரவை யானையாக உருவகித்து, 'அகன்ற ஞாலத்தை ஆரிருள் உண்டது. பகல் அரசனாகிய சூரியனை ஓட்டிவிட்டுப் பறை யெழுந்து முழங்கிற்று. (யானை செல்லுங்கால் அதன் வரவைப் பறையால் தெரிவிப்பது வழக்கு.) நெற்றியில் மாலையையும் (அந்திமாலை யாகவின்), தந்தத்தையும் உடைய கரியயானை (இரவாதலின்), பாகரின்றித் துதிக்கையை நீட்டி மதத்தோடு, செறுக்குற்றுக் காற்றைப் போல வேகமாக, நிறையழி தோற்றம் பின் தொடர்ந்து வர; நம்பியர் வினை யோர் தம்முடன், வாசிக்கும் மகர வீணையையும் கேட்கப் பெறாதவனாகி, உதயகுமரன் சென்றனன்" எனக் கூறியுள்ளது மிகவும் வியப்பைத் தருவதாக உள்ளது.

சிலேடை

(6) மணிமேகலையின் வரவை உதயகுமாரனுக்குச் சித்திராபதி கூறும் பகுதிதோரிடத்து, அவளை மலராகவும். அவனை வண்டாகவும் கொண்டு 'கன்னலங் கவினிக் கடிமல ரவிழ்ந்தது; உதய குமரனாகிய வண்டு உண்ணும் பொருட்டு விரைவொடு கூற வந்தேன். அக்காஞ்சி அம்பலத்தாயது" (18: 55-62) எனச் சிலேடையாகக் கூறி யுள்ளதும் நோக்கற் பாலது.

(7) இவற்றோடன்றி,

"நீலமால்வரை நிலனொடு படர்ந்தெனக்
காலவேகங்களி மயக்குற்றென." (4: 43-4.)

என்றும்;

"வெள்ளிவெண் குடத்துப்பால் சொரிவது போற்
கள்ளவிழ்பூம் பொழிலிடைச் சொரிய
வுருவுகொண்ட மின்னே போல." (6:6-9.)

இல்பொருளுவமை

எனவும் இவைபோன்று பல விடங்களில் இல்பொருளுவமை யணிகள் காணப்படுகின்றன. இவ்வாறாக இல்லாத பொருள் களைக் கூறுதல் தவறாகாதாவென ஐயம் பிறத்தற் கேது வாக உள்ளன. இல்லன கூறுதல் இழுக்குடைத்தாமா யினும், தெளிவாக விளங்குதற் பொருட்டும், இன்பம் பிறத்தற் கெனவும் கவிகள் கூறுமிடத்து அவை வழுவாகா தெனத் தெளிதல் வேண்டும். உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் இதனை, "இல்லது கூறுதல், தொல்லா சிரியர் தமிழ் வழக்கன்று, புனைந்துரை வகையால் புலவர் இல்லனவுங் கூறுப. எனின் உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந் தோர் அறிந் தொழுகுதல் அறமெனக் கருதி, நல்லோர்க்குள்ளனவற்றில் சிறிது இல்லனவுங் கூறுதலன்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார். இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ் செய்யா தாக லின்" என்பர்.

கூறியது கூறல்

பல விடங்களில் கூறிய விஷயங்களும், கதைகளும், கூறிய மொழி களும் மீட்டும் முன்னர் கூறிய முறைப்படியே இந்நூலெங்ஙனும் உள்ளன. கூறியது கூறல் நூலிடத்துக் காணப்படும் குற்றம் பத்தனு ளொன்றென் பர். (தொல். மரபி. 108; நன்னூல். பொதுப். 12.) நூற்களிடத்து அது குற்றமெனக் கருதப்படினும், தனித்துப் படிப்பின் குறையற நிற்பதன் பொருட்டும், விஷயங்கள் இடையறாது தொடர்ந்து வருதற்கெனவும் கூறிய விஷயங்கள் ஒரே மொழி கொண்டேனும் அன்றி மாறுபட்ட மாற்றங்களி லேனும் கூறப்படுத லுண்டு. ஆயினும் சாத்தனார் தாம் கூறும் கதையில் சுவை குன்றாது முதலிற்கொண்ட கதைக் கும் இடையிற் கூறு மதற்கும் பேதம் நன்கு விளங்குமாறு வைத்துள்ளனர். ஒன்றனோடு மற்றொன்றிற் குள்ள சம்பந்தங்கள் சற்றும் அறு படாதும் கூறியுள்ளனர். உதாரணமாக, சண்பை நகரத்து அந்தணன் கௌசிக னின் மகள் சுதமதி தனித்துச் சோலை யேகிய தீம்பால், வித்தியாதரன் வசப் பட்டுச் சின்னாள் கழிந்தபின்னர், காவிரிப்பூம் பட்டினத்தி லிடப்பட்டதும்,

அவன் சமணர் பள்ளியைத் துறந்து புத்த முனிவருறைவிடத்தை யடைந்தது மாகிய சரித்திரமும் (கதைகள், 2: 5: 7); கணவன் காஞ்சனனோடும் பொதிய மலையைக் காண வந்த வித்தியாதர மாது காய சண்டிகை, நாவற் கனியைச் சிதையச் செய்து முனியிடம் சாபம் பெற்ற வரலாறும் (கதை-17: 20) அரவு கடித்து மாண்ட அரசினஞ் சிறுவன் இராகுலன் இலக்குமி யோடும் பிரம தரு மனை வழிபட்டு உபதேசங் கேட்டு அவருக்கு அமுதமளித்ததும் (காதை, 9: 21); மதயானை வெட்டி வீழ்த்தியதும் (காதை 23) சாது சக்கரனுக்கு உண வளித்ததும் (காதை 10: 21); ஆபுத்திரனின் சரித்திரமும் (காதை. 13. 14. 17. 25); பீலிவளையின் சரித்திரமும், அவள் பெற்ற பிள்ளையால் காவிரிப்பூம் பட்டினம் கடலுக்கு இரையாகிய விஷயமும் (காதை. 21. 25. 28); பல விடங்களிலும் நூலில் வருதல் காண்க. அங்ஙனமே,

(1) "ஆங்கன மன்றியு மாயிழை கேளாய்" (2: 58; 3: 26);
(2) "வேத்தி யல்பொதுவிய லென்றிரு" (2: 18; 28: 46);
(3) "பொதியறைப் பட்டோர் போன்றுளம் வருந்தி" (4:105; 19: 8);
(4) "ஆதிமுதல்வ னறவாழி யாள்வோன்" (6: 11; 10: 61);
(5) "திருந்தெயிற் குடபாற்சிறு புழைபோகி" (6: 22; 7: 89)
(6) "ஆருயிருண்ட தணங்கோ பேயோ" (6: 135; 148);
(7) "ஈற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்" (6: 98; 7: 81);
(8) "மாதவியாகியுஞ் சுதமதியாகியுங்
கோதை யஞ்சாய னின்னொடுங் கூடினர்"
(10: 73-4; 12: 17-8);
(9) "வாங்குநர் கையகம் வருத்துதலல்லது
தான்றொலை வில்லாத் தகைமையதாகும்"
(11: 49-50; 14: 14-5)
(10) "மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலின்"
(11: 83; 14; 56; 21: 147; 25; 102; 28: 157);
(11) "வயிறு காய்பெரும் பசிமலைக்கு மென்றலும்" (14: 6; 17: 56);
(12) "நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது"(14: 13; 25: 144);
(13) "மணிபல்ல வத்திடை மன்னுயிர் நீத்தோன்" (15: 16; 36);
(15) "இந்திரக் கோடணை விழாவணி விரும்பி"
(15: 94; 7: 17; 17: 69);
(16) "சன்றகுழவிக் கிரங்காளாகித் தோன்றாத் துடவையி னிட்டன
[னீங்கி" (13: 9-10; 18: 86-7);
(17) "நக்க சாரணர் நாகர் வாழ்மலைப் பக்கஞ் சார்ந்தவர்"
(16: 15-6; 89-40);

என இவை போன்று பல விடத்தும் ஒருமுறை கூறிய மொழிகளே மீண்டும் வந்துள்ளன.

'ஆபுத்திரனு டடைந்த காதை'யில் (24) 105-140-ம் வரிகளில் கூறப் பட்டுள்ள தத்துவ விஷயங்கள் அவ்வாறே மீளவும், 'பவத்திறமறு கெனப் பாவை நோற்ற காதையில் (30), 45-81-ம் வரிகளிற் கூறப்பட்டுள்ளன. பன்னிரு நிதானங்களைப் பற்றியதாகிய பௌத்தர்களின் வேதாந்தக் கொள்கைகளை உணர்த்தும் விஷயங்களைக் கொண்டுள்ளதால் நலனே விளங்குதற் கென்று சாத்தனார் இவற்றினை மீட்டும் கூறி யிருக்கலாம். அன்றி அறவண வடிகளாகிய ஒருவரே இதனை இராசமா தேவிக்கும், மணிமேகலைக்குமாக இருமுறையும் கூறியுள்ளதால், சாத்தனார் கூறியவற்றையே மீட்டும் கூறியு மிருக்கலாம் அதோடன்றி, அரசிக்கு இவ்வறங்களைக் கூறிய பின்னர் மணி மேகலையை நோக்கி முனிவர்,

"மறுபிறப் புணர்ந்த மணிமேகலை நீ
பிறவறங் கேட்டபின் னுள்வந் தனக்
கித்திறம் பலவுமிவற் றின்பகுதியு
முத்தேர் நகையாய் முன்னுறக்கூறுவல்" (24: 143-6)

எனக் கூறியுள்ளதாலும், மீட்டும் அவற்றைக் கூறியுள்ளது ஆசிரியர் பால் குற்ற மாகாதென்பதைத் துணிவுபட உணர வலியுறுத்துகின்றன.

(தொடரும்)

ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்றாவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியராகிய ரெயினல்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.
அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.
உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர் :—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஊக்கமும் உயர்வும்

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

உலகத்து வாழும் உயிர்களனைத்தும் தத்தம் உணவு முதலியவற்றிற்காக முயலுதல் இயல்பு. உணவு, துயில், தய்ப்பு மூன்றும் எல்லாவுயிர்கட்கும் ஒக்கும். ஏனை உயிர்களில் நின்றும் மக்களை வேறுபடுத்துச் சிறப்பிப்பது அறிவாம். அறிவானே பிறவற்றான் எய்தத்தகாதனவற்றை மக்கள் இனிதின் எய்துகின்றனர். எக்காலத்தும் மக்கள் தம் உயர்வு அறிவை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகும்.

அறிவும் முயல்வார்க்கன்றிப் பெரிதும் பயன்படுதலின்று. 'அறிவுடையாரெல்லா முடையார்' ஆவது அவர்தம் அறிவு முயற்சி வகையாற் பயன்படுமிடத்தேயா மென்க. முயற்சியும் தனக்கு உரிய கழிசிறப்பைத் தருவது ஊக்கம் உறுதியின் ஒருங்கு நிகழுமிடத்தே. இடையீடற்ற முயற்சிக்கு ஊக்கம் காரணமாய் நின்று, அம் முயற்சிபயனை எய்துவிக்கின்றது. இடையே ஊக்கம் தவறுபடின், முயற்சி பிறழ்ந்து விடுகின்றது. முயற்சி பிறழவே குறிக்கோள் முடிவுறாதாகின்றது.

மக்கள் பிறப்பான் மேம்பட்டவர் என்பது அவர் மாட்டு உயர்வு நிலைபெறு மிடத்தேயாம். அரிய செயலான் உயர்வுறாத விடத்து, மக்களுக்கும் விலங்கு முதலிய ஏனைய உயிர்கட்கும் வடிவானன்றி வரும் வேற்றுமைதான் யாதுகொல்? உயர்வுக்கு இன்றியமையாத ஊக்கமில்லா விடினும், மக்கள் அல்லர். அது பற்றியன்றே,

'உர மொருவற்குள்ள வெறுக்கை யஃதில்லார்
மர மக்களாதலே வேறு'

எனத் திருக்குறளிலுங் கூறப்பட்டது? ஊக்க மில்லாதார் யார் அவர் உயர்வில்லாதார் என்பது ஒக்கு மென்க.

கல்வி, செல்வம், புகழ் முதலிய கைகொடுப்பது ஊக்க முடையார்க்கு. செல்வம் ஊழானும் எய்துப என்பவேனும், அது நிலையுதலுறுதல் ஊக்க முடையாரிடத்தே என்பதற்கு மறுப்பு உண்டுகொலோ? செல்வம் இயற்கையிற் பெறுவிடினும், ஊக்க மிருப்பின், அதனை எய்தலா மென்பது ஒரு தலையாதலின், அவ் வூக்கமுடைமையே நிலைத்த செல்வம்; செல்வ முடைமை உடைமை எனப்படுமே எஞ்ஞான்றும்?

'உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்'—திருக்குறள்.

அமெரிக்கா முதலிய நாடுகளிற் செல்வமுடையா ரிருப்பாருட் பெரும்பாலாரும் தத்தம் ஊக்கத்தான் உயர்ந்தாராவர் என்பது விலங்கல் விளக்கு. அவர் பிறந்தகம் வறுமையான் மூடப்பட்டு அல்லற் குழியாய்க் கிடப்ப, அவரது இடையீடற்ற ஊக்கமன்றோ அவர் மனைகளைச் செல்வச்சாலைகளாகமாற்றின? இராக்பெல்லர், போர்டு முதலியோர் பொருளுலகில் பகல்களாகப் பிறங்குதற்கு அவரது ஊக்கமே உடங்கு நின்று உதவிற்று என்பதை மறுப்பார் யாவர்?

'ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை' அன்றோ?—திருக்குறள்.

கல்வி புகழ் என்னுமிரண்டும் ஊக்கமுடை முயற்சியான் எய்தப்படா; ஊழான் வருவன என்பாரும் உளர். அவர் அறியார் என்க. என்னை? 'தெய்வத்தா னாகா தெனினும் முயர்சிதன்—மெய்வருத்தக் கூலி தரும்' என்பது பொய்படாதாகலின். ஊழும் முயற்சியும் இருவேறு பகுதிப் பட்டன. ஊழின் உறுவன உறுக; முயற்சியான் வருவன ஒருவா. ஆகலின், கல்வி புகழ் முதலியவற்றின் உயர்வுக்கும் ஊக்கமே காரணமாம். ஊக்கம் எத்துணைக்கு மிகும் அத்துணைக்கு உயர்வும் மிகும்.

'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு'—திருக்குறள்.

ஊக்கங் கோடற்குப் பல தடைகளுள ; ஆகலான், ஊக்கத்திற்கும் ஓர் ஊழ் வேண்டும் என்பார் ஒரு சாரார். அவர் ஊழ் உறுதற்கும் ஓர் ஊழ் வேண்டும் என்பர் போலும்! ஊக்கம் கொள்க; ஊழ் என்செயு மென்பது அறிவாம். ஊக்கத்திற்குப் பல இடையூறுகள் உள,—அவை இகல்கின்றன என்பது மடியுடையார் கோளாம். ஊக்க முடையார்க்கு இடையூறுகள் தாமே ஒழியும்; சிலவிடத்து ஊக்கந் தவறுபடினும், ஒருவர்தம் ஊக்க முடையார், நீண்ட முயற்சியின் பயனாக வேனும், தம் குறிக்கோளை எய்தாது விடுவதில்லை. 'ஊழான் எமக்கு உயர்வு எய்தும்; அப்போழ்து நுகர்தும்' என்றிருப்பதினும், ஊக்கமுற்று உழைத்துத் தவறினும், அஃது உயர்வுடைத்தாம். ஆண்டுக் கடப்பாடு தவறிற்றில்லை யாதலின்.

பெரும்புலவாணரும் புகழாரும் இவ்வூக்கத்தை ஒப்பற்ற கருவியாக வைத்துக் கொண்டே தம் குறிக்கோளை யெய்தினர். ஊக்க மில்லாதார் அவரை நோக்கிப் புண்ணிய முடையர் எனக் கூறித் தமக்கு ஊழில்லை என்று அகம் வெதும்பி நிற்கின்றனரே யன்றித் தம் ஊக்க மின்மையை நோவாரைக் காணேம். இன்று, கல்வி முதலியவற்றின் எதனாலும் உயர்வின்றிப் பாழின் வாழ்வாரெல்லாம் ஊக்கத்தைக் கைவிட்டு ஊசலாடுகின்றவராவர் என்பதில் சிறிதும் ஐயமின்று. ஊக்கத்தினை உற்ற துணைவனாகக் கொண்டிருப்பின், அவர்கள் இத்தகைய நிலையை எய்தி வருந்தியிருக்க மாட்டார் என்பது ஒருதலை. 'புகழ்படவாழாத' அவர் 'தந் நோவர்' 'தம்மை இகழ்வாரை நோவதெற்றுக்கு?

'இளம்பருவத்தை இழந்தேம், இனி யாம் ஊக்க முற்று என் பயன்?" என நினைந்து வருந்தி வாழ்வாரும் பலர். அங்ஙனம் ஒருகால் வருந்திய

அவரே ஆறேழியாண்டுகளகன்ற பின்னரும் அவ்வாறே கூறிக்கொண்டு நாக்கூசாது வாழ்கின்றனர். அக்கால முழுதும் அவர் தம் விழற் சொற்களை விட்டொழித்து, முயற்சியில் ஊக்க முற்றிருப்பரேல், உலகப் புகழாளரில் ஒருவராக மாறி இன்பவாழ்வு எய்தியிருக்கலாகும். இன்னும் கழிவிரக்கம் கொண்டு, சாலவருந்தி, ஆயுணாட்களை நோயுணாட்களாக நீப்பர் போலும்!

ஊக்கத்திற்கென உறுதிப் படுத்தப்பட்ட செவ்வி இன்று உடல் உறுதியொடு நிகழ்கின்ற நாளெல்லாம் ஊக்கத்தொடு கழியத் தக்கனவாம். ஒவ்வொரு நொடியும் உள்ளுறுதியொடும் ஊக்கத்தொடும் அகலின், மக்கள் மக்களாவர் என்பது பிறிதுபடாது. நம் நாட்கள் ஊக்கறு நாளாகாது; அஃது எழுநாளாக வேண்டும். எந்நாண் முதலேனும் ஊக்கங் கைக்கொண்டு உழைக்க முற்படுவோர் சின்னாளில் வெற்றியைக் காண்பர். உலகம் பெரும்பாலும் செல்வத்தினும் அறிவினும் வறுமைப் பட்டு உழல்வது ஊக்க மில்லாமையாலாம்.

ஊக்கங் கோடற்கு எனச் செவ்வியையோ வாய்ப்பையே எதிர் நோக்குதல் வேண்டா. வாய்ப்பினால் வாழ்வது உயர்வன்று. பொருக்கெனக் கண்ட புதையற் பொருளான் வாழ்வதினும், ஊக்கத்தோடு தேடிய ஆக்கத்தான் வாழ்வதே மாண்பிற்று. வாய்ப்பைக் கருதுநர் வெற்றி எய்துதல் அரிது. ஊக்கமுடையார்க்கு ஒரு நாளும் தோல்வி இன்று; தெய்வமும் அவரைச் செருக்கு மாறில்லை. எதிர்பாராது வாய்க்கும் நலனை இழந்து தமது ஊக்கத்தான் அதனை யடைவாரே திறலுடையார்; வாய்ப்பையும் வாழ்வையும் நோக்கி வருந்துவார் பேடியரே. வாய்ப்புடைப் பொருளான் வாழ்வது உண்மை ஊக்க முடையார்க்கு இழிதகவிற்று எனத் தோன்றும். அறிவுடையார், தாம் ஊக்கத்திற் குறைதலின்றித் தமக்குறும் வாய்ப்பு நலங்களையும் அத்துடன் பயன்படுத்திக் கொண்டு மேன்மை எய்துவர்; ஆயினும், வாய்ப்பை ஒரு பொருளாக மதியார்.

செந்நெறிப் படாதவிடத்து, ஊக்கம் உயர்வு பயவாது; ஆகலின், உள்ளம் ஒரு நெறிப்பட்ட அறநெறிக்கண் ஒழுகுதல் வேண்டும். இழிவான நினைவுகளிடை உள்ளத்தைப் புகுத்தி, அவற்றைச் செய்தலின் கண்ணே ஊக்கின், அவ் வூக்கமே ஒருவற்குப் பேரிழிவு புகுத்தச் சாலும். உள்ளமும் ஊக்கமும் உயர்வழியோடி உறுதி பெறுதல் வேண்டும். தீச்செயல்களிற் றங்கிய உள்ளம் அவற்றிலே ஊக்கி நிற்பின், மக்கட் பிறப்புப் பயனற்றதாம். ஊக்கம் உயர்வு கருவியாவது நல்லாருழையேயாம். நல்லூக்கம் ஒருவற்கு நலம் பல தந்து நின்று நிலைக்கும் புகழுடம்பைப் படைத்தளிக்க வல்லது.

'உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து'—திருக்குறள்.

"ஊக்கமது கைவிடேல்"

24. ஸ்காட்லந்து அரசி மேரி

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

சென்ற தொடர்ச்சியில் எழுதப்பட்டபடி இங்கிலாந்தில் ஆங்கிலிகன் மதத்தை எலிஸபெத் ஸ்தாபித்த போது, கதோலிக்கருக்கும், தீவிர சீர்திருத்த வாதிகளான பரிசுத்த வாதிகளு (Puritans)க்கும் மனவெறுப்பு உண்டாயிற்று. அவர்களிருவரும் தேசத்தில் சிறு பான்மை மக்கள். அதிலும் சீர்திருத்தம் அதிகமாகச் செய்யப்பட்டு, போப்பின் மதச் சின்னங்கள் பூராவாக அழிக்கப்பட வில்லை யென்ற குறையுடன் மட்டும் நின்று, விரோதப் படாமல் இருந்தவர்கள் பரிசுத்த வாதிகள். ஆனால் கதோலிக்கரோ, போப்பு மதச் சின்னங்களை ஒப்புக்கொண்டும், பூராவும் அந்த கதோலிக்க மதத்தை அனுஷ்டிக்க விடாத எலிஸபெத்தி னிடத்தில், தீராத குரோதம் ஏற்பட்டது. அதைக்கொண்டு எலிஸபெத் ராணியைக் கொன்று விட வேண்டும் என்று கதோலிக்கரில் சிலருக்கு மனதில் தோன்றி, பல சதியாலோசனைகள் செய்யப்பட்ட விபரம் எந்த இங்கிலந்து சரித்திர புத்தகத்திலும் காணப்படும் உண்மை. அவைகளிற் சிலவற்றின் பெயர்கள் செய்தவர்களின் பெயர்களை யொட்டி Babington plot (பேபிங்டன் செய்த சதி;) Throck Morton plot (தராக் மார்ட்டன் செய்த சதி;) Ridolfi plot (ரிடால்பி செய்த சதி;) என்பனவாம். இவர்களும் இவர்களுக்கு உதவி செய்தவர்களும் சேர்ந்து, எலிஸபெத் கொல்லப்பட்ட பிறகு, ராணியாக்கிவிட விரும்பப்பட்டவள் தான் இந்தக் கதைத் தொடர்ச்சியின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட ஸ்காட்லந்து அரசி மேரி.

ஹென்ரி VII தன் ஸ்தானத்தைப் பலப்படுத்திக் கொள்ளவும், தனக்கு கௌரவமான அன்னிய நாட்டு சம்பந்தம் இருக்கவும் என்று, தன் மகள் மார்கரெட் என்பவளை ஸ்காட்லந்து அரசன் ஜேம்ஸ் IVக்கு கல்யாணம் செய்வித்தார். அந்த ஜேம்ஸ்க்கும் மார்கரெட்டுக்கும் ஜேம்ஸ் என்ற பிள்ளை பிறந்து ஜேம்ஸ் V என்ற பட்டத்துடன் ஸ்காட்லந்தை ஆண்டு வந்தான். ஆனால் அவனுடைய தகப்பனாரும், அவனும் இங்கிலந்து அரசருக்கு எதிராக சண்டை செய்து இறந்தனர். அந்த ஜேம்ஸ் Vக்கு பிரான்ஸ் தேசத்திய கீஸ் குடும்பத்திய மேரி என்பவள் (Mary of Guise) மணஞ் செய்விக்கப்பட்டு, அந்த மணத்தில் பிறந்த குழந்தை தான் ஸ்காட்லந்து அரசி மேரி என்பவள்.

இவள் பிறந்த ஆறு மாதங்களுக்குள்ளாக இவளுடைய தகப்பன் யுத்தகளத்தில் தோற்று மனதுடைந்து இறந்தான். இதே மேரி குழந்தையாக இருந்தபோது தான், எட்வர்ட் VIன் மாமன் ஸாமர்ஸெட் பிரபு, ஸ்காட்லந்தின் மேல் படையெடுத்து, வெற்றி பெற்றும் பயனில்லாமல் போயிற்றென்ற விபரம் முன்பொரு தொடர்ச்சியில் எழுதப்பட்டது. அதுவேதான் ஸாமர்ஸெட்பிரபுவின் வீழ்ச்சிக்கும், நார்த்தம்பர்லண்ட் பிரபு செல்வாக்கிற்கும் காரணம் என்பது அப்போது குறிப்பிடப்பட்டது.

யுத்தத்தில் தோற்றுவிட்ட கீஸ் மேரி, தன் பெண்ணுடன் பிரான்ஸுக்கு ஓடி, பின்னால் அந்த தேசத்து இளவரசனுக்குத் தன் மகளைக் கல்யாணம் செய்து வைத்து, தன் மகனுக்குத் தான் ரீஜண்டாக ஸ்காட்லாந்தை யாண்டு கொண்டிருந்தாள். அந்தக் காலத்தில், சீர்திருத்தக்காரர்களுக்குள் முற்போக்காளரான, கால்வின் (Calvin) என்பவருடைய சீடன் ஜான் நாக்ஸ் (John Knox,) ஸ்காட்லந்தில் தீவிர சீர்திருத்த மதத்தைப் பரவச் செய்தான். அந்த நாக்ஸையும் அவன் இனத்தாரையும், கதோலிகருடைய அக்காலத்திய ஸ்வபாவப்படி, படாதபாடு படுத்திக் கஷ்டப் படுத்தினாள் கீஸ் மேரி. கஷ்டம் அதிகமாக அதிகமாக, ஸ்காட்லந்தில் நாக்ஸ் பரப்பிய கொள்கைகளுக்கு எருவிட்டுத் தண்ணீர் பாய்ச்சியது போலாயிற்று! வெகு துரிதமாக பரவியது!! இந்த மத்தியில் கீஸ் மேரியின் பெண், பிரான்ஸில் இளவரசியாக இருந்து, பிறகு ஒரே வருஷம் பிரான்ஸின் இராணியாகவும் ஆகி, மறுவருஷத்தில் கணவனை யிழந்து கைம்பெண்ணாகி, தன் ஸ்வதேசத்திற்குத் தாயார் இறந்து, வந்து சேர்ந்தாள்.

ஆனால் ஸ்காட்லந்தில் தீவிர சீர்திருத்த மதம் பரவியிருந்த முறையிலும் கீஸ் மேரி படுத்திய துன்பங்களினாலும், தங்கள் அரசி மேரியும் கதோலிக மதத்தைச் சேர்ந்தவளாதலாலும், அரசிக்கும் பிரஜைகளுக்கும் இருக்கக்கூடிய ஒர்மை எவ்வளவென்பது சொல்லாமலே விளங்கலாம். அந்த நிலையில் கதோலிக மதக்காரரான, டார்ன்லி பிரபு வென்ற ஒரு இங்கிலாந்து பிரபுவை மணந்து கொண்டாள் ஸ்காட் அரசி மேரி! இந்த டார்ன்லி யாரென்றாலோ, முன்பு ஜேம்ஸ் IV ஐ மணந்த மார்கரெட் என்பவள் ஜேம்ஸ் IV இறந்ததும் இங்கிலந்தில் ஒரு பிரபுவை மறு மணம் செய்துகொண்டதில் பிறந்த ஆண் சந்ததி டார்ன்லி பிரபு. (ஆழ்ந்த யோசனையின் பேரில் மேரி இவரை மணந்து கொண்டாள் என்று சில சரித்திரக்காரர்கள் சொல்லுவார்கள்.) எப்படியோ ஜனங்களுக்கும் மேரிக்கும் வித்தியாசங்கள் ஏற்பட்டு, "தன்னளவில் தன் கதோலிக மதத்தை அனுஷ்டிக்க அனுமதித்தால் போதுமானது" என்று மன்றாடிக் கேட்கும் நிலைமைக்கு மேரி வந்துவிட்டாள்! ராணி மேரிக்கு அந்தரங்கக் காரியதரிசி ரிஸ்ஸியோ (Rizzio) என்ற இத்தாலியன் ஒருவன் இருந்தான். அவனும் தன் மனைவியான ஸ்காட் அரசி மேரியும் நடந்து கொண்டதில், டார்ன்லி பிரபுவுக்குக் கோபம் வந்து, மேரி வெகு சிரமப் பட்டுத் தடுத்தும் முடியாமல் டார்ன்லி ரிஸ்ஸியோவைக் குத்திக் கொலை செய்து விட்டான்! தன் கணவன் செய்த அந்தக் குற்றத்தை மேரி மறந்தாளில்லை. சரியாக ஒரு வருஷம் கழிந்து கர்க்கோபீல்ட் (Kirkofield) என்ற அவனுடைய விடுதி கொளுத்தப்பட்டு கரிபடிந்த டார்ன்லியின் தேகம் கொலை காயங்களுடன், ஒரு வயலிலிருந்து, எடுக்கப்பட்டதாம்! அந்தக் கொலையைச் செய்தவன் ஸ்காட்லந்திலுள்ள பாத்வெல் பிரபு

(Earl Bothwel) என்று ஜனங்களால் சந்தேகிக்கப்பட்டான். அதே பாத்வெல்லை, சில வாரங்களுக்குள் மேரி மணந்து கொண்டாள். (கணக்கி லடங்கிய மூன்றாந்தாரம்). இந்த ஒரு அடாத காரியத்தினால், ஸ்காட்லந்து ஜனங்களுக்கு அடங்காத கோபம் ஏற்பட்டு, டார்ன்லியினிடம் பிறந்த சிறு குழந்தை ஜேம்ஸைப் பிடுங்கிக்கொண்டு பாத்வெல்லையும் மேரியையும் துரத்தித் துரத்தி யடித்து சண்டையிலும் தோற்கடித்து, மேரியை லாக்லவன் (Lockloven) என்ற கோட்டையில் சிறை வைத்தார்கள். அங்கிருந்த மேரி, வாயிற் காப்போனை எப்படியோ சரி செய்துகொண்டு, தப்பித்து, இங்கிலந்துக்குள் போயச் சேர்ந்து, எலிஸபெத்தினிடம் தஞ்சம் அடைந்து அவளுடைய ஆதரவில் தப்பியோடி பிரான்ஸுக்கோ அல்லது வேறு எங்கோ போய்விட விரும்பினாள்.

"பெண்ணென்றால் பேயு மிரங்கும்" என்றபோது, எலிஸபெத்துக்கும் இரக்க சுவபாவ முண்டு. ஆனால் "வேம்புக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் கசப்பு மாறாதது" போலும், "பாம்புக்குப் பால் வார்த்தால் விஷமே கொடுக்கும்" என்றது போலும் அவளிடத்தில் ஏதோ சந்தேகம் தோன்றி பாதரிங்கே (Fotheringay) கோட்டையில் இருக்கச் செய்து அவளிருப்பைக் கௌரவ சிறைவாச மாக்கினாள் தந்திரமுள்ள எலிஸபெத்! "நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது" என்றதுபோல் இந்த காரியமே, "விதைக் கோட்டைக்குள் பெருச்சாளியை விட்டதுபோல்" சுமார் 18-வருஷங்களுக்குத் தீராத பயத்தையும், கஷ்டத்தையும், நிம்மதிக் குறைவையும் கொடுத்தது. சீர்திருத்த மதத்தை ஸ்தாபித்த எலிஸபெத்தைத் தன்னுடைய உத்தரவினால் மதப்பிரஷ்டை யாக்கினார் போப்பெரியார்! அந்தப் பிரஷ்டையை ஒழித்து, கதோலிக்க ராணியை ஸ்தாபனம் செய்வதே மத கைங்கரியமாகக் கொண்டு முனைந்தனர் கதோலிக்கர்! எலிஸபெத்தின் அழகில் மயங்கி மணம் விரும்பிய அக்காள் புருஷன் ஸ்பெயின் பிலிப் II-க்கு சரியான பதில் சொல்லாமல், ஏமாற்றியதில் கோபங்கொண்ட பிலிப்பும் சதியாலோசனை செய்த கதோலிக்கருக்கு மறைவாக உதவினான்! மார்ட்டின் லூதர், கடத்தை முறையில், போப்பிடம் காட்டிய குற்றங்களை மட்டும் களைந்து, ஹென்ரி VIII ஸ்தாபித்து உதவிய கொள்கைகளில் எவ்வித மாற்றமும் இல்லாதபடி, பழைய கதோலிக்கக் கொள்கைகளை ஸ்தாபிக்கவும், பிரசாரம் செய்யவும், அதற்காகவே உடல், பொருள், ஆவிகளை அர்ப்பணித்து, எந்த விதமான காரியத்தையும் யோஜியாமல் செய்து கதோலிக மதத்தை ஸ்தாபிக்கவும், அவசியமானால் உயிரையும் விடத் தயாராகவும் இருக்கவேண்டும் என்று, இக்னேஷியஸ் லயோலா (Ignatious Lyola) என்ற ஒரு பெரியார், "இயேசு சங்கம்" (The Society of Jesus) என்பதை ஏற்படுத்தி, அந்த அங்கத்தினரும், இங்கிலந்து கதோலிக்கருக்கு எலிஸபெத்தை ஒழித்து மேரியை அரசியாக்கச் செய்ய நடத்திய முயற்சிகளில் உதவினாராம்.

இந்த உதவிகளினால், ரிடால்பி, த்ராக் மார்ட்டன், பேபிங்டன் முதலியவர்களால் சதியாலோசனைகள் நடந்து ஒவ்வொரு தடவையிலும் எலிஸபெத்தின் ஆத்மார்த்தமான அந்தரங்க உத்தியோகஸ்தர்கள் அவற்றை யறிந்து, ராணிக்கு வந்த ஆபத்துகளை நீக்கினார்கள். சதியாலோசனையின் மூல புருஷர்களான ரிடால்பி, த்ராக் மார்ட்டன், அந்தோணி பேபிங்டன் என்பவர்

களின் பெயர்களை யொட்டிச் சதியாலோசனைகளுக்குப் பெயர்கள் ஏற்பட்ட விபரமும் ஏனையவும் எந்த இங்கிலந்து சரித்திர புத்தகத்திலுங் காணலாம். ராணி சமயோஜிதம்போல் நடந்தும் வந்தாள். ஆனால் கடைசியாகச் சொல்லப் பட்ட பேபிங்டன் சதியாலோசனை விபரம் வெளிவந்தபோது, "கல்யாணம் செய்துகொண்டு என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கருத்தடங்கிய சிறையிலிருந்த மேரி ஸ்பெயின் அரசன் பிலிப்புக்கெழுதிய கடிதம் கைப்பற்றப் பட்டதாம்! அதைக் கண்ட ஆங்கில ஜனங்கள் ஆத்திரமடைந்து, பார்லி மெண்டு சபையில், "இந்த ராஜத்ரோகி, ஸ்காட் மேரியினிடமிருந்து எப்படி யாவது நீங்கள் தப்பித்துக் கொள்ள அவளுக்குத் தகுந்த தண்டனை விதிக்க வேண்டும்" என்று கோரிக்கை செய்து கொண்டனர். ஆயினும் எலிஸபெத் மிகவும் தயங்கி, கடைசியாக அரைமனதுடன், மேரியின் மரணதண்டனை உத்தரவில் தீராத முறையாக கையெழுத் திட்டு, உத்தரவும் நிறை வேறியது.

அது சம்பந்தமான பலன் விபரங்களடங்கிய "ஸ்பெயின் கப்பல் படை யுத்தம்" அடுத்த தொடர்ச்சியின் விஷயமாகும்.

ஏழைகளின் போஷணையை விருத்திசெய்யும் ஆகாரம்.

1. ரொட்டி, உருளைக்கிழங்கு, மார்கரேயின் இவை முக்கியமாய் அடங்கியுள்ள ஆகாரத்தில் அதிகமாய் பால், பாற்கட்டி, அல்லது பச்சை மரக்கறிகள் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதனால் வேண்டிய அளவு கால்ஸியமும் மற்ற ஆகார வஸ்துக்களும் கிடைக்கும்.

2. இயந்திரத்தில் தீட்டப்படாத தானியவகை சாப்பிட வேண்டும்.

3. வளரும் குழந்தைகளுக்கும், கருப்பிணிகளுக்கும், பால் கொடுக்கும் தாய்மார்களுக்கும் ஒரு தினத்திற்கு ஒரு லிட்டராவது பால் சாப்பிடவேண்டும்.

4. ஏடு எடுக்கப்பட்ட பால் முழுப் பாலைவிட விலை கம்மி. அதனால் அது நல்ல ஆகாரப் பதார்த்தம் ஆகும். அதில் கொழுப்பும், ஏ. டி. ஜீவஸத்துப் பொருள்கள் மட்டும் குறைவு.

5. பாற்கட்டியில் பால் பிராணி வர்க்கத்தைச் சேர்ந்த ப்ரோடீனும், உலோக வஸ்துக்களும் இருக்கின்றன. ஆனதுபற்றி, அது அவர்களுடைய ஆகாரத்தில் அதிகமாய்க் கலக்கவேண்டும்.

6. வெண்ணெய் சாப்பிடாதபக்ஷத்தில், பச்சை மரக்கறிகளும் காரெட்டும் அதிகமாகச் சாப்பிடவேண்டும். இவைகளில் ஏ. ஜீவஸத்துப் பொருள்கள் இருக்கின்றன.

7. ஜீவஸத்துப்பொருள் கலந்த மார்கரெயினை அதிகமாக உபயோகிக்கவேண்டும்.—(ஆ. நீ.)

சாதாரண தர்மம்

(வி. சங்கரய்யர்.)

47. தன்னின் உயர்ந்தவரை யேனும், தன்னை ஒத்தவரையேனும் வணங்கும் பொழுது அது அவர்களிடத்தி லிருக்கும் அந்தராத்மாவான கடவுளுக்கே என் றறியவும்.

48. மற்றவர் நம்மை வணங்கினும், அதுவும் நம் முள்ளிருக்கும் அந்தராத்மாவான கடவுளுக்கே என்றெண்ணவும். இந்த பௌருஷமான ஸ்தூல சரீரத்துக் கென்று அஹங்காரம் (மமதை) கொள்ளக் கூடாது.

49. ஒருவன் நமக்கு இடும் போஜனத்தை இகழ்ந்து பேசலாகாது. தான் பிறருக்கு செய்யும் தானதிகளைப் புகழ்ந்து பேசி ஆத்மஸ்துதி செய்யக் கூடாது.

50. உத்தராயனம் தக்ஷிணாயனம், துலாவிஷு, மகரவிஷு, அமாவாசை, பௌர்ணிமை முதலிய விசேஷ தினங்களில் மாத பிதா குரு தெய்வம் இவர்களை வணங்க வேண்டும். இதனால் மற்ற நாட்களில் வணங்க வேண்டுவ தில்லை என்ற பொருள் கிடையாது. இது அவசியம் செய்ய வேண்டியது என் பதையே காட்டுகின்றது.

51. சூரிய உதய காலத்திலும் அஸ்தமன காலத்திலும் சயனமோ போஜனமோ செய்யலாகாது. நித்திரை செய்பவனை மூதேவியும், உண்டவனை வியாதியும் அணுகும்.

52. நோயா யிருக்கும் பொழுது கழுத்தின் கீழ், அரையின் கீழ், கால் இவைகளுள் ஒன்றை நோயின் வலிமைக்கு தக்கபடி ஜலத்தினால் சுத்தம் செய்துகொண்டு சுத்த வஸ்திரம் தரித்துக்கொள்ள வேண்டும்.

53. ஒரு பொழுதும் முகத்தையும் கை கால்களையும் கழுவாமல் புசிக்கலாகாது.

54. இடக்கையில் அன்னத்தை வைத்துக் கொண்டும் ஆசனத்தின் மீது இலையை போட்டுக் கொண்டும் நின்று கொண்டும் நடந்து கொண்டும் புசிக்கலாகாது.

55. வயிற்றினுடைய பாதியை அன்னத்தாலும், கால் பாகத்தை தண்ணீராலும் நிறைத்து மீதியை வாயு சஞ்சரிக்க விடவேண்டும்.

56. இரவில் ஒரு ஜாமத்திற்குள் அதாவது 9 மணிக்குள் புசித்தலே உத்தமம். $1\frac{1}{2}$ ஜாமத்திற்குள் மத்திமம். 2 ஜாமத்திற்குள் புசித்தல் அதமம். அதன் மேல் புசிக்கலாகாது.

57. வெண்கலப் பாத்திரத்தில் விடப்பட்ட இள நீரும், தாமிர (செம்பு)ப் பாத்திரத்தில் விடப்பட்ட பாலும் கள்ளுக்குச் சமானம் என்று தெரிந்து அவைகளை அருந்தலாகாது.

58. நின்றுகொண்டு ஜலபானம் செய்யலாகாது.

59. வாய் கொப்பிளிக்க நீரை உள்ளே விடாமல் உமிழ வேண்டும்.

60. போஜனம் செய்தவுடன் ஸ்நானம் செய்யக் கூடாது.

61. அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாசை, மாதப்பிறப்பு, பௌர்ணிமை என்ற பர்வங்களிலும், பிரதமை, சஷ்டி, துவாதசி என்ற திதிகளிலும், திருவாதிரை, கேட்டை, உத்திரம், ஜன்மநக்ஷத்திரம் இவைகளிலும், இரவிலும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாகாது.

92. தலையிலிருந்து வடியும் எண்ணெயை உடலிலே தேய்க்கக் கூடாது. எண்ணெய் தேய்த்துக்கொண்டு மலஜல விஸர்ஜனம் செய்யக் கூடாது. குளித்த பின்பு எண்ணெய் தேய்த்துக் கொள்ளக் கூடாது.

63. ஆடவர்களுக்குப் புதனும் சனியும், பெண்டிருக்கு செவ்வாயும் வெள்ளியும் எண்ணெய் தேய்த்துக் குளிக்க உத்தமம்.

64. க்ஷௌரம் செய்து கொள்ள திங்கள், புதன் கிழமைகள் உத்தமம். வியாழன் வெள்ளிக்கிழமைகள் மத்திமம். மற்றவை அதமம்.

65. பிரதமை, சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி, அமாவாசை திதிகளும், ஞாயிறு, செவ்வாய், சனிக்கிழமைகளும், கார்த்திகை, ரோஹிணி, மகம், உத்திரம், மூலம், உத்திராடம், உத்திரட்டாதி நக்ஷத்திரங்களும், ஜன்மநக்ஷத்திரமும், மதப்பிறப்பும், விரத தினங்களும், பிதுருதினங்களும், சந்தியாகாலமும், மத்தியான காலமும், இரவும், போஜனம் செய்த பிறகும், வியாதியா யிருக்கும் பொழுதும், க்ஷௌரம் செய்து கொள்ளக் கூடாது.

66. ஆனால் புண்ணிய ஸ்தலத்தையும், புண்ணிய தீர்த்தத்தையும் அடைந்த பொழுதும் ஆசௌச முடிவிலும் திதிவார நக்ஷத்திரங்களைப் பார்க்காமல் க்ஷௌரம் செய்து கொள்ளலாம்.

67. ஜனன ஆசௌசத்தின் முடிவிலும்; மரண ஆசௌச முடிவில் பந்துக்களும் க்ஷௌரம் செய்து கொள்ளா விட்டாலும் ஆசௌசம் நீங்காது.

68. எருக்கு, கள்ளி, ஆமணக்கு இவைகளின் நிழலில் பகலிலும், விளா, அரசு இவைகளின் அடியில் இரவிலும் இருக்கக் கூடாது.

69. பிறர் புறப்படும் பொழுது தும்மலும், அவரை அழைத்தலும் எங்கே போகிறீர்கள் என்று கேட்டலும் கூடாது.

70. பிறர் இரகசியம் பேசும்போது அதைக் கேட்கலாகாது.

71. காரண மின்றித் துரும்புகிள்ளுதல், நிலத்தைக் கீறல், மண் கட்டியை உடைத்தல், தலையை உதறல், இரு கைகளாலும் தலையைச் சொறிதல் கூடாது.

72. விளக்கை வாயால் ஊதலாகாது.

73. ஒருவனுடைய வஸ்திரம், பாதரக்ஷை, புஷ்பம், படுக்கை முதலியவைகளை உபயோகிக்கக் கூடாது.

74. துணையின்றி தனித்தாயினும், முன் பின் அறியாதவனோடும் வழி நடக்கலாகாது.

75. செய்ய முடியாத காரியத்தை செய்ய இயலுமென்று கூறுதே.

76. போது மென்ற குணமே மேல் என்றும், கடன் படா வாழ்வே மேல் என்றும் உணரவேண்டும்.

77. கல்வி யறிவால் ஆகிய பெருமையே பெருமை. ஆதலால் கற்கப் பாடு படவேண்டும்.

73. கோள் கேட்பவன் இல்லையேல் கோள் சொல்பவனு மில்லை.

79. கடன் படும் செல்வர்களிலும் கடன் படா ஏழையே மேல்.

90. உண்ணும் வகை யறிந்து உண்; உண்ட பின் குறைந்தது நூறடி நட. பகலில் தூங்காதே, வாரமொரு முறையாவது எண்ணெய் தேய்த்துக் குளி, இப்படி இருந்தால் நோயே அணுகாது.

80. கடவுள் திருவருள் பெறப் பாடுபடு.

குருடனுக்குக் கண் வந்தது.

கண் சாஸ்திர சிகிச்சையின் மேன்மையால், இரண்டு வயது முதல் இருந்த நியூகாஸலைச்சேர்ந்த ஹென்க் வாட்ஸன் என்பவருக்குக் கண்வந்தது. இந்த கேஸ் பிரயோஜனமில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. அப்படியிருக்க, கார்டிக்ஸ்பெஷலிஸ்ட் ஒருவர், நுட்பமான ஆபரேஷன் செய்து வேறு இரண்டு குருடர்களுடைய கார்னியாவை எடுத்து, வாட்ஸனின் நோய்ப்பட்ட கார்னியாவிற்குப் பதிலாக வைத்தார். ஸர் ட்யூக் எல்டர் உட்பட பிரசித்திபெற்ற ரண வைத்தியர்கள் வாட்ஸனை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்தனர்.—(ஆ. நீ.)

சிறுகதை

தற்கொலை

—(0)—

(பண்டிதை-ரா. ரங்கநாயகி.)

பஞ்சம் ஆரம்பித்துவிட்டது. உடனே உத்தியோகமில்லாதார் சங்கத்தில் தலைமைப் பதவி வகிக்கலானேன். சஷ்டி பூர்த்தி முடிந்தது. மனைவி மண்ணுலகு நீங்கி மறு உலகம் புகுந்தாள். இருந்த ஓரே ஒரு மகனும் தேச சஞ்சாரம் செய்யப்போனவன் திரும்பி வரவேயில்லை. எனக்கு இவ்வளவு வயதாகியும் ஒருநாள் கூட நான் வேலையில்லாமல் இருந்து அறியேன். பஞ்சம் வந்தது. இருந்த வேலையிலிருந்து தள்ளிவிட்டார்கள். மனதும் பைத்தியம் பிடித்துவிடும் போலாய்விட்டது.

ஏதோ கிடைத்ததை வைத்துக்கொண்டு வயிறு வளர்க்கலாமென்று காலையிலெழுந்து ஊரெல்லாம் சுற்றினேன். நடந்து நடந்து கால்கள்தான் தேய்ந்தனவே யொழிய எங்கும் வேலை கிடைக்கவில்லை. மொண்டி முடமாயினும் வாலிபர்களா யிருந்தால் சேர்த்துக்கொள்ளுவோ மென்கிறார்களே யொழிய என்போன்ற கிழவன் தேவையில்லை என்கிறார்கள். என்ன செய்வேன்?

சிறுவயதில் பல வருஷங்கள் 'தோட்ட வேலையி' லிருந்துவந்தேன். பிறகு நெசவுத் தொழில் செய்துவந்தேன். இளஞ் செடிகளின் மீதும், புஷ்பங்களின் மீதும் இருந்த காதலால் எங்காவது திரும்பவும் தோட்ட வேலை கிடைக்குமா என்று தேடி அலைந்தேன். பிராம்மணர்கள்—அதிலும் முக்யமாக சனாதனிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள்—தங்கள் வீட்டிற்கு ஐம்பது கெஜ தூரத்தில் இரு என்று சொல்லுகிறார்கள். மற்றவர்கள் கிழவன் வேலைக்குதவான் என்று சொல்லிவிட்டார்கள்.

மீதி இருந்த கொஞ்சப் பணமும் செலவாய்விட்டது.

தருமம் செய்யும் தரும கர்த்தாக்களைக் கேட்டால் "குழந்தை குட்டி ஒன்றுமில்லையே. உன் ஒருத்தன் வயிற்றை நிரப்பிக்கொள்ளமாட்டாயோ? ஏதாவது கூலி வேலைசெய்து பிழைத்துக்கொள். போ; போ," என்கிறார்கள். அப்படித்தான் ஏதாவது வேலை கொடுத்தால் செய்கிறேன் என்று அவர்களையே கேட்டால் "கிழவனுக்குத் தகுந்த வேலை எங்களிடம் ஒன்றும் கிடையாது" என்கிறார்கள்.

மாலை நேரமாயிற்று. சூரியனும், அதன் பின்னர் பக்ஷிகளும் தத்தம் இடங்களைச் சேர்ந்து சிறிது நேரமாயிற்று. ஆகாயம் முழுதும் மேகஞ் சூழ்ந்து இருள் மூடியிருந்தது. என் மனமும் பழையபடி ஊசலாடத் தொடங்

பெது. அலைந்து திரிந்து திரிந்து கடைசியில் ஓர் "பார்க்"கை அடைந்தேன். அன்றைப் பொழுது கழிந்தது. சிவனே என்று அங்கிருந்த ஓர் மரத்தினடியில் தலை சாய்த்துப் படுத்தேன். மேலே கந்தல் துணிகளைப் போர்த்துக்கொண்டேன். கண்களை மூடினேன். குளிர் குடலைப் பிடுங்கிற்று. உடம்பெல்லாம் ஜுரம் வந்ததுபோலிருந்தது.

பொழுது விடிந்தது. என் கூடவே மரத்திலிருந்த பறவைகளும் தூக்கத்திலிருந்து எழுந்தன. தண்ணீர் குடிப்பதற்கு வந்தன போல் குளக்கரையில் சுற்றிலும் உட்கார்ந்திருந்தன. ஆகாயத்திலிருந்து பனித்துளிகள் விழுந்துகொண்டிருந்தன. நான் எந்த மரத்தின் கீழ் படுத்திருந்தேனோ அந்த மரமுங்கூட இரவெல்லாம் என் துன்பத்தைப் பார்த்தோ என்னவோ என்போலவே முத்துக்கள் போன்ற நீரை உதிர்த்தது. மூன்று நாளும் எனக்கு ஆகாரமின்மையால் என் வயிறு ஒட்டிக்கிடந்தது.

எழுந்திருந்து காலைக் கடன் முடிக்கச் செல்லவும் சக்தியில்லை. உயிரோடிருப்பது பெரிய பாரமாயிருந்தது. ஒன்றும் தோன்றாது சுற்று முற்றும் பார்த்து விழித்துக்கொண்டிருந்தேன். இதற்கு முன்பு இறப்பது என்றால் துள்ளி விழுந்த என் மனம், தற்கொலை செய்துகொள்ளலாமென்று துணிந்துவிட்டது. எதிரிலிருந்த குளம் என்னை வா வா என்றழைத்தது. இதைவிடச் சுலபமான வழி ஒன்றுமில்லை என்றெண்ணினேன். எழுந்து போகலாமென்றால் முழங்கால்கள் பிடித்துக்கொண்டன. குளிரினால் இரத்தம் கட்டிவிட்டது. அப்படியே மெதுவாக நகர்ந்துகொண்டே போனேன்.

என்னென்று சொல்வேன்? நிமிஷத்தில் என் உயிர் சக்கரம்போல் சுழன்றது. நான் படித்துக்கொண்டிருந்த நாட்கள், தோட்டக்காரனாயிருந்த காலம், என் தாயார் என்னை வளர்த்த அருமை, என் மனைவியும் நானும் பையனைப் பார்த்துப் பார்த்து ஆனந்தித்த தினங்கள், வேலையில் அமர்ந்தது, பிறகு நான் பட்ட கஷ்டங்கள், இனி நான் அடையப்போகும் ஆண்டவனின் பாதாரவிந்தம், ஆஹா! என்ன ஆச்சரியம்!

..................குளு..................குளு...............

ஆயினும் எனது நாடகம் இன்னும் முடிவடையவில்லை. ஒரு முழுக்கு முழுகினேன். இரண்டாவது முழுக்கு முழுகி மேலே வந்தேன். அப்படியே

கின்றேன். யாரோ என்னுடைய உச்சிக் குடுமியைப் பிடித்து மேலே தூக்கினார்கள். முன் ஒரு முறை மகாத்மா காந்தியடிகளை "உமது உச்சியில் பறக்கிற அந்த நான்கு குடுமியை எதற்காக வைத்திருக்கிறீர்கள்" என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் சொன்னார், "பகவானுக்கு நம்மீது எப்பொழுதாவது தயை பிறந்தால் தன்னிடம் இழுத்துக்கொள்ளுவதற்காக" என்று பதில் சொன்னாராம். நான் என் குடுமியை அவ்வளவு முன் யோசனையோடு வைத்



திராவிடினும் அம்மாதிரிதான் நடக்கிறதுபோலும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் ஏமாற்றமடைந்தேன். நான் ஓர் துரதிர்ஷ்டசாலி—ஆதலால் எனக்கு அம்மாதிரி நடக்கவில்லை—இனிமேலும் நடக்காது. நன்றாக இரும்புப் பிடி போன்ற ஒரு கை என்னைப் பிடித்துக்கொண்டதாக உணர்ந்தேன். யமதூதனோ என்று பயந்தேன். ஆனால் அன்று—அன்று. போலீஸ் சேவகன். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம். ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. அவர் கையைப் பிடித்துக்கொண்டு முன்னே செல்ல நான் செம்மறி யாட்டைப்போல் தலைகுனிந்துகொண்டு எங்கு போகிறேன் என்று கூடத் தெரியாமல் பின்னே போய்க்கொண்டிருந்தேன். ஒவ்வொரு தெருவாகக் கடந்து கடைசியில் போலீஸ் ஸ்டேஷன் வந்து சேர்ந்தோம்.

அங்கே சப் இன்ஸ்பெக்டரும் இன்னும் யாரோ ஒருவரும் உட்கார்ந்திருந்தார்கள். மேஜையின் மீது என்னமோ பிளேட்டுகளும், டம்ளர்களும் சோடா புட்டிகளும் வைத்திருந்தன. என்னை அழைத்துக்கொண்டுபோன போலீஸ் சேவகன் நடந்த கதை முழுதும் சொன்னான். சிவப்புத் தலைப் பாகைக்காரர் கதை கேட்டுக்கொண்டே பிளேட்டுகள் டம்ளர்கள் முதலியவற்றைக் காலிசெய்தார்.

கொஞ்ச நேரம் என்னையே பார்த்து பிறகு, சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்து; "ராமு! இவன் யார்?.........சரி, நீ இந்த மேஜையைச் சுத்தம் செய்!"

"உன் பெயரென்ன?"

"ராமானுஜம்"

"என்ன குற்றம் செய்தாய்?"

எனக்குச் சிரிப்பும், ஆச்சரியமும் உண்டாயின. இதுவரை அச்சேவகன் சொல்லியதெல்லாம் ஆற்றில் கரைத்த புளியாய்விட்டதே என்று விசனப்பட்டேன்.

"நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே."

"என்ன?" என்று ராமனின் கையிலிருந்த தடியைப் பிடுங்கி ......அடித்த அடிகளால் மேலே காயங்கள் இல்லாவிடினும் உன் எலும்புகளெல்லாம் தூள் தூளாகி விட்டன.

"அப்பனே! ஆண்டவா! ஒரு மணி நேரத்திற்கு முன்பே உன் திருவடிகளை அடைய நினைத்த எனக்கா இக்கஷ்டங்களை யெல்லாம் உண்டாக்குகிறாய்? இன்னும் என்னைப் பரீக்ஷித்து முடியவில்லையா? இத்தடியடியால் என்னைச் சித்திரவதை செய்யாவிட்டால், ஒரே தடவையில் அத்துப்பாக்கியாலாவது எனது உயிர் போகும்படி செய்யக்கூடாதா?" என்று சொல்லிக் கொண்டே கீழே விழுந்தேன்.

* * * *

"ஐயா! காயுகோசவர்களே சர்க்கின் வருகிறார்."

அவ்வார்த்தையைக் கேட்டார்களோ இல்லையோ அங்கிருந்த சேவகர்களும், சப் இன்ஸ்பெக்டரும் ஆகிய எல்லாரும் உள்ளே ஓடி ஒவ்வொரு அறையில் மறைந்துவிட்டார்கள்.

வந்த மனிதர் கம்பீரமான தோற்றமுடையவர். முகத்தில் சாந்தம் தாண்டவமாடுகின்றது.

என்னை ஒருதடவை கூர்ந்து பார்த்தார். எப்பொழுதோ பார்த்த முகத்தைப்போலவே இருக்கிறதே யொழிய இன்னார் என்று கண்டுபிடிக்க என்னால் முடியவில்லை. ஆனால் வந்தவருக்கு என்னை அடையாளம் தெரிந்து

விட்டதுபோல் உணர்ந்தேன். அந்த அன்பை வெளிப்படுத்துதற்கு வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்து,

"இம்மனிதன் என்ன குற்றம் செய்தான்?"

"......................................"

சப் இன்ஸ்பெக்டரால் ஒன்றும் நடவாதென்றறிந்து ஆத்திரத்தோடு என் கதை முழுவதையும் முதலிலிருந்து நடி—அடி—வரை பொருத்தமாகச் சொன்னேன்.

வந்த மனிதர் கண்ணீரை அடக்க முடியாதவராய் என்னை வந்து பலமாகக் கட்டித்தழுவிக்கொண்டார்.

"அப்பா! உங்களுக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்த பாவி நான். மதம் மாறின பிறகு தங்களைப் பார்க்க எனக்குத் தைரியம் வரவில்லை. என்னை மன்னிப்பீராக..." என்று என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு அவனது உஷ்ணமான கண்ணீரால் என் கன்னங்களை நனைத்தான்.

மறு நிமிஷம் சப் இன்ஸ்பெக்டர் வந்து என் இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டு, "இவை கைகளல்ல; கால்கள். சர்க்கிள் அவர்கள் தங்களுடைய குமாரரென்று இப்பொழுதுதான் அறிந்தேன். என்னைக் காப்பாற்ற வேண்டும்............" என்று ஏதேதோ சொல்லிக் கொண்டு ஓர் பக்கமாக நின்றார்.

எனது கண்களை என்னால் நம்பமுடியவில்லை. இவ்வளவு காலத்திற்குப் பிறகு எதிர்பாராதபடி பெற்ற மகனைச் சந்தித்ததற்கு ஓர் சந்தோஷம். வேறு மதத்தில் சேர்ந்துவிட்டானே என்ற ஓர் வருத்தம்—ஆகிய இரண்டும் என்னை ஒரே சமயத்தில் தாக்கின. கல்வி யறிவற்ற அந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்தால் உண்மையாகவே பரிதாபமா யிருந்தது. நான் கனவுதான் காண்கிறேனோ அல்லது விழித்துக்கொண் டிருக்கிறேனோ எனக்கே தெரியவில்லை. தொண்டை கம்மியதால் பேச்சு வெளிவரவில்லை.

"என் ஞா—ன—சே—க—ர—ா!"

மகிழ்ச்சிக் கண்ணீரை என் கொழு கொம்பின் தலையில் உதிர்த்தேன்.

விசித்திர விநோதம்

டெலிபோனில் டாக்டருக்கு அவசரச் செய்தி வருகிறது.

"ஐயோ! குழந்தை ஒரு பென்சிலை விழுங்கி விட்டது."

டாக்டர்:—"நான் வர இன்னும் அரைமணி நேரம் செல்லும். அதுவரை என்ன செய்யப் போகின்றீர்கள்?

செய்தி:—"அதுவரை பவுண்டன் பேனாவினால் எழுதிக் கொள்கிறேன்."

***

மனைவி:—(கணவனுக்கு சிகிச்சை செய்ய வந்திருக்கும் டாக்டரிடம்.)

"நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். அவருக்கு குணமாகி விட்டால் தேர்தலில் உங்களுக்குப் போட்டியாய் வராதபடி நான் பார்த்துக் கொள்கிறேன்."

***

உபாத்தியாயினி:—கமலா! …ர்கதம் என்றால் என்ன? நீ பார்த்திருக்கிறாயா?

கமலா:—இது தெரியாதா? …ரக்தத்தை எங்கள் கிளாஸில் பார்த்திருக்கிறேனே.

மோட்டார் பஸ் கண்டக்டர் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எதிரில் நின்று கொண்டு "மயிலாப்பூர் அடையார்" என்று கத்திக் கொண்டிருந்தான். ஜனங்கள் பஸ்ஸில் நிரம்பினூர்கள். பஸ்ஸும் புறப்பட்டு பாதிதூரம் சென்றது. வழியில் டயர் பர்ஸ்டு ஆகி வண்டி நின்றுவிட்டது. ஜனங்கள் எல்லாரும் வண்டியை விட்டு கீழிறங்கி தங்கள் கட்டணங்களை திருப்பி கொடுக்கும்படி கேட்டார்கள்.

பஸ் கண்டக்டர்:—என்ன ஐயா! நான் தான் முன்னமே, சொன்னேனே "மயிலாப்பூர், அடையார்" என்று. இப்போது எப்படி காசு கேட்கிறீர்கள் போங்கள். வந்தவழியே என்றான்.

பிரயாணிகள் நடந்து சென்றே வீடடைந்தார்கள்.

***

மகள்:—"அப்பா இன்றைக்குப் பெரு சந்தோஷமாக ஆபீசுக்குப் போகிறார்."

தாய்:—"சரிதாண்டி. நான் இன்றைக்குத் தீபாவளிச் சேலையைப்பற்றி அவரிடம் ஞாபகப்படுத்த மறந்து விட்டேன்."

***

கடைத்தெருவில் ஒரு கனவான் மணி பார்க்கும் பொருட்டு ஒரு கடை எதிரில் நின்றார்.

வியாபாரி, (சற்று செவிடு) "என்னுங்க சார் வேணும்?"

கனவான் "ஒன்றும் வேண்டாம்."

வியாபாரி "அதுங்களா ஜாஸ்தியாய் இருக்கு. எவ்வளவு வேணும். ரொம்ப நயமாய்த் தரேன்.

***

பெரியவர்:—பையா உன் பெயர் என்ன?

பையன்:—என் பெயர் எனக்கே தெரியாது. எங்கள் அம்மா சில சமயங்களில் "ஏ கண்மணி, முத்தே" என்றும் மற்றும் சில சமயங்களில் "கட்டையிலே போறவனே கழிச்சல்லே போ" என்றும் சொல்லுகிறாள். எங்க அப்பாவோ "ஏ படவா, ராஸ்கல், கம்மனாட்டி" என்றும் சில சமயங்களில் "ஏ சுப்பிரமணியா என்றும்" கூப்பிடுகிறார். இவைகள் எல்லாம் என் பெயரே என்றான்.

***

தாயார் தன் பையன் வயிற்றிலே சோற்றைவைத்து ஒட்டிக் கொள்வதைப் பார்த்து விட்டு, "ஏண்டா குழந்தை சோற்றை மேலே ஒட்டவைக்கிறே" என்றாள்.

பையன்:—நீ தான் வவுத்திலே சோறு ஒட்டமாட்டேன்கிறது என்று சொன்னயே! அதனால் தான் என்றான்.

தந்தை:—கோவலன் நாடகம் பார்த்தனையே! அதனால் கொண்ட கருத்து என்ன?

மகன்:—கோவலனைப் போல் ஷோக்கா யிருக்க வேண்டும் அவனைப்போல் திருட்டு கேஸில் அகப்படக் கூடாது.



***

காதலன்:—நான் இறந்தாலும் உன்னை மறக்க மாட்டேன்.

காதலி:—தாங்கள் மறந்தாலும் மறந்து விடுங்கள். அதனால் எனக்காக இறந்து விட வேண்டாம்.

***

பாதிரியார்:—(புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற வீரசைவரைப் பார்த்து இன்று என்னுடைய வீட்டுக்கு விருந்துக்கு வாரும்.

வீரசைவர்:—(பாதிரியார் வீட்டுக்குப்போய், முட்டை பொரியலையும், மாமிச துண்டுகளையும் சாப்பிட்டுக் கொண்டே) ஞானதந்தையே! தங்கள் மார்க்கம் இவ்வளவு ருசியா யிருக்கு மென்று தெரியாது. தெரிந்திருந்தால் முன்னாடியே சேர்ந்திருப்பேனே!

***



(கதர் வஸ்திரங்கள் திருடி குற்றஞ் சாட்டப்பட்டவனிடம்)

நியாயாதிபதி: "குற்றவாளி யென்று ருசுவாகி விட்டது. நீ என்ன சொல்லுகிறாய்?

குற்றவாளி:—"எஜமான்களே! நான் சுதேசியத்தையே ஆதரித்தேன் என்பதைச் சற்று கவனிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்."

***

தாய்:—ஜானகி! மீனை நன்றாகக் கழுவித்தானே கறி சமைத்தாய்?

ஜானகி:—இல்லையம்மா! அது தண்ணீரில்தானே கிடந்தது; ஏன் கழுவ வேண்டும்.

எறும்புப் புற்றில் காட்டு மனிதர் :—அமெரிக்காவில் எறும்புப் புற்றுகளில் காட்டு மனிதர் பலர் வசித்து வருகின்றனராம். அப் புற்றுகள் அவ்வளவு வலிமையாகவும், பெரிய குடும்பங்கள் வசிக்கக்கூடியனவாகவும் இருக்கின்றனவாம்.

***

மகளிர் நடத்தும் பத்திரிகை:—ஜப்பானில் மகளிர் நடத்தும் பத்திரிகைகள் நூற்றுக்கு இருபது விகிதம் இருக்கின்றனவாம். விஞ்ஞான சாஸ்திரம், பொருளாதார சாஸ்திரம், சமூக முன்னேற்றம், தேசிய முன்னேற்றம் முதலிய உயரிய நோக்கங்களைக் கொண்டே அப்பத்திரிகைகள் பெரும்பாலும் வெளியாகின்றனவாம். இப் பத்திரிகைகளுக்கு ஏராளமான சந்தாதாரர்கள் இருக்கின்றனராம்.

***

வருடத்தில் 1200 விஞ்ஞான நூல்கள் :—இவ்வருடத்தில் பிரான்ஸ் நாட்டில் 1200 விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான நூல்கள் வெளியாகியிருக்கின்றன. இச்சிறந்த வேலைக்குச் சர்க்கார் 7½ கோடி பிராங்கு பொருளுதவி யிருக்கின்றனர். இதுபோன்றே ரஷியாவிலும் விஞ்ஞான வளர்ச்சிக்காக இவ்வருடம் 10 லக்ஷம் ரூபிள்கள் சர்க்கார் வழங்கியிருக்கின்றனர்.

***

பெண்களுக்காகத் தனி கோர்ட்டு:—ஐக்கிய மாகாணத்தில் சிறு பெண்களின் குற்றங்களை விசாரணை செய்வதற்காக ஒரு தனி பெஞ்சுக் கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குக் கௌரவ மாஜிஸ்திரேட்டுகளாகப் பெண்கள் சிலர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் அவர்களுக்கு இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டின் அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

***

வெள்ளி விழா ஸ்டாம்புகள் :—நமது அரசர் பெருமானுன ஐந்தாம் ஜார்ஜ் அரச பதவியை ஏற்று வருகிற வருடத்தோடு இருபத்தைந்து வருடங்கள் ஆகப் போகின்றமையால், அச்சமயம் வெள்ளி விழா கொண்டாடப்படும். அவ்விழாவின் நினைவுக்குறிக் கடையாளமாக, இந்திய சர்க்கார் விசேஷத் தபால் தலைகள் வெளியிடப் போகின்றனராம். அத் தபால் தலைகளில் ஒரு மாதா கோவில், அமிருதசரஸ் தங்கக் கோவில், ஆக்ரா தாஜ்மஹால், ராமேஸ்வர ஆலயம் ஆகிய படங்கள் பொறிக்கப்படுமாம்.

***

சுருக்கெழுத்தில் வல்ல பெண்மணியார் :—ஸ்ரீமதி எமிலி ஸ்மித் என்பவர், சுருக்கெழுத்து எழுதுவதில் உலகிலேயே புகழ்பெற்று திகழ்கிறார். இவர் நிமிஷமொன்றுக்கு 220 வார்த்தைகள் சாதாரணமாக எழுதுகிறார். சில சமயங்களில் அவர் நிமிஷத்துக்கு 300 வார்த்தைகள்கூட எழுதுகிறாராம்.

பிரசித்திபெற்ற சினிமா நடிகையான சீன மங்கையொருத்தி தனது அழகிய உதடுகளை லட்சம் பவுன்களுக்கு இன்ஷியூர் செய்திருக்கிறாளாம்.

* * * *

லண்டன்மாநகரில் தலை மயிரை வெண்மையாக்கி வளர்க்க விருப்பமுடைய பெண்களின் சங்கமொன்றிருக்கிறதாம்.

* * * *

ரயில் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து, அதன் பாதைகள் எவ்வாறு அபிவிருத்தி யடைந்திருக்கின்றன என்பதை விளக்கும் படமொன்றை ஜெர்மனியில் தயாரித்திருக்கின்றனராம்.

* * * *

ஐரோப்பாவில் டாக்டர் பட்டம் பெற்ற பெண்மணிகள் மட்டும் ஐயாயிரத்துக்கு மேலிருப்பதாக டாக்டர் ரிஜிஸ்டர் வாயிலாகத் தெரிகிறது.

* * * *

நிலக்கரியைக் கொண்டே நூதன கடியாரமொன்று செய்யப்பட்டிருக்கிறதாம்.

* * * *

தென்னாப்பிரிக்காவிலிருந்து ஏழாயிரம் எறும்புகள் பிரிட்டிஷ் மியூசியத்துக்குச் சேகரித்து அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

* * * *

அமெரிக்காவில் மட்டும் ஒரு வாரத்தில் சினிமாப் படக்காட்சியைக் காணச் செல்பவர்கள் தொகை ஒரு கோடியே நாற்பது லட்சமென்று சொல்லப்படுகிறது.

* * * *

மேனாடுகளில் பெண்கள் பலர் பாலைவனப் பறவைகளின் இறக்கைகளை ஆடையாக அணிந்துகொள்கின்றனராம்.

* * * *

உலக முழுதும் கடந்த ஒரு வருடத்தில் 1700 விதமான தபால் தலைகள் வெளியிடப்பட்டிருக்கின்றனவாம்.

* * * *

15 பிரிட்டிஷ் பெண்கள் கொண்ட கிரிக்கட் கோஷ்டியார், ஆஸ்திரேலியா மாதர்களை அப் பந்தாட்டத்தில் தோல்வியுறச்செய்து வெற்றிபெறுவதற்காக ஆஸ்திரேலியா செல்கின்றனர்.

* * * *

ஜப்பானியர் பலவித துறைகளிலும் முன்னேற்றமடைந்து வருவதே போல், அவர்களிடையே மதங்களும் அதிகமாகப் பெருகி வருகின்றனவாம். இப்போது அந் நாட்டில் 500-க்கு மேல் மதங்கள் இருக்கின்றனவாம்.

ஆசிரியர் குறிப்புக்கள்

சமதர்ம வாதிகள் மகாநாடு

காங்கிரஸில் சமதர்மக்கக்ஷி தோன்றியிருப்பது நேயர்களுக்குத் தெரியும். அக் கக்ஷியினர் இப்பொழுது காங்கிரஸில் அதி தீவிர வாதிகளாய் இருக்கின்றனர். இன்னும் அவர்களுக்குப் போதிய பலம் கிடைக்கவில்லை. சமதர்மம் மேனாட்டில் கவர்ச்சியுள்ள கொள்கையாக இருந்து வருகிறது. பாட்டாளிகளான ஏழை மக்களின் அரசியல் ஆதிக்கம் ஏற்பட வேண்டும் என்பதே சமதர்மிகளின் அடிப்படை நோக்கம். எனவே ஏழை—பணக்காரர் என்ற வேற்றுமை கூடாது என்பது அவர்களுடைய வாதம். மேனாடுகளிலேயே இக் கொள்கை இன்னும் அலக்கழிப்பில் இருக்கும்போது இந்தியாவில் அதன் கதியைச் சொல்லவும் வேண்டுமோ? இந்தியா அந்நிய ஆட்சியின் கீழ் இருக்கிறது. அதனால் அநேக கஷ்ட நஷ்டங்களையும் அநுபவித்துக் கொண்டிருக்கிறது. அந்நிய ஆதிக்கத்தினின்றும் இந்திய மக்கள் விடுதலை பெறவேண்டும் என்று காங்கிரஸ் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந் நிலையில் தீவிர உணர்ச்சியுள்ள ஒரு சிலர் அதில் கிளர்ச்சி செய்து கொண்டிருப்பது விரும்பத்தக்கதில்லை. இந்தியா அடிமையாகி இருக்கும் இந் நிலையில் சமதர்ம வாதிகள் இங்கே உள்ள பணக்காரர்களையும் ஆளும் அந்நியரையும் ஏககாலத்தில் எதிர்ப்பது பகற்கனவாகவே முடியும். சென்ற மாதம் பம்பாயில் கூடிய சமதர்ம வாதிகள் மகாநாடு சட்டசபைப் பிரவேசத்தை மறுத்திருக்கிறது. சட்டசபைகளை விட்டுவிட்டு இவர்கள் எந்த வழியில் தங்கள் கொள்கையை நிறைவேற்றப் போகிறார்கள் என்று எமக்கு விளங்கவில்லையே.

அகில இந்திய ஜீவகாருண்ய மகாநாடு

சென்ற மாதம் அகில இந்திய ஜீவகாருண்ய மகாநாடு பம்பாயில் ஸாது வாஸ்வானி தலைமையில் கூடியது. ஜீவகாருண்ய தர்மம் இந்திய நாகரிகத்தில் வேரூன்றிக் கிடக்கிறது என்பதில் ஐயம் இல்லை. நமது நாட்டு ஒழுக்க நூல்களெல்லாம் ஜீவகாருண்யத்தைத் தலைசிறந்த தர்மமாகப் போதிக்கின்றன. அஹிம்ஸையே பரம தர்மம் என்பது ஹிந்து மதத்தின் முழக்கமாகும். புத்த—ஜைன சமயங்கள் ஜீவகாருண்யத்தையே உயிர் நாடியாக மேற்கொண்டிருக்கின்றன. ஏனைய சைவம்—வைஷ்ணவம்—அத்வைதம் போன்ற சமயங்களும் ஜீவகாருண்யத்தையே முதன்மையாக வற்புறுத்திக்கொண்டிருக்கின்றன. ஆனால் இக்காலத்தில் நமது நாட்டு மக்களின் நடைமுறை வேறுவிதமாய்ப் போய்க்கொண்டிருக்கிறது. ஜீவகாருண்யம் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிட்டது என்றே கூறிக்கூறி வருந்தவேண்டியிருக்கிறது. அதாவது மக்கள் வாழ்க்கை முறைக்கும் ஜீவகாருண்யத்திற்கும் சம்பந்தமில்லை என்றே சொல்ல வேண்டும். தெய்வங்களின் பேராலும், சமயங்களின் பேராலும், சாஸ்திரங்களின் பேராலும், மனிதத் தன்மையின் பேராலும் ஜீவகாருண்ய முழக்கம் செய்கின்றோம். ஆனால் அந்தத் தெய்வ—சமய—சாஸ்திர—மனிதத் தன்மைகளின் பேரால் ஜீவ ஹிம்ஸைகளை வெகு தாராளமாய்ச் செய்துகொண்டு வருகிறோம் என்பது கண்கூடு. தெய்வங்களுக்கு என்று பலியிடுவதும், யாகக்

கொடுமைகளைச் செய்வதும், மனிதனை மனிதன் இழிவுபடுத்துவதும் வெகு சகஜமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பெரும்பாலான மக்கள் உயிர்வதை செய்து புலால் உண்பதை வழக்கமாக மேற்கொண்டிருக்கிறார்கள். இவை யெல்லாம் ஜீவகாருண்யத்தின் பாற்பட்டனவா என்று கேட்கின்றோம். மனிதனை மனிதன் அடிமைப்படுத்திச் சுயாலம் சாதித்துக் கொள்வதை நாம் மனிதத் தன்மையாக மதித்துக் கொண்டிருக்கின்றோம். இந்தக் கொடுமைகளை யெல்லாம் ஒழிக்கக் கூடிய காலம் சமீபத்தில் இருக்கும் என்று எம்மால் எண்ண முடியவில்லை. மனிதனுக்குப் புலால் உணவு பொருந்தாது என்று எத்தனையோ நிபுணர்கள் அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய உபதேசங்கள் எல்லாம் கடலிற் கரைத்த பெருங்காயமாகவே இருக்கின்றன. "இக் காலத்தில் மேனாட்டு உணர்ச்சியின் பயனாக மிருகங்கள் மனிதருக்கு உணவாகவே சிருஷ்டிக்கப்பட்டதாகக் கருதுகின்றோம். பகுத்தறிவின்றி அறியாமையால் மிருகங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தவிர்க்க மிருகதினம் என்று ஒரு தினத்தைக் கொண்டாட வேண்டும்" என்று அகில இந்திய ஜீவகாருண்ய மகாநாட்டில் தலைமை வகித்த ஸாது வாஸ்வானி கூறுகின்றார். ஜீவகாருண்ய சீலர்கள் அவரது உபதேசத்திற்கு ஆக்கம் அளிக்கவேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

---

71 மணி நேரத்தில் 11300 மைல்!

எல்லாத் துறைகளிலும் மேனாட்டார் உற்சாகம் காட்டி முன்னேறி வருவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். சென்ற வாரம் லண்டன்—மெல்பரன் விமானப் பந்தயம் நடை பெற்றது. பிரிட்டிஷ் விமானிகளான சார்லஸ் ஸ்காட்டும், காம்பெல் பிளாக்கும் ஏறிச் சென்ற ஆகாய விமானம் முதலில் சென்று வெற்றி அடைந்து விட்டது. இந்த வெற்றி பிரிட்டனுக்கு மிகுந்த பெருமை அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆஸ்ட்ரேலியாவிலுள்ள மெல்பரன் நகரம் லண்டனிலிருந்து 11300 மைல். வெற்றி பெற்ற விமானம் லண்டனிலிருந்து புறப்பட்ட பின் 2 நாள் 23 மணி 18 நிமிஷத்தில் 11300 மைல் தூரத்திலுள்ள மெல்பரன் நகரம் போய்ச் சேர்ந்திருக்கிறது. சராசரி மணிக்கு 119 மைல் வேகத்தில் விமானம் பறந்து சென்றிருக்கிறது. பார்மெண்டியார்—மால் என்ற டச்சுவிமானிகள் இரண்டாவதாகப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களும் பாராட்டுதலுக்கு உரியவர்களே. இந்தப் போட்டி ஆஸ்ட்ரேலியாவில் நடைபெறும் கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாக ஏற்பாடு செய்யப்பட்டது. லண்டனிலிருந்து மெல்பரனுக்கு முன்னதாக வரும் விமானத்திற்கு ஒரு பொற்கோப்பையும் பதினாயிரம் பவுனும் பரிசு தருவதாக ஸர் மாக்பசஸன் ராபர்ட்ஸன் என்பவர் முன் வந்தார். இருபது விமானங்கள் இப்போட்டியில் கலந்துகொண்டன. இவற்றுள் இடைவழியில் ஒரு விமானத்திற்கும் அதை ஓட்டிய விமானிகளுக்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டது வருந்தத் தக்கது. பிரிட்டிஷ் விமானிகள் புகழ் இன்று உலகமெங்கும் பரவி விட்டது. மேனாட்டு மக்களின் உணர்ச்சியும் முற்போக்கும் இன்றைய உலகில் வீறுகொண்டு விளங்குவதை இந்தியமக்கள் சிறப்பாகக் கவனிக்க வேண்டும்.

சிறந்த யோசனை

சென்ற மாதம் சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. சென்னைக் கவர்னர் தலைமை வகித்தார். சென்னைச் சட்டசபைக் காரியதரிசியான திவான் பகதூர் ஆர். வி. கிருஷ்ணையர் புதிய பட்டதாரிகளுக்கு உபதேசம் செய்தார். உயர்தரக் கல்வியின் நோக்கம் என்ன—சர்வ கலாசாலைகளின் நோக்கம் என்ன என்பது விவகாரத்திற் குரிய விஷயம். இதுபற்றி ஒவ்வொரு அறிஞரும் ஒவ்வொரு விதமாகக் கூறி வருகின்றனர். வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடுவதே கல்வியின் நோக்கம் என்று அநேகர் கருதுகின்றனர். நாட்டில் நிலவும் கல்வி யறிவின்மையே அர்த்த மற்ற மூடப்பழக்க வழக்கங்கள் வேரூன்றி யிருப்பதற்குரிய காரணம் என்பதை அவர் எடுத்துக் காட்டி யிருக்கிறார். இந்த அறியாமையை எவ் விதத்திலேனும் கல்வி எறியவேண்டும் என்பது ஸ்ரீமான் கிருஷ்ணையர் ஆவல். தமிழ் ஜில்லாக்களில் மாத்திரம் 2000 உபாத்திமார்களுக்கு மாதம் 30 அல்லது 35 ரூபா வீதம் சம்பளத் திட்டம் வகுத்து வேலை செய்தால் கல்வியின்மை விரைவில் பறந்தோடி விடும் என்று அவர் கூறுகிறார். இதற்கு அரசாங்கத்தார், பாதித் தொகையும் பொது ஜனங்களான தர்மசிந்தை படைத்தவர்கள் பாதித் தொகையும் அளிக்க வேண்டும என்று கருதுகின்றார் பட்டதாரிகளைப் பெருக்கு வதற்கு வீண் செலவு செய்யும அரசாங்கத்தார் இவரது யோசனையைக் கவனிப்பார்களா? பொது மக்களும் அரசாங்கத்தாரும் விரும்பினால் ஸ்ரீமான் கிருஷ்ணையர் ஆசை நிறைவேறும் என்பதில் ஐயம் இல்லை.

சமூகவாழ்வில் பெண்கள் நிலை

மைசூர் சர்வ கலாசாலையின் பட்டமளிப்பு விழா 31—10—34-ல் மைசூர் யுவராஜாவின் தலைமையில் நடைபெற்றது. கலகத்தா சர்வ கலாசாலையின் மாஜி உப அத்யக்ஷரான ஸர் ஹாசன் சுகாவர்தி பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அப்போது அவர் பெண் கல்வியைப் பற்றியும் பெண்களின் சமூக வாழ்வைப் பற்றியும் பேசியது எல்லாரும் நன்கு சிந்திக்கத் தக்கதாகும். பெண்கள் கட்டாயம் படிக்க வேண்டும் என்று ஸர் ஹாஸன் சுகர்வர்தி வற்புறுத்துகிறார். ஆனால் எத்தகைய கல்வியை அவர் பெண்களுக்கு வேண்டும் என்கிறார்? உத்தியோகங்களில் ஆண்களோடு போட்டி போடும் கல்வியை அவர் வேண்டவில்லை. மேனாடுகளிலேயே இந்த முறையான கல்வி புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். பெண் மணிகளின் இயற்கைத் தன்மைக் கேற்ற உத்தியோகங்களை அவர்கள் வகிக்கலாம் என்பதையும் அவர் ஒப்புக் கொள்ளுகிறார். உபாத்தியைத் தொழில், டைப் அடித்தல் போன்றவைகளைப் மேற்கொள்ளலாம் என்றே அவர் கருதுகிறார். ஆனால் "இன்பமாக இல்லறம் நடத்துவதே பெண்களுக்கு இயற்கைப் பொருத்தம்" என்று அறிஞர் சுகர்வர்தி கூறுவதை அதிகப் பெண்ணுரிமை வாதிகள் கவனிக்க வேண்டும என்று விரும்புகின்றோம்.

நீல அறையின் மர்மம்

(எல். எஸ். [illegible].)

(319-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான்:—எப்படியாவது நீ இவ்வீட்டி லிருக்கிற வரையில் இந்த நீல அறையின் மர்மத்தைக் கண்டு பிடிக்காம லிருக்கக் கூடாது. இது போகட்டும்; நீ யெப்பொழுதும் பாலாமணி யம்மாளுடன் இவ்வீட்டில்தா னிருக்கிறாயோ?

மீனா:—"என்னுடைய தந்தை யிறந்த நாள் முதல் நானிங்கேயேதா னிருக்கிறேன்" என்றான்.

ஆகவே! மீனா தந்தை யற்றவன்!......இதிலிருந்து இவனுடைய தகப்பன் பூர்ணலிங்க முதலியாரல்ல வென்றறிந்துகொண்டு ஆச்சரிய மடைந்தேன்.

என் கட்டழகியை என் கரங்களில் தூக்கி அவளிடம் சகல உண்மைகளையும் தெரிவித்து நானே அவளுக்கு மாலை சூட்டினவ னென்றும் நான் அவள் பேரில் கொண்டிருக்கும் காதலுக்குக் கரையில்லை யென்றும் சொல்லி அவளுக்கு ஒரு அன்பு முத்தம் கொடுத்து ஆனந்தமடைய வேண்டு மென்பதாக என் மனத்தில் ஒருவித எழுச்சி உண்டாயிற்று. ஆயினும இது சமய மல்ல வென்று என் மனோ வெழுச்சியைத் தடுத்துக் கொண்டேன். எனக்கும் மீனாவுக்கும் இடையே யிருக்கும் மர்மங்கள் தீரும் வரையில் நான் பொறுமை யுடனே காத்துக் கொண்டிருக்க வேண்டும்; இன்றேல் தீமை விளைய வழி யிருக்கின்றதே தவிர, நன்மை யுண்டாவது சந்தேகமே!

சபாபதி முதலியார் எங்கே? அவன் யார்? அவனுக்கும் மீனாவுக்கும் என்ன விதமான சம்பந்தம்?

இம்மனிதனைக் கண்டு பிடித்து இவனுடைய பழைய ஜீவியத்தை விவரமாய்த் தெரிந்து கொண்டால் மீனாவைச் சுற்றியிருக்கும் ஆபத்துக்களுக்குப் பரிகாரம் ஏற்படலாம் என்று என் மனம் எண்ணலாயிற்று.

இவ்வாறு நான் எண்ணிக்கொண் டிருக்கையில் பாலாமணியம்மாள் அறைக்குள் நுழைந்து வெயிலில் போய்விட்டு அயர்வினால் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தாள். "அப்பப்பா! இந்த ஊரில் வெயில் அசாத்தியமா யிருக்கிறது; சகிக்கவே முடியவில்லை. பூந்தமல்லிக்கும் இந்த ஊருக்கும் எவ்வளவு

வித்தியாச மிருக்கிறது" என்று நாற்காலியிலுட்கார்ந்து கொண்ட பின் பாலாமணி யம்மாள் என்னைப் பார்த்துக் கூறினள்.

"ஆம். உங்களுக்கு மறுபடியும் பூந்தமல்லிக்கே போகத்தான் இஷ்டமென்று தெரிகிறது" என்று சிரித்துக்கொண்டே நான் சொன்னேன்.

"இஷ்டமா? பூந்தமல்லிக்குப் போக ஏற்பாடுகளெல்லாம் செய்து விட்டேனே! நாளையதினம் சாயங்காலம் போகப் போகிறோம் ஏன்? நீங்கள் ஏன் அங்குவரக் கூடாது?" என்று கேட்டாள்.

சற்று முன் இவருக்கு நான் இதைத்தான் சொல்லிக்கொண் டிருந்தேன். "பாலா! டாக்டர் லோக நாதமும் பூந்தமல்லிக்கு வந்தால் எவ்வளவு அழகாகவிருக்கும்" என்று புன்னகையுடன் என்னைப் பார்த்து என் மனையாள் சொல்லினள். இவள் நல்ல மனதுடன் சொல்லுகிறா ளென்றும் நான் பூந்தமல்லிக்கு வரவேண்டு மென்று இவள் இஷ்டப்பட்டுச் சொல்லுவதில் யாதொரு கெடுதலான உட்கருத்தும் கிடையாதென்றும் இவளுடைய சந்தோஷகரமான முகத்திலிருந்து தெரிந்து கொண்டேன். உண்மையாகவே இவள் என்னைக் கூப்பிடுவதற்கு நான் கரைகடந்த ஆனந்த மடைந்தேன்.

"நீங்கள் இவ்வளவு அன்புடன் என்னை யழைப்பதற்காக நான் சந்தோஷப் படுகிறேன்—ஆனால் நான் தற்சமயம் டாக்டர் மல்லையாவின் வைத்திய சாலையை விட்டு எப்படி வர முடியும்!" என்றேன்.

"எப்பொழுதுமே வேலைசெய்ய வேண்டுமோ? ஓய்வு நாட்களில்லாத மனிதனுக்கு சுகம் ஏது? ஆகவே டாக்டர் மல்லையா அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வாருங்கள். இந்த ஒழிந்த நாட்களை வீணாகப் போக்காமலிருப்பதற்கு நான் பாத்தியம்" என்று மிகுந்த அன்புடன் என் மனைவி என்னைப் பார்த்துக் கூறினள்.

மீனள் கூறுவதைக் கேட்கக் கேட்கப் பூந்தமல்லிக்குப் போகவேண்டுமென்றே என் மனம் உறுதி கொண்டது. பூந்தமல்லிக்கு நான் போக இஷ்டப் படுவதின் இரகஸியக் கருத்து நமது நேயர்கள் அறிவார்கள்......கடைசியாக நான் அவ்விருவரையும் பார்த்து "நீங்கள் முன்னல் போங்கள். நான் இன்னும் ஒருவாரம் அல்லது பத்து நாட்களில் அங்கு கட்டாயம் வந்து சேருகிறேன்" என்று சொன்னேன்.

நான் இவர்களிட மிருந்து விடைபெற்றுக் கொள்ளும்போது பாலாமணி யம்மாளைப் பார்த்து, "நீங்கள் இப்பொழுது இந்த வீட்டை விட்டுப் போய் விட்டால் டாக்டர் நடேசன் இனிமேல் இங்கு எப்படி வர முடியும்? அவர் வராமற் போனல் நீல அறையின் மர்மம் கண்டு பிடிக்காமலே போய் விடுமே?" என்று கேட்டதற்கு அந்தம்மாள், "அல்ல, அல்ல. நாம் இங்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் டாக்டர் நடேசன் எப்பொழுது வேண்டுமானலும் இங்கு வந்து நீல அறையைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம் வீட்டின் சாவியையே அவரிடம் ஒப்பித்து விட்டேன். அவர் சொல்லுகிறபடி நடக்கவேண்டு மென்பதாக வேலைக்காரர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். டாக்டர் நடேசனும், நாங்கள் திரும்பி வருவதற்குள்ளாக நீல அறையின் மர்மத்தைக் கண்டு பிடித்து விடுவதாக உறுதி கூறியிருக்கிறார்" என்றாள்.

அப்பால் நான் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வந்து விட்டேன். என் மனைவியை விட்டுவிட்டு வருவதற்கே என் மனம் இஷ்டப் படாமலிருந்தது. இருந்தாலும் கஷ்டங்களெல்லாம் தீரவேண்டு மென்பதே என்னுடைய உட்கருத்து; ஆனபடியால் பூந்தமல்லியில் யார் யார் இருக்கிறார்களென்றும் இம்மர்மங்களுக்கு ஆதாரங்கள் அங்கு அகப்படலா மென்றும் என் மனதில் தோன்றிய படியால் இவர்கள் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை முன்னமேயே செய்து கொள்ளட்டு மென்பதாக சீக்கிரம் விடைபெற்றுக் கொண்டு வந்து விட்டேன்.

நான் நேராக மல்லையாவின் வைத்திய சாலைக்குப் போகவில்லை; ஆனல் ஒரு ரிக்ஷாவி லேறிக்கொண்டு எழும்பூர் சென்று டாக்டர் நடேசன் பங்களாவை யடைந்தேன். நான் போகும்பொழுது டாக்டர் நடேசன் தன்னுடைய வைத்திய சாலையில் ஏதேதோ ஆராய்ச்சிகள் செய்துகொண் டிருந்தார். அந்த அறையில் ஒருவித விஷப்புகையே சூழ்ந்து கொண்டிருந்தது. இப்புகை தனக்குக் கெடுதல் செய்யா வண்ணம் அவர் வேறு உபாயம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்று என் மனதிற் பட்டது. என்னைக் கண்டதும் டாக்டர் நடேசன், "லோகநாதம்! இங்கு வராதீர்கள்; நல்ல காற்று இல்லை. எதிரிலேயுள்ள அறையிலிருங்கள். இதோ ஒரு நொடியில் நான் வந்து விடுகிறேன்" என்று சொன்னர். நான் இதைக் கவனிக்காதவன் போல் அவரிருந்த அறைக்குள் தைரியமாக நுழைந்தேன். அந்த அறையில் மூச்சு விடுவதே மிக்க கஷ்டமாயிருந்தது இரண்டு மூன்று தடவை இருமினேனதலால் நான் என்னுடைய சட்டை ஜேபியிலிருந்து கைக்குட்டையை யெடுத்துக் கொண்டேன். இக்கைக்குட்டையை டாக்டர் நடேசன் தன்னிடம் கொடுக்கும்படி சொன்னர். நான் அதை யவரிடங் கொடுக்க அவர் மஞ்சள் நிறமாயுள்ள மருந்து கொஞ்சம் எடுத்து இதைக் கொஞ்சம் தண்ணீரில் கலந்து கைக்குட்டையை இதில் தோய்த்து என்னிடம் கொடுத்து விட்டார். இக்கைக்குட்டையை எனது வாய்க்கருகில் வைத்துக் கொண்டிருக்கும்படி சொன்னர். இதன்படி செய்யவே அவ்வறையிலுள்ள விஷப்புகை என்னை யொன்றும் செய்யவில்லை.

டாக்டர் நடேசன் என்ன ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தா ரென்று எனக்குப் புலப்படவில்லை. அவர் செய்வதை நான் மௌனமாகப் பார்த்துக் கொண்டே நின்றேன்.

ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. பிறகு அவர் அவ்வறையை விட்டு வேறு ஒரு அறைக்குள் என்னை யழைத்துக்கொண்டு போனர்.

டாக்டர் நடேசன்:—நீங்கள் பாலாமணி யம்மாள் வீட்டுக்குப் போயிருந்தீர்களோ?

நான்:—போயிருந்தேன். ஆனல் எனக்கு முன்னல் நீங்கள் அங்கு போயிருந்தீர்களே? இன்றைக்கு நீங்கள் கண்டு பிடித்த தென்ன?

டாக்டர் நடேசன்:—ஒன்றுமில்லை.

நான்:—இப்பொழுது நீங்கள் ஆராச்சி செய்து கொண்டிருக்கிறீர்களே? இவ்வாராய்ச்சி எதன் பொருட்டாக?

டாக்டர் நடேசன்:—நீல அறையின் மர்மத்திற்காகத்தான் இந்த ஆராய்ச்சியைச் செய்து கொண்டிருக்கிறேன். ஆனல் இது வரையில் எனக்கு ஒன்றும் புலப்படவில்லை.

நான்:—இன்றைக்கு நீங்கள் நீல அறைக்குள் நுழைந்துவிட்டு வெளியே வந்தபோதும் அந்த மயக்கம் உங்களுக்கு உண்டாயிற்றல்லவா?

டாக்டர் நடேசன்:—உண்டாயிற்று; ஆனால் வெகுசீக்கிரம் மயக்கம் தெளிந்து விட்டது.

நான்:—நீங்கள் தானே இன்ஜெக்ஷன் செய்து கொண்டீர்களோ?

டாக்டர் நடேசன்:—இன்றைபதினம் இன்ஜெக்ஷன் செய்ய வேண்டிய மருந்தையே வாயின் வழியாகச் செலுத்திவிட்டேன். இன்ஜெக்ஷனில் மயக்கம் தெளிந்தது போல் இந்த வழியிலும் மயக்கம் தெளிந்துவிட்டது.

நான்:—இந்த மயக்கம் உங்களுடைய இன்ஜெக்ஷனால் தெளிந்து போகிறதனால் இது எப்பேர்ப்பட்ட மயக்கமென்று இன்னமும் உங்களுக்கு விளங்கவில்லையா?

டாக்டர் நடேசன்:—இன்னும் விளங்கவில்லை; அதுதானே கஷ்டமாயிருக்கிறது.

நான்:—நீல அறைக்கு வந்து விட்டுப் போன மர்ம ஸ்திரீ யாரென்றும் உங்களுக்கு இன்னும் விளங்கவில்லை?

டாக்டர் நடேசன்:—அவளைக் கண்டுபிடித்து விட்டால் அப்புறம் கஷ்டமே கிடையாது.

நான்:—என்னைப் பூந்தமல்லிக்கு வரும்படியாக பாலாமணி யம்மாள் சொல்லியிருக்கிறாள். நானும் ஒரு வாரத்தில் வருவதாகக் கூறியிருக்கின்றேன். நான் அங்கு போவது உங்களுக்கு இஷ்டந்தானே?

டாக்டர் நடேசன்:—நீங்கள் இங்கு இருந்தால் ஏதாவது நன்மை யேற்படலாம். இந்த நீல அறையின் மர்மத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் நாமிருவரும் இவ்விஷயத்தில் ஒத்து உழைக்க வேண்டும்.

நான்:—எப்படி?

டாக்டர் நடேசன்:—இந்த விஷயத்தில் நாம் நினைப்பதைவிட அதிக மிருக்கிறது. இம்மர்மத்தைத் துலக்கப் பிரயாசைப் படுவதில் நமக்கு என்னென்ன ஆபத்து நேரிடுமோ நமக்கு இப்பொழுது ஒன்றுந் தெரியவில்லை. மீனாளைக் கொலை செய்துவிடவே சிலர் இவ்வளவு தந்திரமான சூழ்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். நீல அறையின் மர்மம் பேயினாலாவது அல்லது பிசாசினாலாவது உண்டானதல்ல! கொடிய மனிதர்களே அதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.....மேலும் லோகநாதம்! மீனாளுக்குத் தன்னை வந்து பார்த்துவிட்டுப் போன மர்ம ஸ்திரீ யார் என்பதாகத் தெரியுமென்றும் ஆனால் இதை யவள் யாது காரணத்தாலோ நம்மிடம் சொல்ல பயப்படுகிறாளென்றும் எனக்குத் தோன்றுகிறது.

நான்:—நான் பூந்தமல்லிக்குப் போகிறேன்; ஒருகால் இதன் உண்மையெல்லாம் அங்கு தெரியலாகும்.

டாக்டர் நடேசன்:—அங்கு உண்மை தெரியலாமென்று நீங்கள் சந்தேகப் படுகிறீர்கள்; ஆனால் இங்கே சென்னையில் கண்டுபிடிக்க முடியாத உண்மை வேறெங்கும் அகப்படாது என்று நான் நிச்சயமாய்க் கூறுவேன். நீல அறையின் மர்மம் இன்னதென்று தெரிய வேண்டுமாயின் நாம் இவ்வூரிலேயே தான் சேர்ந்து வேலை செய்யவேண்டும். லோகநாதம்! இந்த மீனாள் யார் என்று நீங்கள் இன்னமும் எனக்குத் தெரிவிக்க வில்லையே?

நான்:—இவள் தாய் தந்தையற்றவள்! தன் தந்தையின் சகோதரியாகிய பாலாமணி யம்மாளுடன் வசித்துக் கொண்டிருக்கிறாள்.

டாக்டர் நடேசன்:—அப்படியானால் இந்த மீனாளுக்குச் சொந்த வீடு என்பது இல்லை?

நான்:—சொந்த வீடு இல்லை யென்று ஏன் நினைக்கிறீர்கள்?

டாக்டர் நடேசன்:—சொந்த வீடு இருக்காதென்று சாதாரணமாக நினைத்தேன். இன்னும் அவளுக்கு ஒரு காதலன் உண்டு என்றும் தெரிந்து கொண்டேன்.

நான்:—இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

டாக்டர் நடேசன்:—எல்லாம் என்னுடைய ஆராய்ச்சியினாலேயே நான் கண்டு பிடித்தேன்!......நேற்றிரவு சகல உண்மைகளையும் நான் அறிந்து கொண்டேன்.

நான்:—எப்படி?—என்று கேட்டேன்.

இதற்கு டாக்டர் நடேசன் புன்னகை செய்துவிட்டுச் சும்மா யிருந்தாரே யொழிய எனக்குச் சரியான பதில் சொல்லவில்லை......இவ்விதம் இந்த சமயத்தில் அவரைக் கேட்காமல் விட்டுவிட்டால் அப்பால் அவருக்குத் தெரிந்த உண்மைகளை யறிந்து கொள்வது மிக்க கஷ்டமென்று எனக்குத் தோற்றியபடியால் நான் உடனே டாக்டர் நடேசனைப் பார்த்து "பாலாமணியின் நடத்தையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

டாக்டர் நடேசன்:—பாலாமணி யம்மாள், இப்பெண் மீனாள்—இவ்விருவரையும் நம்பக் கூடாது. இருவரும் ஏதோ சில ரகசியங்களை வெகு சாமர்த்தியமாகக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

நான்:—மீனாளின் பேரில் நீங்கள் இவ்வபிப்பிராயங் கொள்ளக் காரணமென்ன?

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பவஞு கார்த்திகைமீ—கலியுகாதி 5036, சாலிவாகனம் 1857,
பசலி 1344, கொல்லமாண்டு 1110, ஹிஜரி 1353,
இங்கிலீஷ் 1934ஞு நவம்பர்மீ—டிசம்பர்மீ

கார்த்திகை	நவம்பர்மீ	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	16	வெள்	தச[illegible]3-15	பூர35-13	சித்60	[புண்யகாலம்,கரிநாள் முடமுழுக்கு, விஷ்ணுபதி
2	17	சனி	ஏகா19-10	உத்32-55	சி32-55ம	சர்வ, பீஷ்ம பஞ்சக விரதம்
3	18	ஞா	து15-30	ரே31-3	அ31-3சி	யோகீஸ்வர த்வாதசி
4	19	திங்	திர12-28	அஸ்29-55	சித்60	வைகுந்த சதுர்த்தசி
5	20	செவ்	ச○ 0-20	பர29-45	சித்60	கிருத்திகை தீபம், (சில ஆலயங்களில்)பௌர்ணமி,சிவ தீபம், வைகானஸ தீபம்
6	21	புதன்	பௌ9-15	கி✱30-40	அ30-40சி	கிருத்திகை, விஷ்ணு தீபம்
7	22	வியா	பிர9-35	ரோ32-58	மர60	
8	23	வெள்	துதி11-28	மிரு36-43	சித்60	
9	24	சனி	திரி14-50	திரு41-55	சித்60	
10	25	ஞா	சது19-38	புன48-25	சித்60	
11	26	திங்	பஞ்25-33	பூச55-45	சித்60	
12	27	செவ்	சஷ்32-8	ஆயி60	சித்60	
13	28	புத	சப்38-50	ஆயி3-35	சித்60	
14	29	வியா	அஷ்44-55	மக11-10	அ11-10சி	
15	30	வெள்	நவ49-48	பூர17-43	சித்60	
16	1	சனி	தச52-58	உத்22-58	மர60	
17	2	ஞா	ஏகா54-10	அஸ்26-25	அ26-25சி	சர்வ ஏகாதசி
18	3	திங்	து53-28	சித்28-3	பி28-3அமி	வியாதியஸ்தர் குளிக்க
19	4	செவ்	திர50-53	சுவா27-45	சி27-45ம	பிரதோஷம்
20	5	புத	சது46-33	வி25-48	சித்60	மாச சிவராத்திரி
21	6	வியா	●41-23	அ22-30	சி2 -30பி	சர்வத்திர அமாவாசை
22	7	வெள்	பிர34-58	கே18-20	ம18-20அ	மார்க்கசிர சுத்தம்
23	8	சனி	துதி28-13	மூல13-28	சித்60	சந்திர தெரிசனம்
24	9	ஞா	திரி21-18	பூரா7-38	சி7-38அ	கணிதாரம்பம், கடன்தீர்க்க
25	10	திங்	சது14-28	உத்3-18 திரு58-33	மர3-18அ	மாசசதுர்த்தி விரதம், நாக பூஜா, நாக பஞ்சமி
26	11	செவ்	பஞ்8-5	அவி54-18	சி54-18அ	சஷ்டி, ஸ்காந்த சஷ்டி
27	12	புதன்	சஷ்2-13 சப்57-5	சத50-50	சி50-50அ	மித்ர சப்தமி, சூரிய விரதம், அவமாகம்
28	13	வியா	அஷ்52-43	பூர48-8	சித்60	ஏற்றம் ஸ்தாபிக்க
29	14	வெள்	நவ49-23	உத்46-10	சி46-10அ	வியாதியஸ்தர் குளிக்க
30	15	சனி	தச46-53	ரே45-20	ம45-20சி	தனுசுரவி நா-26 8-விநாடி

1934ஞு டிசம்பர்மீ

	1-விருச்-சுக் 21-கன்-செவ் 17-விரு-புத 20-கும்-சனி 25-தனு-சுக்		கே
சனி ராகு			செவ்
	சூரி	பு-சுக் குரு	

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS.
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

பிரெஞ்சு லெட்டர்ஸ் என்னும்

ரப்பர் பெஸ்ஸரிகள்.

கருத்தரித்தலைத் தடுக்கும் பொருட்டுப் புருஷர்கள் உபயோகப்படுவதற்கான ரப்பர் கருவிகள். யாவரும் உபயோகிக்கலாம்.

டஜன் வீத் 1-க்கு ரூ. 1-12-0. நெ. 1. ரூபா 1. நெ. 2. விலை அணா 12. நெ. 3. விலை அணா 10.

ரப்பர் பெஸ்ஸரி.

சாஸ்திர ஆராய்ச்சி செய்து கர்ப்பத் தடைக்கு இன்றியமையாததென்று கருதப்படுவதும் டாக்டர் மேரிஸ்டோப்ஸ் முதலானவர்களால் சிபார்சு செய்யப்படுவதுமான இந்த மெல்லிய பெஸ்ஸரியை எந்த ஸ்திரீயும் கருத்தடைக்காக உபயோகப்படுத்திக்கொள்ளலாம், உபயோகிக்கும் விதம் [illegible] அனுப்பப்படும். விலை ரூ. 2 8 0

போட்டோ ஆல்பம்

பிரான்சு தேசத்தில் உள்ள அழகிய பெண்களை போட்டோ எடுத்து தயாரிக்கப்பட்டது. பங்களாக்களிலும், படுக்கை அறையிலும் சிங்காரிக்கவேண்டிய படங்கள். விதவிதமான காதல் மூட்டும் படங்கள் பற்பல மாதிரியாக நடக்கும் காதல் வேடிக்கைகளையும் போட்டோ மூலத்திற் காணலாம். 12-கொண்ட 1-ஆல்பம் விலை ரூ. 1-14-0

சுகுணநிதி டிபோ, நெ. 1/8, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

வடுவூர் K. துரைசாமி ஐயங்கார் நாவல்கள்.

	பாகங்கள்	ரூ. அ.		ரூ. அ.
பூரண சந்திரோதயம்	4	7—8	காளிங்கராயன் கோட்டை 2 பாகங்கள்	4—0
மதன கல்யாணி	3	4—8	விலாசவதி 2-பாகங்கள்	3—0
சௌந்தரகோகிலம்	3	6—0	பாலாமணி	2—8
திகம்பரசாமியார் பாஷ்யலீலைகள்	2	5—0	மங்கையர் பகட்டு	0–12
வஸந்தமல்லிகா	2	5—0	லீலாவினோத குதூகலம்	2—4
மேனகா	2	3—0	பன்னியூர் படாடோப சர்மா அல்லது மயனுலக மதமயக்கம்	2—4
கனகாம்புஜம்	2	2–12	மிஸ்ஸ் லீலாமோஹினி அல்லது மயன்லாம்	2–12
கும்பகோணம் வக்கீல்	2	3—0	இராஜேந்திர மோகனு	1—4
வித்தியாசாகரம்		1—4	துரைக்கண்ணம்மாள்	2—4
நிவாஸ்லொடபடலின்		0–12	மாயசுந்தரி	0–12
திலோத்தமா		0–12		
மாணிக்கவாசகர்		0—8		
வஸந்தமல்லிகா		1—8		

விலாசம்:— ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும

மகா சந்தனாதித் தைலம்.

அன்பர்களே! வெயிற்காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக் கட்டைச் சத்தினாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான சரக்கு வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின் மேல் செய்யப்பட்டு இப்போது வெளி வந்திருக்கிறது.

நூற்றுக்கணக்கான பணச் செலவின் மேல் தீர்க்கவேண்டிய வியாதிகளையெல்லாம், இந்த சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி யிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ்செய்து வருவதால் கண்ணெரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, கண்டைவிடி, சாலேஸ்வரம், பித்தபாண்டு, காமாலை, அஸ்தி சுரம், கைகால் எரிவு, தேகவெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி, சிரங்குகள், தலைச்சுற்றல், பீனிசம், கபாலசூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாகும்; ஞாபக சக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்துவருவதால் மூளையின் கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, நாடி துடிப்பு, தலைமயக்கம் முதலியவைகளும் நீங்கும்; மறதி ரோகம் அறவே ஒழிந்துவிடும்; பித்தத்தினால் நரைத்த உரோமங்கள் கருமை யடையும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும், பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவைகளையும் நீக்கவேண்டும்.

இதன் விலை 1 சேர் தைலம் அடங்கிய டின் ரூபா 1–12—0

இதன் விலை ½ சேர் தைலம் அடங்கிய டின் ,, 1—0—0

வாத ஜீர்ணபி லேகியம்.

இந்த லேகியத்தை கெச்சைக்காய் பிரமாணம் காலை, மாலை சாப்பிட்டால் அக்னி மந்தம், வயிற்றுவலி, குன்மம், வாதம் முதலிய அநேக ரோகங்கள் நீங்கும். பத்திய விவரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 1. தபால் செலவு வேறு.

விலாசம்:— தனலட்சுமி கம்பெனி,

நெ. 8, வெங்கடேசமேஸ்திரி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.

G. W. M. REYNOLDS.

BOLD TYPE EDITIONS.

		Rs.	As.
Mysteries of the court of London	17 vols.	17	0
Joseph Wilmot	8 ,,	5	0
Ellen Percy	8 ,,	5	0
Mary Price	8 ,,	5	0
Rye House Plot	4 ,,	3	0
Young Duchess	4 ,,	3	0
Omar	4 ,,	3	0
Rosa Lambert	4 ,,	3	0
Margaret ...	4 ,,	3	0
Loves of the Harem	4 ,,	3	0
Massacre of Glencoe	4 ,,	3	0
Virgin's Kiss	4 ,,	3	0
Cannonbury House	3 ,,	2	4
Mysteries of Old London	3 ,,	2	4

		Rs.	As.
Pope Joan ...	3 vols.	1	12
Necromancer	3 ,,	2	4
Wagner, the Wehr Welf	3	1	12
Soldier's Wife	2 ,,	1	8
May Middleton	2 ,,	1	8
Faust ...	2 ,,	1	8
Leila ...	2 ,,	1	8
Robert Macaire	2 ,,	1	4
Mary Stuart	2 ,,	1	4
Seamstress		1	8
Alfred ...		1	8
Grace Darling		0	12
Young Fisherman		0	10
Stories Told by a Gendarme		0	12
Mysteries of Paris by Eugene Sue		1	0

SUPERIOR WATCH CO., P. B. No. 167, MADRAS.

மயிர் போக்கும் சூரணம்

இந்த சூரணத்தை ஜலத்தில் கலந்து. மயிர் போக்கவேண்டிய விடத்தில் தடவி உலர்ந்தபின் உடனே 5-நிமிஷம் பொறுத்து கழுவினால் மயிர் போய் விடும்.

புட்டி 1-க்கு அணா 8.

அற்புத எலக்டிரிக் மோதிரம்.

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது! இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதிறத்தார்களும் உபயோகப் படுத்தலாம் இம்மோதிரத்திற் குள்ளிருக்கும் எலெக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள்

நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும்நோயைகுணப்படுத்திக்கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள்! இம்மோதிரமனது 3-வித லோகங்களைக்கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பட்டிருக்கின்றது. இதை விரலில் அணிந்தவுடன் அதிலிருந்து மின்சாரசக்தி தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளுயன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம், சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாக்ஷிப் பத்திரங்கள் பிரதி தினம் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0

மோதிரம் 3-க்கு ரூ. 3—12—0

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

முதல்தரமான—V. H. R. A Quality

பெருங்காயம்.

அநேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததைத் தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் சம்பிடத்தில் கிடைக்கும். வேண்டுவோர் வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுன்ட் ரூ. 2. } தபாற்கூலி
½-இராத்தல் ரூபா 1—1—0. } வேறு.

மோகினி பரிமள கூந்தல் தைலம்

5 வித இனாம் சாமான்கள் சேர்த்தனுப்பப்படும்.

இந்தத் தைலத்தை கூந்தலில் தடவிக் கொண்டால் இன்றுமலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதுடன் தலைக்கொதிப்பையும் அடக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரவல்லது. விலை அணா 13.

இனாம் சாமான்:-1 சென்டுபுட்டி, 1 பெட்ரூம் படம், 1 ஜவ்வாது பில்லை, 1 கலர் சாந்து, 1 சிறிய கண்ணாடி.

130 சாமான்கள் அடங்கிய பெட்டி

இதன் விலை ரூபா 2-12-0 தான்.

இதன் விலை ரூபா 2-12-0 தான்.

சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை சர்ட் பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச்; 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி விளையாடும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய சீவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு ரூ. 2—12—0.

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

புதிய கொக்கோக வசனம்
(உண்மையான இன்பநூல் இதுவே)

இதைப்போன்ற பலவித புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும், அவை களில் விஷயங்கள் மனதிற் பதியுமாறு எழுதப்படவில்லை. ஆனால் இந்நூலில் ஆண் பெண் இருபாலரும் சிற்றின்ப சம்பந்தமாகவும், இல்வாழ்க்கை சம்பந்தமாகவும் அறியவேண்டிய பல விஷயங்களும், மர்மங்களும் தெளிவான நடையில், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆரும்பதிப்பு வெளியானதாலேயே இதை மக்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்பது தெரிகிறது. சட்டைப் பையில் அடங்கும்படியான அளவு புஸ்தகம் விலை ரூபா 1—0—0, வி. பி. வேறு.

காதலர் கண்டு களிப்புறும் நூல்கள்.

இன்பவாழ்க்கையின் இரகசியம்	2	0	ரதி சாஸ்திரம் ...	1	4	[illegible]
இல்வாழ்க்கையின் இரகசியம்	2	0	சரீர மர்ம சாஸ்திரம் ...	1	0	[illegible]
மணவாழ்க்கையின் மர்மங்கள்	2	4	மதனாதி ரஹஸ்யம் ...	2	0	[illegible]
மாதர் நீதி ...	1	0	ரதிமதனசிருங்கார ரகஸ்யம்	1	0	[illegible]
இல்லற இன்பரகசியம் ...	0	8	மாயாஜால விநோதம் ...	1	0	[illegible]
ஸ்திரீ புருஷ தத்துவம் ...	3	0	மனோவசிய சாஸ்திரம் ...	1	8	[illegible]
மூத்தத்தின் மர்மம் ...	1	8	ஸ்திரீ புருஷ ரகசியம் ...	1	8	[illegible]

விலாசம்:— ஆரியன் புக் டிப்போ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

அயக்காந்த சத்தின் திராவகம்.

இந்தத் திவ்ய ஔஷதம், விஷசுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினாலும் தேகம் மெலிந்து வெளுத்துப் போனவர்களுக்கும், வேறு பல வியாதிகளால் தாக்கப்பட்டு உள மற்றுப் போனவர்களுக்கும், தாது விருத்தி நாட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுவோம். இம்மருந்தை உட்கொள்வதால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீரண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாதுவிருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.

இம் மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, கனி அன்ன மக்களைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆண்பெண் இருபாலரும் எப்பொழுதும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்சு தண்ணீர் அல்லது பசும்பாலில் 10, 12-துளி வரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6,7—துளிகள் வரையிலும் காலைமாலை இருவேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும்பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒருமாதம் சாப்பிடக்கூடிய மருந்து 0-12-0 தபாற் செலவு வேறு.

கருணாநிதி டிபோ, நெ. 1/6 வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

சூதக நிவாரணி மாத்திரை.

ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமல் காலந்தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலே யிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல் மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.

ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1.

(காட்லிவர் ஆயில்) மீன் எண்ணெய்.



இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்பலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், ரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகோசங்களின் ரோகத்தைக் குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

கருவைத் தடுக்கும் ஔஷதம்

இந்த இரகசிய கருவைத்தடுக்கும் ஔஷதம் ஜர்மன் தேசத்தில் செய்யப்பட்டு அநேக பண்டித மேதாவிகளால் பரிசோதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றிருக்கிற படியாலும் நமது தேசத்தில் அளவுக்கு மிஞ்சிய குழந்தைகளைப் பெற்று குடும்பங்கள் கஷ்டப்படுவதை யோசித்தும், சில பலஹீனம்பட்ட தாய்மார்கள் அடிக்கடி கர்ப்பம் தரித்து தனது சரீரம் நொந்து ஹீனதிசை யடைவதைக் கண்ணுற்றும் தற்சமயம் எம்மால் இவ் ஔஷதம் தருவிக்கப்பட்டு விற்பனை செய்து வருகிறோம். உபயோகிக்கும் முறை ஔஷதத்துடன் அனுப்பி வைக்கப்படும். விலை ரூபா 2—0—0.

டேபில் டைம்பீஸ் இனம்!!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனமாகச் சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன் ஜுவல்கள். விலை ரூ. 6-4-0. தபால் கூலி பிரத்தியேகம்.

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

புத்திர சந்தான எண்ணெ

ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
ஏன்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
வளர்மிருந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவைப்போது வித்தைப் புசித்து விடுவதனாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சோரி பற்றி இரத்தங்கட்டி யிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் மேற்படி குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து நிமிரன்று உடைந்து போவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

மதன கோலாகல

தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், அளவற்ற போக நுகர்ச்சியாலும் இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒரு விதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும்.

இதுவன்றி வேறு எந்த நோயினாலுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விர்த்தியை யுண்டாக்கி நரம்புக்கு உறுதியைக்கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டுச் சிறந்த கைபாக செய்பாகங்களால் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

சிவப்பிரகாச பல் பொடி

இந்தச் சிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும், பல்வலி, பல்லில் சொத்தை, ஈறு வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவதுமல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கம கம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் அணா 10.

நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

அயத்தங்கத் திராவகம்

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக் கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போ யிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்மங்களா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலக்குடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இதுவரையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40-நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ரமே யாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளா திருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.
வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

சர்வபடை சம்மாரன்

சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4. தபாற்கூலி வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

பூவேலை தைக்கும் கைமெஷீன்

இவ்வாச்சரியமான மெஷீன் பலவித பூச்சித்திர வேலைகளோடு நேர்த்தியாகத் தைப்பதற்கு மிகவும் அவசியமானது. கொஞ்சநாள் அனுபவத்திலேயே ஸ்திரீ புருஷர்கள் யாவரும் இதை எளிதில் அறிந்து கொண்டு இதன் உதவியால், மெத்தை படுக்கை, படுக்கை உறைகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், ஜன்னலின் திரைச்சீலைகள், குழந்தைகளின் சொக்காய்கள், ஸ்திரீகளின் கவுன்கள், குல்லாய்கள், இவைகளில் பலவித பூச்சித்திர வேலைகளமைத்து கண்ணைக் கவரும்படி செய்யலாம்; சுவற்றில் களி மண்ணால் பலவிதப் பூச்சித்திர வேலைகள் அமைப்பதற்கும் இது மிகவும் சாதனமானது.

ஒவ்வொரு ஸ்திரீக்கும் தங்கள் ஓய்வு நேரங்களில் இது மிகவும் உற்சாகத்தைத் தந்து தங்கள் மனத்திற்கினிய யுக்தியுடன் புதுபுது வேலைப்பாடான பலரக பூவேலை சித்திர வேலைகள் செய்வதற்கு இது மிகவும் அவசியமானது.

வாங்கிப்பார்த்தாலே இதன் அருமை பெருமை விளங்கும். அத்தே நிமிஷத்தில் இதை அறிந்து கொள்ளும்படியான முறையையும் இதனுடன் அனுப்புவோம். பல ஆச்சரியமான வேலைகளைப் பகட்டாகவும் நேர்த்தியாகவும் இதன் உதவியால் செய்து முடிக்கலாம்.

அநேக பள்ளிக்கூடங்களில், மாணவர்களுக்கு இவ்வேலைப்பாடுகளைக் கற்பிக்கும் பொருட்டுத் தருவித்து நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள்.

இதை உபயோகிக்கும் முறை அடங்கிய புஸ்தகம், இம் மெஷீனுடன் கூட பெட்டியில் அடக்கம் செய்து அனுப்பப்படும். விலை ரூ. 2-8-0-தான்.

ராஜலட்சுமி கம்பெனி, நெ. 44, தம்புசெட்டியார் தெரு, மதராஸ்.

சுகபேதி மாத்திரை.

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை திரேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்து கொள்ளலாம். 25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு அணா 6.

யூகலிப்டஸ் ஆயில்.

(சுத்தமான நீலகிரித் தைலம்)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறா, வெட்டுக் காயங்கள், நரம்புச்சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி, முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 ,, 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0.

நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டு பண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா, இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூ. 1.

கள்ள நோய் நிவாரணி.

இது 3-தினத்தில் குணப்படுத்தும்.

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட்டு மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபாற்கூலி வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

மேஹ ராஜ சஞ்சீவி எண்ணெய்.

இந்த எண்ணெயை ஒருமுறை மூன்று நாள் சாப்பிட்ட மாத்திரத்திலேயே, கிரந்தி, மேக தாமரை, மேக நமைச்சல்கள், மேக இரணம், மேகப் புண், கால் கைகளிலே சேரும் மேக துர்நீர், மேக வெடிப்பு எல்லாவகைகளான வெள்ளை, மூத்திர கருவியிலே தோன்றும் பலவித வியாதிகள் தீரும். அநேக காலமாக இருக்கும் வியாதிகளுக்கு ஒருமுறை சாப்பிட்டு, 15-நாள் பொறுத்து, மற்றொரு முறை சாப்பிடவேண்டும். 3-நாள் எண்ணெய், புட்டி 1-க்கு ரூபா 1—8—0; மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது வியாதியின் பூரண நிலவரத்தை தெரியப்படுத்தவும்.

கஸ்தூரி மாத்திரை

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகள் தீரும். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

காப்கியூர் என்னும் க்ஷய அரி.

கபஇருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலுதினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச் செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத்

தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேக வாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும் பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதியைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியதுமாகிய உண்மையான மருந்து.

இதன்விலை ரூபா 1—8—0. தபாற்கூலி வேறு.

[illegible] கம்பெனி, நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.